# பொருளியல் நோக்கு

ஜூன்
1990

# சோஷலிசம் எங்கு செல்கிறது?

பிரத்தியேக கருத்துரைகள்


தயான் ஜயதிலக

ஜேம்ஸ் பெட்ராஸ்

கவ்ரில் பொபோவ்

அபெல் அகன்பேக்யன்

இம்மானுவேல் வலஸ்ரீன்



மக்கள் வங்கி வெளியீடு

# கண்ணோட்டம்

ஏற்கனவே சிலர் அதனை 'வரலாற்றின் முடிவு' என்று அழைக்கத் தொடங்கி விட்டார்கள். சோஷலிசம் செத்துவிட்டதா? இறுதியில் முதலாளித்துவம் வெற்றி கண்டுள்ளதா? இலட்சிய சமூகமொன்றை, கற்பனா உலகொன்றை கண்டறிவதற்கான மனுக்குலத்தின் நீண்டகால தேடுதல் இத்துடன் முடிவுக்கு வந்து விட்டதா?

பெரிஸ்ரோய்கா புரட்சி எம்முன் முக்கியமான பல வினாக்களை எழுப்பியுள்ளது. உருவாகியுள்ள 'புதிய வரலாற்றுக் கட்டத்தை' நாங்கள் சரியாக புரிந்து கொள்ள வேண்டுமானால் இந்த வினாக்களை நாம் சந்தித்துத்தான் ஆக வேண்டும். இந்த மாறுதல் நிகழ்வுப் போக்கினை பல்வேறு நோக்குகளிலும் அணுகும் கட்டுரைகளை இந்த இதழில் தர முயன்றுள்ளோம். இந்த மாற்றங்கள் மற்றும் அவற்றின் பின் விளைவுகள் என்பன குறித்து முடியுமான வரையில் தெளிவான சித்திரமொன்றை வாசகர் முன் வைப்பதே எமது நோக்கமாகும்.

புதிய பொருளாதார சிந்தனையின் முன்னோடியான அபெல் அகன்பேக்யன் தனது கட்டுரையில், சோவியத் யூனியன் அதன் நோயுற்ற பொருளாதாரத்துக்கு புத்துயிரூட்டுவதற்கு எடுத்து வரும் சில முயற்சிகளை விளக்குகிறார். அவரது கூற்றுப்படி, இந்த முயற்சிகளின் நோக்கம், சோவியத் பொருளாதாரத்தை முழு அளவில் உலக பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதாகும்.

மற்றொரு கட்டுரையாளரான கவ்ரில் பொபோவ் சோவியத் நாட்டின் புதிய தலைமுறை தீவிர பொருளியலாளர்களில் ஒருவர். சோவியத் பொருளாதாரத்தின் சில பிரச்சினைப் பகுதிகளையும், அவற்றுக்கான தீர்வுகளையும் அவர் இங்கு முன்வைக்கிறார். மாஸ்கோ நகரின் புதிய மேயர் என்ற முறையில் நடைமுறையில் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் அரச ஏகபோகம், அரச பொருளாதாரம் போன்றன தொடர்பான பிரச்சினைகளையும் அவர் இங்கு தொட்டுச் செல்கிறார்.

உலக அமைப்பு முறைகள் குறித்த தனது கண்ணோட்டத்திலிருந்து மார்க்சிசம் மற்றும் லெனினிசம் என்பன குறித்த பகுப்பாய்வொன்றினைத் தருகிறார் இம்மானுவேல் வலஸ்ரீன். சோஷலிச அனுபவங்களை 'தோல்வி' என்று வர்ணிப்பது பொருத்தமான பதமாக இருக்கமாட்டாது என்கிறார் அவர். ஏனெனில் இவற்றுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடிய வேறு வரலாற்று ரீதியான மாற்று வழிகள் இருந்தன என்பதே அவரது வாதமாகும்.

மத்தியிலும் கூட வர்க்கப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை ஜேம்ஸ் பெட்ராஸ் மீண்டும் வலியுறுத்துகிறார். கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பா முதலாளித்துவ அமைப்பில் ஒருங்கிணைவதானது, ஒரு புதிய சுற்று வட்டத்தை தோற்றுவித்து அதற்குள் வர்க்கப் போராட்டங்களின் எழுச்சிக்கு வழிகோலும் என்கிறார் அவர். ஐக்கிய அமெரிக்கா உலகலாவிய மேலாதிக்கம் குறித்த அதன் திட்டங்களை இன்னமும் கைவிடவில்லை என்பதனை பனாமா மீதான படையெடுப்பு நிரூபித்துள்ளது. ஆகவே மூன்றாவது மண்டலம் அதன் இறைமை, தேசிய சுதந்திரம், விடுதலை என்பவற்றுக்காக மேலும் கடுமையாக போராட வேண்டியிருக்கும் என்பதனை இக்கட்டுரை விளக்குகிறது.

ஐக்கிய அமெரிக்கா கெடுபிடியுத்தத்தில் கண்ட வெற்றி ஆப்கானிஸ்தானிலிருந்தோ அல்லது போலந்திலிருந்தோ வரவில்லை என்றும், அதற்கும் முன்னே 1981 ல் சல்வடோரில் இவ்வெற்றி கிடைத்தது என்றும் தயான் ஜயதிலக விளக்குகிறார். சோஷலிசவாதிகள் இன்று எதிர்நோக்கியிருக்கும் சித்தாந்தரீதியான பிரச்சினைகளை அவர் முன்வைக்கிறார். அத்துடன், சோவியத் யூனியனிலும் கிழக்கைரோப்பாவிலும் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் குறித்து ஒரு புதிய சிந்தனை அவசியம் என்பதனை வலியுறுத்தும் அவர், இது குறித்து நீண்ட வரலாற்று ரீதியான பார்வையொன்று அவசியமென்கிறார். முடிவாக, முழுத் தோல்வி தவிர்க்க முடியாததாக இருக்கும் என்று வாதிக்கும் அவர், என்றாலும் சோஷலிசத்தின் மலர்ச்சி இன்னமும் சாத்தியமே என்பதனையும் சுட்டிக்காட்டுகிறார்.

இறுதியாக, எம்முடையதைப் போன்ற மூன்றாவது மண்டல நாடுகளில், பொருளாதார முன்னேற்றத்துக்கும், உண்மையான தேசிய சுதந்திரத்துக்குமான எமது இரட்டை முனை போராட்டத்தில், கொர்பச்சேவின் புதிய சிந்தனையைப் போலவே, பிடெல் கஸ்த்ரோவின் கொள்கை ரீதியான நிலைப்பாடும் மிக முக்கியமானதாகும்.

விசேஷ அறிக்கை தவிர, பொருளாதாரம் குறித்த சில சிறப்புக்கட்டுரைகளையும் இந்த இதழில் தருகிறோம். 'இலங்கையில் உள்நாட்டு மூலவளங்களை திரட்டுவது தொடர்பான பிரச்சினைகள்' என்ற டப். ஏ. விஜேவர்தனாவின் கட்டுரையின் இறுதிப்பகுதி இந்த இதழில் இடம் பெறுகிறது. அத்துடன் சென்ற இதழ்களிலிருந்து தொடர்ச்சியாக இடம் பெறும் சென்மதி நிலுவை தொடர்பான கட்டுரையும் இந்த இதழில் வெளிவருகின்றது.

# பொருளியல் நோக்கு

மலர் 16 | இதழ் 3 | ஜூன் 1990



மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக் காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
இலங்கை


## உள்ளே


| | | |
|---|---|---|
| அறிமுகம் | 2 | சோஷலிச பொருளாதாரமும் சோஷலிசத்தின் பொருளாதாரமும் |
| விவசாயம் | 22 | சிவப்பு வெங்காயம், பம்பாய் வெங்காயம் உற்பத்தி |
| பொருளாதாரம் | 24 | திறந்த பொருளாதாரமொன்றை வைத்திருப்பதற்கான நியாயங்கள் |

விசேஷ அறிக்கை

| | | |
|---|---|---|
| | 3 | சோஷலிசம் எங்கு செல்கிறது? |
| அடுபெல் அகன்பேக்யன் | 3 | சோவியத் ரஷ்யா உலக பொருளாதார அமைப்புடன் ஒருங்கிணையப் போகிறது |
| கவ்ரில் பொபோவ் | 4 | சோவியத் ரஷ்யா: பொருளாதார பிரச்சினைகளும் அவற்றை தீர்ப்பதற்கான வழிகளும் |
| இம்மானுவேல் வலஸ்ரீன் | 5 | மார்க்சிசம் - லெனினிசம் மற்றும் நவீன உலக அமைப்பில் சோஷலிச அனுபவங்கள் |
| ஜேம்ஸ் பெட்ராஸ் | 9 | சமகால யதார்த்தத்தின் இரு முகங்கள் |
| தயான் ஜயதிலக | 14 | பெரித்ஸ்ரோய்காவும் சோஷலிசத்தின் எதிர்காலமும் |

சிறப்புக்கட்டுரை

| | | |
|---|---|---|
| டப். ஏ. விஜேவர்தன | 27 | இலங்கையில் உள்நாட்டு மூல வளங்களை திரட்டுவது தொடர்பான பிரச்சினைகள் (இறுதிப்பாகம்) |
| டப். ஹெட்டியாரச்சி | 31 | சென்மதி நிலுவை |
| | | கருத்து கோட்பாடு இலங்கை அனுபவம் (3) |


## அடுத்த இதழ்

- பிராந்திய நிர்வாகத்துக்கான அதிகார பரவலாக்கல்
- நிர்வாக எல்லைகளை மீள நிர்ணயித்தல்
- மூன்றாவது உலகில் கடன் சுமையும் பொருளாதார இன்னல்களும்


பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிபரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்துறையும் பொருளாதார அபிவிருத்தியும் ஆகியன பற்றிய அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பனவல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவாகா. இத்தகைய கட்டுரைகள் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களில் நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

# சோஷலிச பொருளாதாரமும் சோஷலிசத்தின் பொருளாதாரமும்

சோவியத் யூனியனும் கிழக்கைரோப்பாவும் இன்று எங்கு செல்கின்றன? சில வருடங்களுக்கு முன்னர் இந்தக் கேள்வி அபத்தமானதாக இருந்திருக்க முடியும். ஒருவரின் அரசியல் மற்றும் சித்தாந்த ஈடுபாடுகளின் அடிப்படையில் இதற்கான விடை உடனே கிடைத்திருக்கும். இறுதியான முடிவு குறித்த விளக்கங்கள் வித்தியாசமானவையாக இருக்கலாம். ஆனால், இந்த போக்கு சந்தேகமில்லாமல் கடந்த 70 வருட காலமாக பல கோடி மக்களின் வாழ்வை வடிவமைத்து வந்துள்ளது.

இனிமேலும் அது அப்படியில்லை. கிழக்கு ஐரோப்பா இப்பொழுது சோவியத் முகாமிலிருந்து பிரிந்திருக்கிறது. பேர்லின் சுவர், ஐரோப்பாவைப் பிரித்த அரசியல், சித்தாந்த மற்றும் பொருளாதார வேலிகளை தன்னுள் அடக்கிக்கொண்டு வீழ்ந்துவிட்டது. சோஷலிச முகாம் இருப்பதனை இப்பொழுது காண முடியவில்லை. சோவியத் யூனியன் பெருமாற்றங்களின் சுழலொன்றில் சிக்குண்டு தத்தளிக்கிறது. அவதானிகளும் மாணவர்களும் மட்டுமன்றி, இதில் பங்கேற்பவர்களும் கூட, குழப்பமுற்று, திகைத்துப் போயிருக்கிறார்கள். நெருக்கடிகளுக்கு மேல் நெருக்கடிகள் வந்து குவிகின்றன. இந்த குளறுபடிகள் நிறைந்த சிக்கலான சூழ்நிலையில் நம்பிக்கையூட்டும் முன்னிகழ்வுகளை காண்பது கடினமாக இருக்கிறது.

சோவியத் யூனியனிலும் சோஷலிச முகாமிலும் நிகழ்ந்து வரும் மாற்றங்கள், நிச்சயமாக, உலக நாடுகள் அனைத்தையும் விதிவிலக்கு எதுவுமின்றி தொடர்ச்சியாக பாதித்து வரும். எமது வாழ்க்கையின் எந்த ஒரு பிரிவிலும் இந்த மாற்றங்களின் பிரதிபலிப்பு இல்லாமல் போகாது. அந்த பின்னணியில் நோக்கும் போது, பெரித்ஸ்ரோய்காகா மற்றும் கிளாஸ்நொஸ்த் என்பவற்றைக்கொண்ட ரஷ்யாவின் இந்த இரண்டாவது புரட்சி, 1917 ம் வருட ரஷ்ய புரட்சியைப் போலவே பாரதூரமான பின்விளைவுகளை கட்டாயம் எடுத்து வரும். அதனால் இந்த மாற்றங்களை விளங்கி, கற்றாய்ந்து, பகுப்பாய்வு செய்வது இன்றைய பொருளியலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் தீர்க்கமான முக்கியத்துவம் மிக்கதாகும்.

இந்த 'கோர்பச்சேவிய புரட்சி' மனித அறிவின் அனைத்துத்துறைகளையும் தழுவியதாக இருக்கிறது. பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் இது மேலும் முக்கிய இடம் பெறுகிறது. எமது நீண்டகால நம்பிக்கைகள் பலவற்றின் மீது இந்த மாற்றங்கள் கேள்விகளை எழுப்பியுள்ளன. பொருளாதாரகோட்பாடுகள், சிந்தனை மற்றும் கொள்கை என்ற அனைத்துமே இந்த புதிய கண்ணோட்டத்தில் அணுகப்பட வேண்டியவையாக இருக்கின்றன. இலங்கையை உள்ளிட்ட பல மூன்றுவது மண்டல நாடுகளின் பொருளாதார கொள்கைகளுக்கும் சிந்தனைக்கும் இது அதிக அளவில் பொருந்துகிறது. உற்பத்திச் சாதனங்களின் உரித்து குறித்த விவாதம் (இலங்கை போக்குவரத்துச் சபையை மக்கள் மயப்படுத்துவது மற்றும் காணி மீள் பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன குறித்த அண்மைய விவாதம்), திறந்த பொருளாதாரமா? மூடுண்ட பொருளாதாரமா என்ற விவாதம், வெளிநாட்டு முதலீடு, பல்தேசிய கம்பனிகள், சுதந்திர வர்த்தக வலயங்கள், விலைவாசி உயர்வுப் பிரச்சினை, விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் மானியங்களின் அவசியம் என பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவை இந்த மாற்றங்களுடன் பின்னிப் பிணைந்தவையாக இருக்கின்றன. பொருளியலாளர்களும், மாணவர்களும், கொள்கை வகுப்போரும் அரசியல்வாதிகளும் சோவியத் யூனியனிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் நிகழ்ந்து வரும் மாற்றங்களை கவனத்தில் எடுக்காது மேற்சொன்ன பிரச்சினைகள் குறித்து யதார்த்தமாக விவாதிக்க முடியாது.

இந்த நெருக்கடிக்கான காரணங்கள் என்ன? மார்க்சிச பொருளாதார சிந்தனையிலும் பொதுவான பொருளாதார சிந்தனையிலும் இது எத்தகைய தாக்கங்களை எடுத்து வரும். சோஷலிசம் அதன் பாதையின் முடிவுக்கு வந்து விடுமா? சோஷலிசம் என்பது வெறும் கற்பனாவாதமாக முடிந்து போகுமா? அல்லது இந்த இலட்சியத்தை வென்றடைவதற்கு வேறும் மாற்று வழிகள் உள்ளனவா? முதலாளித்துவத்துக்கு மாற்றாக இது தவிர வேறேதும் வழிகள் உண்டா? இன்று நாம் எமக்குள்ளேயே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள் இவை.

தலைசிறந்த சமுதாயமொன்றை கட்டியெழுப்புவது குறித்த எமது வேட்கையில் மீண்டும் ஒரு முறை நாங்கள் அறியாத பிராந்தியங்களுக்குள் நுழைகிறோம். தெரியாத வழிகளில பயணிக்கிறோம். தெரிந்த மாற்றுவழிகள் சாத்தியமில்லை என்பது நிரூபணமாகிவிட்டது. எமக்கு இன்றுள்ள ஒரேயொரு மாற்று வழி, ஒளிமயமான எதிர்காலம் குறித்து புதிய சிந்தனையொன்றை துவக்கி வைப்பதுதான். கோர்பச்சேவும் சோவியத் மக்களும் முதலடியை எடுத்து வைத்துவிட்டார்கள். ஆனால், சிறந்த சமுதாயமொன்றை கட்டியெழுப்புவதற்கு வழிகோலக்கூடிய புதிய பொருளாதார சிந்தனையொன்றை கட்டியெழுப்பும் மாபெரும் பணி நம் அனைவரையும் சார்ந்திருக்கிறது.

திசரணி குணசேகர

# சோவியத் ரஷ்யா உலக பொருளாதார அமைப்புடன் ஒருங்கிணையப் போகிறது

அபெல் அகன்பேக்யன்

அபெல் அகன்பேக்யன் - சர்வதேச புகழ் பெற்ற சோவியத் பொருளியலாளர். பெரித்ஸ்ரோய்கா புரட்சியில் முன்னணி ஸ்தானத்தில் நிற்கும் அவர் ஜனாதிபதி கோர்பச்சேவின உயர்மட்ட பொருளாதார ஆலோசகர்களில் ஒருவர். சோவியத் விஞ்ஞானங்கள் பேரவையின் பொருளியல் திணைக்களத்தின் பேரவை செயலாளராகவும் பணிபுரிகிறார்.

சோவியத் யூனியன், ஐந்து வருடங்களுக்கான அதன் புதிய பொருளாதார கொள்கையை முனைப்புடன் முன்னெடுத்துச் செல்கிறது. பொருளாதார தனிமையிலிருந்து பொருளாதார பகிரங்கத்துவத்துக்கு மாறுதல், உலக பொருளாதாரத்திலும் சந்தையிலும் ஒருங்கிணைவதற்கான தயார்படுத்தல்களை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளிலேயே இந்தக் கொள்கைகள் கூடிய கவனஞ் செலுத்துகின்றன.

இந்த முனைப்பாக்கம் சோவியத் யூனியனின் புதிய வெளிநாட்டுக் கொள்கையின் தர்க்கரீதியான வெளிப்பாடுகளில் ஒன்றாகும். அத்துடன், இது உள்ளக பொருளாதார நிலை மாற்றங்கள், தீவிர பொருளாதார சீர்திருத்தம் மற்றும் எதேச்சாதிகார நிர்வாகத்திலிருந்து சந்தை மாதிரிக்கு மாறுதல் போன்ற முயற்சிகளுடன் பிணிக்கப்பட்டிருக்கிறது. ஜனவரி 1991ல், முதலில் கைத்தொழிலிலும் பின்னர் விவசாயத்திலும் தீவிரமான விலையிடல் சீர்திருத்தமொன்றை கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது இந்தப் பயணத்தின் அதி முக்கிய கட்டமொன்றாக இருக்கும். சந்தை உறவுகளை அபிவிருத்தி செய்வதற்கு வகைசெய்யும் வேறு திட்டங்களும் உண்டு. பொருள் சந்தை தவிர, பணச் சந்தை, முதலீட்டுச் சந்தை என்பவற்றையும் நாடு வேண்டி நிற்கிறது.

சோவியத் வங்கித் தொழில் அமைப்பு திருத்தப்பட்டு வருகிறது. பெரித்ஸ்ரோய்காவுக்கு முற்பட்ட காலத்தில், சோவியத் யூனியன் மூன்று பிரமாண்டமான வங்கிகளிலேயே தங்கியிருந்தது. ஆனால், இன்று 300க்கு மேற்பட்ட வங்கிகள் இயங்குகின்றன. வங்கிகளுக்கான சார்புரீதியான சுதந்திரம், செயற்பாட்டில் வர்த்தக ரீதியிலான மாதிரிக்கு மாறிக் கொள்ளுதல் போன்றவற்றுக்கு ஏற்பாடு செய்வதற்கு வங்கிகள் குறித்த புதிய சட்டவாக்கமொன்று வரவிருக்கிறது. ஐக்கிய சோவியத் சோஷலிச குடியரசின் அரச வங்கி இந்த வங்கியமைப்பை கட்டுப்படுத்தும். இனிமேல்தான் முடிவாக்கப்படவிருக்கும் இன்னொரு சட்டம், பிணைப்பத்திரங்கள், கூட்டுப் பங்கு கழகங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனிகள் என்பவற்றை உள்ளடக்குவதாக இருக்கும். தவிர்க்க முடியாதவகையில், பிணைப்பத்திரங்கள், பங்குப் பரிவர்த்தனை என்பவற்றைக் கொண்ட சந்தையொன்று எமக்கு கிடைத்துவிடும்.

வேலைவாய்ப்பு மற்றும் அதனோடிணைந்த அம்சங்கள் என்பவற்றைக்கொண்ட சட்டவாக்கமொன்றினால் கட்டுப்படுத்தப்படும் மனித வலுச் சந்தையொன்றை இப்பொழுது சோவியத் யூனியன் உருவாக்கி வருகிறது. இறுதியாக, வெளிநாட்டு நாணயச் சந்தையொன்றையும் நாடு பெறப்போகிறது. விற்பனை செய்து, பெறுமதியான நாணயங்களை சந்தையில் வாங்குவதற்காக சோவியத் தொழில் முயற்சிகளுக்காகவும், நிறுவனங்களுக்காகவும் மூன்று ஏலங்கள் அண்மையில் நடத்தப்பட்டன.

சந்தைப் பொருளாதாரமொன்றை கட்டியெழுப்புவதற்கான இந்த ஆயத்தங்கள் வெளிச் சந்தையை சென்றடையும் சோவியத் முயற்சிகளுடன் இயல்பாகவே பின்னிப்பிணைந்திருக்கின்றன. இறக்குமதி ஏற்றுமதி நடவடிக்கைகளை கொண்டு நடத்துவதற்காக சுமார் 14000 பொருளாதார நடவடிக்கையாளருக்கும் முகவரசங்களுக்கும் லைசென்சுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த தொகை மேலும் பெருகலாம்.

புதிய விலைகள் அமுலுக்கு வரும் போது சோவியத் யூனியன் புதிய சுங்கத் தீர்வைகளை அறிமுகப்படுத்தும். சோவியத் பொருளாதார முறை உலக முறையுடன் ஒத்துப் போகக்கூடிய விதத்தில், அதனைப் பன்முகப்படுத்துவதற்கும், சுங்கப்புள்ளி விவரங்களைக் வகைப்படுத்துவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கூட்டுத்தொழில் முயற்சிகள் நம்பிக்கைதரும் மற்றொரு பிரிவாக தெரிகிறது. இப்பொழுது 1300 கூட்டுமுயற்சி கம்பனிகள் காணப்படுகின்றன. ஒவ்வொரு மாதமும் புதிதாக இத்தகைய நூறு தொழில்முயற்சிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அவற்றின் ஆரம்ப நிதிகள் சுமார்

( 20 ம் பக்கம் பார்க்க )

# சோவியத் ரஷ்யா : பொருளாதார பிரச்சினைகளும் அவற்றை தீர்ப்பதற்கான வழிகளும்

கவ்ரில் பொபோவ்

புதிதாக தெரிவு செய்யப்பட்ட மாஸ்கோ நகர மேயரான கவ்ரில் பொபோவ் சோவியத் நாட்டில் நன்கு பிரபல்யம் பெற்றிருக்கும் முக்கியமான அரசியல்வாதியாவார். கடந்த மேதின கொண்டாட்டங்களின் போது, திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களிடம் ஆரவார வரவேற்பினைப் பெற்ற ஒரு சில தலைவர்களில் அவரும் ஒருவர். சோவியத் விஞ்ஞான கழகத்தின் பொருளியல் சஞ்சிகையின் ஆசிரியாகவும் பணிபுரிகிறார்.

சோவியத் பொருளாதார கட்டமைப்பு-துறை ரீதியானதும் அதேபோல பிராந்திய ரீதியானதும் - அதன் இயல்பிலேயே கஷ்டங்களை உருவாக்கக் கூடிய தொன்றாகும். நுகர்பொருள் தட்டுப்பாடுகள் மற்றும் போக்குவரத்து, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் போன்றவற்றை இந்த அமைப்பே எடுத்து வருகிறது. சமூக ரீதியில் நாட்டுக்குள் அவசியப்படும் வியாபாரத்தின் தேவைகளினாலன்றி, அந்த வியாபாரங்களை ஏற்பாடு செய்யும் அமைச்சுக்களின் தேவைகளுக்கு எந்த வகையான போக்குவரத்து முறையினாலும் தாக்குப் பிடிக்க முடியாது. இவ்விதம் செய்கையில், இவை பொருளாதார தர்க்கத்தின் விதிகளின் அடிப்படையில் வழிநடத்தப்படுவதில்லை; இந்த விதிகளுக்கு மாறாக, தமது குறுகிய நலன்களினால் மட்டுமே வழி நடத்தப்படுகின்றன. ஓர் அமைச்சு சில நேரங்களில் ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்களுக்கு அப்பால் உள்ள இடங்களுக்கு பொருட்களை அனுப்பி வைக்கிறது. ஆனால், அவ்விடங்களிலும் இதே பொருட்கள் (பிறிதொரு அமைச்சினால் கட்டுப்படுத்தப்படும் தொழிற்சாலைகளில் ) உற்பத்தி செய்யப்படுவதுண்டு

வேறு எந்த ஒரு பொருளாதாரத்திலும் இந்த முறைமை அபத்தமானதொன்றாக இருக்க முடியும். ஆனால், சோவியத் அமைவில், ஒவ்வொரு பிராந்தியமும் அமைச்சும் மத்தியின் இறுக்கமான கட்டுப்பாடுகளுடன் கூடிய பங்கீட்டு பட்டியல்களின் பிரகாரமே மூலவளங்களை பெற்றுக் கொள்கின்றன. பரஸ்பரம் அனுகூலமளிக்கக் கூடிய வியாபாரம் அவற்றுக்கிடையே நடைபெறுவதில்லை. அது, பல சந்தர்ப்பங்களில் சட்டரீதியாக தண்டிக்கப்படக் கூடியதாகவும் இருக்கிறது.

பாரிய கைத்தொழில்கள் ஒவ்வொன்றும் நுகர்வோர் தேவைகளை விட்டுவிட்டு அவை ஒவ்வொன்றினதும் தேவைகளை நிறைவு செய்வதற்காகவே பணியாற்றி வரும் ஒரு சூழ்நிலையில், நுகர்பொருள் தட்டுப்பாடுகளை எப்படி ஒழிக்க முடியும். அதே நேரத்தில் இவற்றில் வேலை செய்யும் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கான ரூபிள்ககளை தமது பைகளில் வைத்துக் கொண்டு, இத்தொழிற்சாலைகள் உற்பத்தி செய்யாத பொருட்களுக்காக அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

சோவியத் யூனியனில் காணப்படும் ஏகபோகங்கள் முதலாளித்துவ பொருளாதாரங்களில் இயங்கும் ஏகபோகங்களிலும் பார்க்க முற்றிலும் மாறுபட்டவையாகும். சோவியத் ஏகபோகம் என்பது, பொருட்களின் அல்லது செவைகளின் சந்தையில் திறமையாக செயற்படும் ஒரு கம்பனி அல்ல. மாறாக, திட்டமிடல், மத்திய பங்கீடுகள் மற்றும் வெறும் ஆணை மூலமான நிர்வாகம் என்ற வளமான மண்ணில் வளரும் ஒரு கண்ணார்டி வீட்டுத் தாவரமாகவே அது இருக்கிறது. அங்கு ஆக்கபூர்வமான ஆராய்ச்சி, அபிவிருத்தி முயற்சிகள் அறவே காணப்படுவதில்லை. அத்துடன் இந்த தொழில் முயற்சிகளில் தொழில் முனைவோர் விருப்பார்வமுமில்லை; போட்டி போடக்கூடிய ஆற்றலுமில்லை. இந்த நிலையில் பொருளாதாரத்தில் ஏகபோகங்களை இல்லாமலாக்கும் திடமான வழிகள் கண்டறியப்படுதல் வேண்டிம்.

ஊழல் மற்றும் ஏனைய துஷ்பிரயோகங்கள் தவிர ,பொருளாதார ஆய்வுக்குரிய விடயமொன்றை இந்த வகையான பொருளாதாரம் எடுத்து வருகிறது. ''நிழல் பொருளாதாரமும்'' கொள்ளையும் ஒரே பொருளை குறிக்கும் இரு சொற்களாயின் இந்தப் பிரச்சினைக்கான தீர்வு மிக எளிதானதாகும். ஆனால், சோவியத் யூனியனின் நிழல் பொருளாதாரம், உறுதிப்படுத்தும் ஒரு காரணியாகவும் உறுதி குலைக்கும் ஒரு காரணியாகவும் இரு வழிகளிலும் செயற்பட்டு வருவதே இங்குள்ள பிரச்சினையாகும். • அது பெருமளவுக்கு மத்தியப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் குறைபாடுகளை சமனப்படுத்தி, ஈடுகட்டும் ஓர் ஒழுங்குபடுத்தும் கருவியாக செயற்பட்டு வருகிறது.

( 21 ம் பக்கம் பார்க்க )

# மார்க்ஸ், மார்க்சிசம் - லெனினிசம் மற்றும் நவீன உலக அமைப்பில் சோஷலிச அனுபவங்கள்

இம்மானுவேல் வலஸ்ரீன்

இம்மானுவேல் வலஸ்ரீன், இன்றைய உலகின் முன்னணி மார்ச்சிச சிந்தனையாளர்களில் ஒருவர். பெர்கம்டனில் அமைந்துள்ள நியுயோர்க் அரச பல்கலைக் கழகத்தில் சமூகவியல் துறை பேராசிரியராக பணிபுரிகிறார். வரலாற்று அமைப்புக்கள் மற்றும் பொருளாதாரம் என்பன குறித்து அவர் எழுதிய பல நூல்கள் பரவலான கவனிப்பைப் பெற்றவையாகும்.

''மார்க்ஸியமும் புதிய உலக சமுதாயமும்'' பற்றிய சர்வதேச மகா நாட்டுக்கான ஆய்வுக் கட்டுரை, தொலை கிழக்கு ஆய்வுகளுக்கான கழகம், குமிங்னாம் பல்கலைக்கழகம், சியோல் அக்டோபர் 25-27-1989

மார்க்சும் அவரது கருத்துக்களும் மலர்ச்சியடைகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் வேறெந்த ஆய்வாளரது கருத்துக்களையும் விட இன்று அவை வீறுடன் நிற்கின்றன, இருபத்தோராம் நூற்றாண்டிலும் உலக அமைப்பின் சமூக அமைப்பில் தொடர்ந்தும் மையமாக இருக்கும் என்ற நம்பிக்கையைத் தருகின்றன. மார்க்ஸியம் - லெனினிசம் ஓர் மூலோபாயம் என்ற வகையிலும் ஓர் சித்தாந்தம் என்ற வகையிலும் அதன் வரலாற்றுப் பாத்திரத்தை வகித்திருக்கிறது, உலக அமைப்பில் தற்போது நிகழ்ந்து வரும் அரசியல் பொருளாதாரத்துக்கு ஓர் எல்லைக் கோடாக மாறியிருக்கிறது. நவீன உலக அமைப்பில் சோஷலிஸ அனுபவங்கள் – நாம் அவற்றை அவ்வாறு அழைக்க முடியுமாயின் – பெரும் குழப்பமான நிலையில் உள்ளன, அவை ''சோஷலிஸ்ட்'' என்று அங்கீகரிக்க கூடிய எந்த வடிவத்திலும் நிலைத்தும் இருக்கக்கூடும், நிலைக்காமலும் இருக்கக் கூடும்.

நவீன உலக அமைப்பின் வரலாறு பூர்வமான ஓர் இயல்நிகழ்வு என்ற வகையில் மார்க்ஸியம் - லெனினிசத்தை அதன் தோற்றம் முதல் தற்காலம் வகையில் பின்வரும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கும் வண்ணம் ஆராய்வதற்கு நான் யோசனை தெரிவிக்கிறேன்: (1) லெனினிசம் ஏன்? (2) முதலில் ருஷ்யாவில் லெனினிசப் புரட்சி ஏன்? (3) ஸ்டாலினிஸம் ஏன்? (4) ஓர் சோவியத் சாம்ராஜ்யம் ஏன்? (5) ஸ்டாலினிஸமய நீக்கம் ஏன்? பெரிஸ்த்ரோய்காவும் கிளாஸ் நாஸ்தும் ஏன்?

(1)

1903 ம் ஆண்டு கோடைக் காலத்தில் அகில - ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் இரண்டாவது காங்கிரசுக்காக (இது ஐக்கியப்படுத்தும் காங்கிரஸ் என அழைக்கப்பட்டது) பிளெஹனோவ் சமர்ப்பித்த வாசகத்துக்கு எதிராக லெனின் சமர்ப்பித்த வாசகத்துடன், 1902 ம் ஆண்டில் லெனினிசம் அல்லது சம்பிரதாயமாகக் கூறப்படும் போல்ஷிவிஸம் ஸ்தாபனரீதியான நடைமுறைக்கு வந்திருக்க வேண்டும். இக்காங்கிரஸ் கட்சியில் பிளவை ஏற்படுத்தியதுடன் முடிவடைந்தது என்பதை நாம் அறிவோம். லெனின் தன்னை ஓர் தலைசிறந்த அரசியல் உள்போராளியாக நிருபணம் செய்தார். போல்ஷிவிக்குகளின் பெயரைப் (ஓரளவுக்கு ஐயப்பாட்டுடன்) பெற்ற ஒரு கட்சியின் கட்டுப்பாட்டை அவர் பெற்றார்.

இன்று உலக சோஷலிஸ இயக்கங்களின் வரலாற்றை இரு போக்குகளுக்கு இடையிலான வரலாறு பூர்வ பிளவின் வரலாறு என சுருக்கமாகக் கூறுவது சர்வ சாதாரணமானது. இதில் ஒரு போக்கு எட்வாட் பேர்ன்ஸ்டின் மூலமும் மற்றொன்று லெனின் மூலமும் சிகரப்படுத்தப்பட்டன: இரண்டாவது மூன்றாவது ஆகிய இரண்டு அகிலங்களின் நிலவல் மூலம் 1921 ம் ஆண்டிற்குப் பின்னர் ஸ்தாபனரீதியான வடிவத்தில் அமைக்கப்பட்டது. இதை சீர்திருத்தத்துக்கும் புரட்சிக்கும் இடையிலான ஒரு பிரிவினை என்று சம அளவில் சுருக்கிக் கூறப்படுகிறது. சுருக்கங்களின் எளிமைத் தன்மையை ஒருவர் எப்போதுமே தாக்கிக் கூறமுடியும். ஆனல், இருபதாம் நூற்றாண்டின் முன்பகுதியைப் பொறுத்தவரையில் இம்மரபார்ந்த தொகுப்பு அடிப்படையிலேயே சரியானது என எனக்குத் தோன்றுகிறது.

''திருத்தல்வாதிகளின்'' முக்கியமான வாதங்கள், உலக அமைப்பின் பரிணாமம் பற்றிய நேர்மையான, ஆனால் பொருளியல் சார் புரிந்துணர்விலிருந்து முகிழ்த்தன. தவிர்க்க முடியாத தொழில் நுட்பவியல் முன்னேற்றத்தின் போக்கு என்றுமிலாதவாறு மிகப்பெரிய தொழில் துறைத் தொழிலாளி வர்க்கத்தைச் செயற்பாட்டுக்குக் கொண்டுவருகிறது என்பதை அவர்கள் கண்டனர். முதலாளித்துவப் பகுத்தறிவுத் தன்மையினதும் தொழிலாளி வர்க்கப் போராட்

டத்தினதும் கூட்டு நிர்ப்பந்தத்தின் கீழ் மெய்யெனக் கொள்ளத்தக்க வகையில், அரசியல் உரிமைகளின் (குறிப்பாக வாக்குரிமை) தவிர்க்க முடியாத வியாபகத்தின் அரசியல் பின்விளைவுகளை அது கொண்டிருக்கக்கூடும் என்று அவர்கள் ஊகித்தனர். காலப் போக்கில் தொழில்துறைத் தொழிலாளி வர்க்கம் எண்ணிக்கை அடிப்படையில் அரசியல் அரங்கில் ஆதிக்கஞ் செலுத்தும். இவ்விதம் தாம் சாதாரணமாகவே ஆட்சிக்கு வர முடியும் என்று அவர்கள் காரணம் காட்டினர். இது நடைபெற்றவுடன் முதலாளித்துவத்தை முடிவுக்குக் கொண்டுவரவும் சோஷலிஸச் சமுதாயத்தை ஸ்தாபிக்கவும் சட்டம் வகுக்க முடியும். தொழிலாளி வர்க்கத்தின் பெரும் பகுதியினரை (அவர்களின் அனுதாபிகளையும்) வெகுஜனக் கட்சிக்குள் அரசியல் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஒழுங்கமைப்பதே மிகவும் சாத்தியமான அரசியல் உபாயம் என்பது இந்த நியாயப்படுத்தலிலிருந்து தெரிந்தது.

இந்த நியாயப்படுத்தல் தெளிவானதாயும் பலரை இணங்கச் செய்வதாயும் இருந்தது. உண்மையில் சொல்லப் போனால், எதார்த்தத்தில் இந்த அம்சம் ஓரளவுக்கே உண்மையானதாக இருந்தது. தொழில்நுட்பவியல் முன்னேற்றம் தொடர்ந்தது, தொழில்துறைத் தொழிலாளி வர்க்கத்தின் அளவும் அதிகரிக்கவே செய்தது. சர்வஜன வாக்கெடுப்பு ஓர் எதார்த்தமாகியது. ஆயினும், தொழில்துறைத் தொழிலாளி வர்க்கம் வாக்களிக்கும் மக்களில் மிகப் பெரும்பான்மையினரைப் பிரதிநிதித்துவம் செய்ய வந்தது என்பது உண்மையல்ல. அதுபோலவே எல்லா தொழிலாளர்களுமே சோஷலிஸ்ட் கட்சிக்கு வாக்களித்தனர் என்பதும் உண்மையல்ல. இரண்டாம் அகிலத்தைச் சேர்ந்த கட்சிகள் எண்ணற்ற பல நாடுகளில் ஆட்சிக்கு வரவே செய்தன. ஆயினும், அவை முதலாளித்துவத்துக்கு முடிவுகட்டுவதைச் சட்டமாக்கவில்லை. அவை நல வாழ்வு அரசு எனப்படுவதற்கான சட்டத்தையே இயற்றின.

இந்த நியாயப்படுத்தலுக்கு லெனின் எதிர்ப்பாக இருந்தது ஏன்? அவர் ஏனைய மாற்று அம்சங்களை இந்த அரங்குக்குள் ஊடுருவச் செய்ததுதான் இதற்குக் காரணம். முதலாளித்துவப் பகுதியினர், தாம் ஒழித்துக்கட்டப்படுவதை எவ்வலிமையைக் கொண்டு எதிர்ப்பார்களோ அந்த வலிமையை அவர் வலியுறுத்தியமைதான் முதலாவதான, மிகமுக்கியமான அம்சமாகும். தம்முடைய நிலையைப் பேணிக்காப்பதற்காக எவ்வழியிலும் (நியாயமான விதத்திலோ அல்லது நியாயமில்லாமலோ) போராடுவதற்காக அரசுப் பொறியமைவுகளில் தாம் கொண்டுள்ள கட்டுப்பாட்டைப் பயன்படுத்துவர் என்று அவர் ஊகித்தார். அவர்களை வாக்களிப்பின் மூலம் அதிகாரத்திலிருந்து அகற்ற முடியும் என்ற கருத்தமைப்பு முற்றிலும் ஆதாரமற்றது என்று அவர் எண்ணினார். எனவே, தொழிலாளி வர்க்கம் ஆட்சிக்கு வரக்கூடிய ஒரே மார்க்கம் புரட்சியே, கிளர்ச்சியே என்பதனை அவர் வலியுறுத்தினார். அவர் அத்தகைய போராட்டங்களை அரசியல் இராணுவப் போராட்டங்களாகக் கண்டார்; எனவே, வெற்றியின் இன்றியமையாத அம்சம் ஆகவும் கண்டிப்பொழுங்கு மிக்க ஸ்தாபனமே என்பதை நம்பத்தக்க வகையில் அவர் வலியுறுத்தினார். கட்சி அமைப்பு பற்றிய அவரது கருத்துக்கள் ஓரளவு தர்க்கரீதியாகவே பின்பற்றப்பட்டன. அரசுக் கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்காக முதலாளித்துவவாதிகள் எவ்வழிகளையும். பயன்படுத்துவார்கள் என்பதாலும், அரசியல் இராணுவப் போராட்டத்துக்கு ஓர் கண்டிப்பொழுங்கு மிக்க ஸ்தாபனம் தேவைப்படுவதாலும் கட்சி, அர்ப்பணிப்புமிக்க, ஏறக்குறைய முழு நேரப் பணியாளர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும், ஓரளவுக்காவது தலைமறைவாகச் செயல்பட வேண்டும். இவ்விதம் காலம் கனிந்தவுடன் கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றமுடியும், பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் எனப்படுவதை ஏற்படுத்தமுடியும் என்று அவர் வாதித்தார். ஆயினும் அவர்கள் அதிகாரத்துக்கு வந்ததும் என்ன நடக்கும் என்பது பற்றிய அவரது கண்ணோட்டத்துக்கும் திருத்தல்வாதிகளின் கண்ணோட்டத்துக்கும் அதிகம் வித்தியாசமில்லை. புதிய அரசாங்கம் முதலாளித்துவத்துக்கு முடிவு கட்டவும் சோஷலிஸச் சமுதாயத்தை ஸ்தாபிக்கவுமான சட்டத்தை இயற்றும்.

இந்த நியாயப்படுத்தலும் தெளிவானதாயும் பலருக்கு இணக்கமுள்ளதாயும் இருந்தது. உண்மையில் சொல்லப்போனால், இந்த அம்சமும்கூட எதார்த்தத்தில் ஓரளவுக்கு மாத்திரமே உண்மையானதாக இருந்தது. கிளர்ச்சிகள் ஒரு சில நாடுகளில் மாத்திரமே வெற்றி பெற்றன. உண்மையில், ருஷ்ய அம்சத்தை ஓரளவுக்கு மாத்திரமே இவ்விதம் விளக்கலாம். லெனினின் கண்ணோட்டத்துக்கு மிகவும் அண்மித்ததாக இருந்தது சீனாதான், இங்கு உண்மையிலேயே ஓர் கண்டிப்பொழுங்குமிக்கப் பணியாளர்களைக் கொண்டகட்சி ஓர் நீண்ட அரசியல் - இராணுவப் போராட்டத்தை ஒழுங்கு செய்தது, அதைத் தொடர்ந்து அதிகாரத்தைக் கைப்பற்றியது, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தை ஆட்சியில் அமர்த்தியது. மூன்றாம் அகிலக் கட்சிகள் அதிகாரத்துக்கு வந்த இடங்களில் எல்லாம் (எம் மார்க்கத்திலாவது) முதலாளித்துவத்துக்கு ஏறக்குறைய முடிவுகட்டுகின்ற (பெரும்மான்மையான உற்பத்தித்

தொழிலகங்களில் தனிச் சொத்துடைமையை ஒழித்துக்கட்டுவது என்ற குறுகிய அர்த்தத்தில்) சட்டங்களை இயற்றவே செய்தன. அவை சோஷலிஸ சமுதாயங்களை ஸ்தாபித்துள்ளனவா என்பது இப்போதைக்கு எழுபது ஆண்டுகளாகத் தர்க்கத்துக்குரிய விஷயமே; என்றாலும், கடந்த சில ஆண்டுகளாக இருந்ததைப் போல இது ஒருபோதும் இருந்ததில்லை.

லெனின் தனது வாதத்தில் ஒரு வரையறுக்கப்படாத ஆதாரத்தைக் கொண்டிருந்தார். அவர் ருஷ்யாவில் போராட்டம் நடத்தினார்; ருஷ்யா ஜெர்னியோ அல்லது பெரிய பிரித்தானியாவோ அல்ல. அதாவது மேற்கு ஐரோப்பாவுடனும் வட அமெரிக்காவுடனும் ஒப்பிடுகையில் தொழில்நுட்பவியல் '' பின்தங்கிய '' நிலையிலிருந்த ஒரு நாடு ருஷ்யா. மிகவும் குறுகிய காலகட்டம் தவிர்ந்த ஏனைய காலங்களில் பாராளுமன்ற அமைப்பைப் பெற்றிராத நாடாக ருஷ்யா விளங்கியது. நியாயமான அளவு நீண்ட காலத்துள் சர்வஜன வாக்குரிமையை நோக்கிச் செல்லும் எதிர்பார்ப்பும் கூட மிகவும் குறைவாகவே இருந்தது. சர்வஜன வாக்குரிமை இருந்திருந்தாலும்கூட, தொழில்துறைத் தொழிலாளர்கள் மிகவும் குறைவாகவே இருந்தனர். மக்களில் பெரும்பான்மையினர் கிராமப்புறத் தொழிலாளர்களும் விவசாயிகளும் ஆவர். எனவே திருத்தல்வாதிகளின் நோக்கு ருஷ்ய நிலைமைக்கு அறவே பொருத்தமற்றதாகத்தோன்றியது.மேலும், லெனின் இது சம்பந்தமாக சரியான மதிப்பீட்டையே செய்தார் என்பதை ஒருவர் ஒப்புக் கொண்டாக வேண்டும். எனவே, ஒப்பேறக்கூடிய ஒரே மாற்றுவழி தன்னுடைய சொந்தத் திட்டம்தான் என்று அவருக்குத் தோன்றியது. இது சரியானதா, பிழையானதா என்பதை நிகழ்வுக்குப் பின்னர் மதிப்பீடு செய்வது சிரமம்; ஏனெனில், எல்லா இடங்களிலும் சோஷலிஸ்ட் இயக்கம் ஏதாவதொரு திசையில், திருத்தல்வாதத்து உள் திசையில் அல்லது லெனினியத்தின் திசையில் (எப்போதுமே மார்க்ஸிய–லெனினியத் திசையில் அடிக்கடி செல்லவில்லை) சென்றது.

( 2 )

ஜெர்மனியே '' முதலாவது '' சோஷலிஸ ராஜ்யமாக இருக்கும் என்று உலக சோஷலிஸ்ட் இயக்கத்திலுள்ள ஒவ்வொருவருமே எதிர்பார்த்தனர்; எனவே 1917ம் ஆண்டின் ருஷ்யப் புரட்சி ஓர் ஆச்சர்யத்தையே தந்தது. போல்ஷிவிக்குகளும், லெனினும் கூட இதையே எதிர்பார்த்தனர். 1900ம் ஆண்டளவில், மார்க்ஸின் சொந்தத் தேர்வான பெரிய பிரித்தானியா முதலாவது சோஷலிஸ ராஜ்யமாக இருக்கும் என்பதை எவரும் நம்பாதது ஏன் என்பது இங்கு எடுத்துக் கொள்வதற்குப் பெறுமதி வாய்ந்த கேள்வி. ஆனால் நான் இங்கு இதைச் செய்ய முடியாது. ஆயினும் திருத்தல்வாதிகளதும் லெனினியவாதிகளதும் வாதங்களில் மறைந்திருந்த ஏனைய நிலைப்பாடுகளும் இருந்தன என்பதை அது நிர்ணயித்துக் காட்டியது.

அக்டோபர் 1917ல் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு முயல்வதில் தனது சகபாடிகளை இணங்கச் செய்வதில் லெனின் மிகவும் சிரமப்பட்டார் என்பதை நாம் அறிவோம். ஜெர்மனிக்கு முன்பதாகவே ருஷ்யா விலகிச் சென்றமை வெகுவிரைவில் சரிசெய்யப்படும் என எல்லாருமே உணர்ந்ததாகத் தோன்றியது. உண்மையில், ஜெர்மனியில் ஏதாவது துரிதகதியில் நிகழாவிட்டால் புதிய சோவியத் ராஜ்யம் உயிர்வாழ முடியாது என்று பலர் வாதிட்டது வாஸ்தவந்தான். இந்த எதிர்பார்ப்பு ஒருபோதும் நிறைவேற்றப்படவில்லை. சுமார் ஐந்து ஆண்டுகளின் பின்னர் இறுதியாகக் கைவிடப்பட்டது என்பதையும் நாம் அறிவோம்.

மேலும் இந்த எதிர்பார்ப்பு உருக்குலைந்து போனது ஏன்? ஈ. எச். கார், வரலாற்றும் பார்வையில் ருஷ்யப் புரட்சியை அமர்த்துவதற்கு முயல்கையில் வாதிக்கிறார்:

> ருஷ்யாவின் 19வது நூற்றாண்டின் வரலாறு முழுவதிலும் இழையோடிய அதே இருமனப்போக்குதான் போல்ஷிவிக் புரட்சியைக் குறித்தது. ஒரு அம்சத்தில் அது மேற்கத்தையமயமாக்கும் போக்காக மலர்ந்திருந்தது, மற்றொரு அம்சத்தில் ஐரோப்பிய ஊடுருவலுக்கு எதிரான ஒரு கலகமாக மலர்ந்தது.

1914ம் ஆண்டில் ருஷ்யா ஓர் ஐரோப்பிய நாடாக, ஓர் மாபெரும் இராணுவ வல்லரசாக, கணிசமான தொழில் துறையைக் கொண்ட ஒரு நாடாக இருந்தது. ஆனால் ஒரு தொழில்துறை நாடு என்ற வகையில் அது, ஐரோப்பிய நாடுகளிலேயே மிகவும் பலஹீனமானதாக இருந்தது என்பது தெளிவு. அதேசமயத்தில், 1914ம் ஆண்டில் ருஷ்யா ஓர் ஐரோப்பியனல்லாத (அல்லது மேற்கத்தியதல்லாத) நாடாகவும் மூலாதாரமாய் ஓர் விவசாய நாடாகவும் இருந்தது. ஆனால் ஓர் விவசாய நாடு என்ற வகையில், மேற்கத்திய நாடுகளல்லாதவற்றில் அது தெளிவாகவே மிகவும் பலம் பொருந்தியதாக இருந்தது. எனவே, எம்முடைய சமகால மொழியில், ருஷ்யா அடிப்படையிலேயே மிகவும் பலஹீனமான வல்லரசாக அல்லது புறஎல்லைப் பகுதியில் மிகவும் வலுவுள்ளதாக இருந்தது. உண்மையில் அது இரண்டையும் கொண்டதுதான். நாம் இன்று அழைக்கின்ற அரை–புறஎல்லைப் பகுதி நாட்டிற்கு ஓர் உதாரணமாக விளங்கியது.

# சோஷலிசம் எங்கு செல்கிறது?

லெனினிய மூலோபாயம் அரைப்புற எல்லைப் பகுதி நாட்டில் மாத்திரமே வெற்றிபெற முடியுமென நான் வாதிடுவேன். எனவே, பின்னோக்கிப் பார்க்கையில், ருஷ்யாவில் முதலாவது சோஷலிஸப் ''புரட்சி'' நிகழ்ந்தது என்பது வியப்பைத் தருவதாயில்லை. அச்சசாப்தத்தில், உண்மையிலேயே அது நிகழக்கூடிய ஒரே இடம் அதுவாகத்தான் இருந்திருக்க முடியும். மூன்று முக்கியமான காரணங்களினால் இது தெளிவாகிறது. முதலாவது, முதலாளித்துவ உலக பொருளாதாரத்தின் மைய மண்டலங்களுக்குள் அத்தகைய கிளர்ச்சி சாத்தியமற்றதாக இருந்தது; ஏனெனில், இத்தகைய கிளர்ச்சிகரமான செயல்பாட்டின் பேராபத்துக்களை எதிர்நோக்காமலேயே குறுகிய காலத்தில் தமக்குக் கூடுதல் கவர்ச்சிகரமானவையாய்த் தோன்றிய எண்ணற்ற பலதேர்வுகளை தொழிலாளி வர்க்கம் பெற்றிருந்தது. 1917ம் ஆண்டிற்குப் பின்னரான ஆண்டுகளில் இது ஐயத்துக்கிடமின்றி தெளிவாகியது. அப்போது அது அவ்வளவு வெளிப்படையானதாய் தோன்றாமல் இருந்திருக்கக் கூடும்.

இரண்டாவதாக, பிரத்தியேகமாகவே வர்க்கக் கோரிக்கைகளின் அடிப்படையில், ஓர் கிளர்ச்சிகர இயக்கத்துக்காக வெகுஜனங்களின் ஆதரவைத் திரட்டுவது என்பது சாத்தியமற்றது என்பதை நாம் புரிந்து கொள்கிறோம். வர்க்கக் கோரிக்கைகளுடன் நாம் பின்னர் அழைத்த ஏகாதிபத்திய விரோதம் எனும் தேசியவாத உணர்வை அளவுக்கு அதிகமாகவும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஆனால் மைய மண்டலங்களில், தேசியவாதச் சாதனையின் உணர்வே பெரும்பாலான நாடுகளின் பின்னணியில் இருந்தன. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் மாத்திரமே இது ஒரு பெரும் காரணியாக இருந்திருக்க முடியும். மேலும் இவை, யுத்த ஆண்டுகளின் இடையில் பாஸிஸ இயக்கங்களின் இரு பிரதான தர்க்கங்களின் பின்விளைவாகவும் இருந்தன என்பது வாஸ்தவமே.

இறுதியாக, ஓர் வெற்றிகரமான கிளர்ச்சிக்கு, நாற்புற மானுட மேற்கட்டமைவின் ஓரளவு கணிசமான பகுதியும் ஓர் தொழிலாளி வர்க்கமும் ஓரளவுக்கு அறிவுத்துறையும் பிரக்ஞையும் தேவை. 1917ம் ஆண்டில் பெரும்பாலான புற எல்லைப் பகுதி மண்டலங்கள் இவற்றைப் பெற்றிருக்கவில்லை, ஆனால் ருஷ்யாவிடம் இருந்தன. இவ்விதம், மார்க்ஸியம்–லெனினிசம் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரைப்புற - எல்லைப் பகுதியில் திட்டமிடாத செயற்பாட்டிற்கான செயலூக்கமுள்ள சித்தாந்தமாய்த் தோன்றியது; அதன் தொடர்ச்சியான வரலாறு இதை நிர்ணயித்துக் காட்டியிருக்கிறது.

(3)

ஸ்டாலினிஸம் ஏன்? மீண்டும் பின்னோக்கிப் பார்க்கையில் அது தெளிவானதாகவே தோன்றுகிறது. ஒரு சிறிய குழு என்று விளக்கமளிப்பதன் மூலம் பணியாளரைக் கொண்ட கட்சியின் பணியாகவே புரட்சி விளங்கியது. அது, தனது கடமை அரசியல் ரீதியில் மிகவும் சிரமமானது என்ற நிலைப்பாட்டிலிருந்தே ஆரம்பித்தது; ஏனெனில், தனது முயற்சிகளுக்கு உள்ளூர் மற்றும் உலக பூர்ஷ்வாக்களின் உறுதியான எதிர்ப்பை ஊகித்திருந்தது. இந்த ஊகம் 1917ம் ஆண்டின் பின்னரான முதலாவது ஆண்டுகள் சிலவற்றில் மாத்திரமன்றி, அதைத் தொடர்ந்தும் சோவியத் யூனியனின் அனுபவத்தினால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது என்பது வாஸ்தவமே.

உள்நாட்டுப் போருக்கும் வெளிநாட்டுத் தலையீட்டுக்கும் மேலாக ருஷ்யா யுத்தத்தினால் சீர்குலைந்த நாடாக இருந்தது; அதன் பொருளாதார வல்லமை, முதலில், அவ்வளவு மகத்தானதாய் இருக்கவில்லை. நாட்டை ஒன்றாக வைத்திருப்பதே பகீரதப்பிரயத்தனம்தான்; ஏனெனில் ருஷ்யா ஓர் சாம்ராஜ்யமாக இருந்ததேயன்றி ஒரு தேசிய–ராஜ்யமாக இருக்கவில்லை. தனிக்கட்சி ராஜ்யத்தின் திசையில், ''ஒரு நாட்டில் சோஷலிஸத்தின் ''வர்த்தகவாதக் கொள்கையின் திசையில், மூன்றாவது அகிலத்தை முற்றுகையிடப்பட்ட ''முதலாவது சோஷலிஸ அரசுக்கான'' உலகு தழுவிய ஆதரவைத் திரட்டும் அமைப்பாக மாற்றியமைக்கும் திசையில் ஆன துரிதமான போக்கு, ஆகியன நிச்சயமாகவே நிலமைகளின் வியப்புதரும் வெளிப்பாடுகள் அல்ல.

ஒருவர், இன்று சோவியத் வரலாற்றை மீண்டும் பின்னோக்கிப் பார்த்தால், விவசாயிகள் பால் ஓர் மாறுபட்ட மனோபாவத்தைக் கொள்வதன் மூலம் போல்ஷிவிக்குகள் நற்பயனை அடைந்திருக்க மாட்டார்களா என்பதுதான் மிகப்பெரிய கேள்விக்குறி. கட்டாயமான கூட்டுறவுமயமாக்கம் ஒரு தீர்க்கமான தீர்மானம், ஒரு திரும்புமுனை; இன்றும் கூட பின்விளைவுகளைக் கொண்டிருக்கும் ஓர் நிலையை அது உருவாக்கியது. ஆனால் அது தவிர்க்க முடியாததுதானா அல்லது புத்திசாலித் தனமானது தானா? விவசாயிகள்பால் அரசியல் ரீதியில் அறிவுத்திறம் மிக்க நிலைப்பாட்டை எங்காயினும் விருத்தி செய்வதற்குத் தயார் செய்யப்படாத சோஷலிஸ்ட்டுகளையே மார்க்ஸியப் பண்பாடு பெற்றிருந்தது. அவர்கள், மார்க்ஸின் கீர்த்திமிக்கதும் அபகீர்த்தி மிக்கதுமான சொல்லடுக்கில் ''ஒரு பை உருளைக் கிழங்கு'' களாக இருந்தனர். லெனின் இதைவிடச் சிறப்பாகச் செய்திருக்க முடியும் என ஒருவர்

( 13 ம் பக்கம் பார்க்க )

# நடைமுறை யதார்த்தத்தின் இரட்டை முகங்கள்

ஜேம்ஸ் பெட்ராஸ்

நியூயோர்க் பல்கலைக் கழகமொன்றில் சமூகவியல் பேராசிரியராக பணிபுரியும் ஜேம்ஸ் பெட்ராஸ், அபிவிருத்திப் பிரச்சினைகள், வர்க்க அமைப்பு மற்றும் இலத்தீன் அமெரிக்க புரட்சிகர இயக்கங்கள் என்பன குறித்து சிறப்புத்தேர்ச்சி பெற்றவர். இவ்விடயங்கள் தொடர்பாக பல நூல்களையும் எழுதியுள்ளார்.

இரண்டு நிகழ்வுகள் நடைமுறை யதார்த்தத்தினை மிகச் சிறப்பாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இவற்றில் ஒன்று, லெச் வலேசா காங்கிரஸில் கடன்களையும் முதலீடுகளையும் கோரியும் போலிஷ் கைத்தொழில், மூலவளங்கள், உழைப்பு என்பவற்றை விற்பனைசெய்வதற்காகவும் விடுத்துள்ள வேண்டுகோளாகும். வெகுஜன ஊடகமும் அரசியல் வர்க்கத்தினரும் இந்நிகழ்வை ''சோவியத்தின் முடிவு'' எனச் சுட்டிக் காட்டியும் - முன்னேற்றம் வளர்ச்சி, ஜனநாயகம் என்பவற்றை நோக்கிய ஒரேயொரு பாதையான சுதந்திர தொழில்துறையில் தானும் ஒரு தரப்பினன் என்பதை கிழக்கின் உழைக்கும் வர்க்கம் அறிவித்துவிட்டதனைக் குறிப்பிட்டும் குதூகலித்தனர்.

வலேஸா காங்கிரஸில் உரையாற்றிக்கொண்டிருந்த அதே நேரத்தில், சல்வடோரியன் மக்கள் தேசிய எழுச்சிப் போராட்டமொன்றில் ஈடுபட்டிருந்தனர். தொழிலாளர்களும் விவசாயிகளும் ஐக்கிய அமெரிக்காவிற்கு-கூலிக்கமர்த்தப்பட்ட மரணப்படைகளுக்கு, தளபதிகளுக்கு எதிராக சுதந்திர நிறுவனங்களுக்கும் இயந்திரத் துப்பாக்கிகளுக்கும் அடிபணியமறுத்து ஜீவ மரணப் போராட்டம் நிகழ்த்திக்கொண்டிருந்தனர். மத்திய அமெரிக்காவிலுள்ள மிகப் பெரும்பான்மையான மக்களின் அடிப்படையான சமூக, பொருளாதார, அரசியல் தேவைப்பாடுகளைத் தீர்த்த வைப்பதில் முதலாளித்துவம் தோல்வியடைந்துள்ளதை பாரிய ஆயுத எழுச்சிப் போராட்டம் தெளிவாகக் கோடிட்டுக்காட்டுகிறது.

கிழக்கில் ஸ்ராலினிசத்தின் நெருக்கடிகள் தெற்கில் சுதந்திர நிறுவனங்களின் தோல்வியுடன் இணைத்து நோக்கப்படுகின்றன. முன்னைய சோவியத் கோளார்த்தத்தில் சமாதானபூர்வமான மாற்றப் போக்கொன்று சாத்தியமாயிருக்கும்போது தெற்கில் இவ்வாறான எந்தவொரு மாற்றப்போக்கையும் மேற்கத்திய பின்னணியைக்கொண்ட பயங்கரவாத ஆட்சியினர் தடைசெய்துவிடுவதே இங்குள்ள பாரிய வேறுபாடாக உள்ளது. ஒரு சமூக முறை (ஸ்ராலினிஸம்) இறந்தொழிந்து போவது பிறிதொரு சமூகமுறை (மேற்கத்திய முதலாளித்துவம்) உயர்வானது என்று பொருள்படமாட்டது. வெகுஜன ஊடகம் யதார்த்தத்தின் ஒரு முகத்தைத் தேர்ந்தெடுத்துத் தருவதாவது - ஸ்ராலினிஸத்தின் நெருக்கடிமீது பிரத்தியேக குவிமையப்படுத்தலானது - சமகால உலகத்தின் இரட்டை நெருக்கடியை மறைத்துவிடுகிறது இரட்டை நெருக்கடிகள், ''முதலாளித்துவதின்நிச்சயமான வெற்றி'' பற்றிய எளிமையான வெற்றிகரமான பொதுமைப்படுத்தல்களைப் பலவீனப்படுத்துகின்றன.

உலக பொருளாதாரத்தின் பாரிய வலயங்களில் (லத்தீன் அமெரிக்கா) முதலாளித்துவத்துவத்திற்கு எதிரான வர்க்கப் போராட்ட அரசியலின் உந்துசக்தியாகத் தொடர்ந்து இடம்பெற்றால் ஸ்ராலினிஸத்திலிருந்து முதலாளித்துவ ஜனநாயகங்களுக்கான மாற்றப்போக்கும் மென்மையான நீண்டொடுங்கிய வழிமுறையாக இருக்கவேமாட்டாது.

## ஸ்ராலினிஸ விரோத இயக்கங்களின் முரண்பாடுகள்

ஸ்ராலினிஸ விரோத இயக்கங்கள், முரண்பாடுள்ள சமூக வர்க்கங்களினாலும், எதிரிடையான சித்தாந்தங்களினாலும், ஒவ்வாத சமூக-பொருளாதார முன்னுரிமைகளினாலும், உருவாக்கப்பட்டுள்ளன. மேற்கத்திய பேச்சாளர்களாலும் வெகுஜன ஊடகங்களாலும் அரசியல்வாதிகளாலும் கல்வித்துறை விற்பன்னர்களாலும் அடிக்கடி குறிப்பிடப்படும் பலபொருள் தரும்ஒருருவாக இந்த இயக்கங்கள் திகழ்கின்றன. சுதந்திரம் என்ற அத்தியாவசிய பதத்திலிருந்தே இந்தப் பலபொருள்தரும் ஒருரு உதித்துள்ளதாக இந்த இயக்கங்கள் தம்மைத் தாமே வரைவிலக்கணப்படுத்திக் கொள்கின்றன. இதேபோது, தாங்கள் எதிலிருந்து விடுபட்டு நிற்கவேண்டுமென்பதில் இந்த இயக்கங்கள் மிகத் தெளிவுடனிருக்கின்றன. கருத்துருவ,ஏதுக்களில் அல்லது எவை விடுவிக்கப்பட வேண்டுமென அவை விரும்புகின்றனவென்பதை உணர்ந்து கொள்வதில், எவ்வகையான சமூக முறையை, அரசியல் அதிகாரத்தை, பொருளாதார முறைமையை, கலாசார/சித்தாந்த கட்டுமானத்தை அவை விரும்பி நிற்கின்றனவென்பதில் தெளிவெதுவும் இல்லை.

இவ்வாறே கிழக்கிலுள்ள இந்த இயக்கங்கள் வரலாற்று வாய்ப்பு, அபாயம் ஆகிய இரண்டினையும் ஒரேபோதில் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. இதுவரையில் ஸ்ராலினிஸ விரோத எழுச்சியானது

சமுதாயத்தின் தளைகளை அகற்றியுள்ளன; மக்களை மீளரசியல்மயப்படுத்தியுள்ளன; தன்னாட்சி இயக்கங்களை ஏற்பாடுசெய்துள்ளன: இவை உற்பத்தியாளர்களின் நேரடியான ஜனநாயக வலுவின் தோற்றுவாயைத் தடை செய்த பொலிஸ்-ராஜ்ய கட்டுமானத்தினை நலிவடையச் செய்துள்ளன. எவ்வாறிருந்த போதிலும் ஸ்ராலினிஸ பொலீஸ் ராஜ்யத்தின் மறைவிற்கும் சோவியத் ஜனநாயகத்தினது அல்லது சமூக அல்லது லிபரல் ஜனநாயத்தினது தோற்றுவாய்க்குமிடையில் கூட தன்னியக்கத் தொடர்புகள் எவையுமே இருக்கவில்லை. ஸ்ராலினிற்குப் பிற்பட்ட சமுதாயத்தின் வரைவிலக்கணங்கள் ஆய்ந்தறிய வேண்டியவைகளாக உள்ளன. முதன்முதலில், மேலாதிக்கத்தின் புதிய வடிவங்களே தென்படுகின்றன. சிறுபான்மையினர் மீது ஆதிக்கஞ்செலுத்தும் இராணுவ வெறிகொண்ட இனரீதியான பெரும்பான்மையினர்; தொழில்மயவாதிகளின் புதிய அரசியல் வர்க்கம், மேல்நோக்கித்தூண்டிவிடப்பட்ட புத்திஜீவிகள், சுதந்திரமாகத் தொழிற்படும் முதலாளித்துவவாதிகள், தேசிய பிதுரார்ஜிதங்களை விற்றுத் தீர்க்க வல்ல இடைத்தரகர்கள் (லர்வலேஸா). அதிகாரத்தின் முதலாவது அடையாளம் ''சுதந்திரச் சந்தை'' கொள்கையிலிருந்து தோன்றிருந்தபோதிலும், தொழிற்சங்கங்கள் ராஜ்யகொள்கைக்கு இணங்கிப் போவதற்கு போலிஷ் ஆட்சியினரால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் புதிய வர்க்கமொன்றின் தோற்றமும் உருவாக்கமும் முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு முடிவாக இருக்கவில்லை.

கிழக்கு ஐரோப்பாவிற்கும் மேற்கிற்குமிடையிலுள்ள ஒருமைப்பாட்டினதும் சுதந்திரச் சந்தைப் பொருளாதாரக் கொள்கைகளின் அறிமுகப்படுத்தலினதும் நேரடி விளைவு எமது கண்ணுக்குப் புலனாகும் எதிர்காலத்தில் வர்க்க முரண்பாட்டின் ''இரண்டாவது அலையை'' தவிர்க்க முடியாத வகையில் உருவாக்கும். இந்த வகையில் ''சந்தை-ஜனநாயகங்ளை' மீளநிலை நிறுத்தும் மேற்கத்திய முயற்சிகள் முதிர்ச்சியடையாதவையாகவே இருக்கும். அசமத்துவங்கள், வேலையில்லாத் திண்டாட்டம், சரிந்து செல்லும் வாழ்க்கைத் தரங்களின் பாதுகாப்பின்மை, சுதந்திர-சந்தையின் மீளமைப்பிலிருந்து உருவாகும் சமூக, தொழிலிட உரிமைகள் அற்றுப்போதல் என்பவை தடைகளைத் தோற்றுவிக்கும். மேற்கு ஐரோப்பாவுடனான ஒருமைப்பாடு உயர் வளர்ச்சி வீதங்களையும் நவீனமயப்படுத்தலையும் விளைவுகளாகத் தருமென்ற சுதந்திரச் சந்தைச் சிந்தனாவாதிகளினதும் தொழில்மயவாதிகளினதும் நலிந்த எதிர்பார்ப்புக்கள் சந்தை-சோஸலிசத்தின் முன்னோடியான அயல் நாடாகிய யுகோஸ்லாவியாவின் அழிவுகரமான அனுபவத்தைக் கண்டுகொள்ளத் தவறிவிடுகின்றன. இந்நாட்டின் பணவீக்கம் நான்கு இலக்கங்களைக் கொண்டதாயுள்ளது; நாணயம் மூன்றாண்டுகளில் 50 மடங்கு பெறுமான வீழ்ச்சியடைந்துள்ளது; கடன்களை திருப்பிச்செலுத்த முடியாத நிலை எழுந்துள்ளது.

அதிகாரத் துரைத்தனக் கூட்டுத்துவத்திலிருந்து பூர்ஷ்வா தேர்தல் ஆட்சிமுறைக்கான சமாதானபூர்வமான மாற்றப் போக்குகளுக்கான வாய்ப்புகள் சிக்கல் நிறைந்தவையாகவே உள்ளன. ஸ்ராலினிஸ சித்தாந்தக் கருவிலிருந்து வெளிக்கிளம்பிய தேசியவாத, பிரதேசவாத மற்றும் பாசிச, பழைமைவாதச் சக்திகள் பழைமைவாத, லிபரல்வாத; சமூக ஜனநாயகப் பிரவாகத்துடன் பக்கஞ்சேர்ந்து நிற்கின்றன.

புதிய சந்தைக் கொள்கைகள், கிழக்கினதும் (ஏகபோகங்கள்) மேற்கினதும் (கட்டுப்படுத்தப்படாத விலைகள், வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் பாதுகாப்பின்மை) மோசமான குரல்களின் கூட்டாக இருக்கிறது என்பது தெளிவாகும். கிழக்கத்தைய சித்தாந்தவாதிகள், அரசினால் கட்டுப்படுத்தப்பட்டு, வழிப்படுத்தப்படும் மேற்கு ஜப்பான் மற்றும் புதிதாக தொழில் வளர்ச்சி கண்ட நாடுகள் என்பவற்றின் முதலாளித்துவத்தையன்றி, மேலைய முதலாளித்துவத்தின் சுதந்திர சந்தை கருதுகோளினையே ஏற்றிருக்கிறார்கள். அந்த வகையில் இவர்கள் இலத்தீன் அமெரிக்க மேட்டுக்குடியினரின் பாதச்சுவடுகளைப் பின்பற்றிச் செல்பவர்களாக இருக்கிறார்கள். அதனால் அதே பின்விளைவுகளை இவர்களும் சந்திக்க வேண்டி இருக்கும். இந்த சுதந்திர சந்தை சித்தாந்தவாதிகளின் அபிலாஷைகளுக்கு மாறாக, கிழக்கைரோப்பா, இலத்தீன் அமெரிக்கமயமாகும் ஒரு போக்கினையே நாங்கள் காணக்கூடியதாக இருக்கும். கிழக்கைரோப்பா, வசதி படைத்த தேசிய அரசியல் இடைத்தரகர்களுக்கூடாக மேற்கின் ஆதிக்கத்துக்கும் சூறையாடலுக்கும் உள்ளாகியுள்ளது. இந்த இடைத்தரகர்கள் மலிவான ஊழியச் சந்தையை ஏற்பாடு செய்து, தேசிய மூலவளங்களை விற்றுத்தீர்த்து வருகிறார்கள். இந்தப் பின்னணியிலேயே வெகுஜன எழுச்சியின் இரண்டாவது சுற்று இடம்பெற வாய்ப்பிருக்கிறது.

1980 களை விளக்குவதற்கு பொதுவாக பயன்படுத்தப்படும் பதம் 'இழக்கப்பட்ட தசாப்தம்' என்பதாகும். சுதந்திர சந்தை பொருளாதார நடவடிக்கைகளின் அனுசரணையின் கீழ், மேலைத்தேச முதலாளித்துவத்தின் நிதி மற்றும் முதலீட்டு சுற்றுகளுக்குள் ஆழமாக அமைப்புரீதியாக ஒருங்கிணைக்கப்பட்டதன் மூலம் இலத்தீன் அமெரிக்கா இருபதாம் நூற்றாண்டில் கண்ட மிக மோசமான

# சோஷலிசம் எங்கு செல்கிறது?

நெருக்கடியை சந்தித்தது. வருமானங்கள் 1960 களின் ஆரம்பத்தில் நிலவிய மட்டங்களுக்கு வீழ்ச்சி கண்டன, இன்னமும் வீழ்ச்சியடைந்து வருகின்றன. போஷாக்கின்மை எங்கும் பரவியுள்ளது. பணவீக்கம் நாலு இலக்க மட்டத்தை அடைந்திருக்கிறது. திறந்த பொருளாதாரங்கள் ஊக மூலதனத்தின் எழுச்சிக்கும், சுற்றுச் சூழல் சீரழிவுக்கும், பேரளவிலான மூலதன வெளிப்பாய்ச்சலுக்கும் இடமளித்திருக்கின்றன. இந்த பின்புலத்தில் சந்தைச்சக்திகளுக்கும் அவற்றை இயக்குபவர்களுக்கும் சவால் விடுக்கும் பாரிய சமூக இயக்கங்கள் எழுச்சியடைந்துள்ளன. சோவியத்தின் கண்களுக்கு முன்னாலேயே, ஸ்டாலினிச அரசுகள் அமைதியாக வெளியேறியது போலன்றி, பழமைவாத, சமூக ஜனநாயக அரசுகள் தமது தாராள சந்தை பொருளாதாரங்களை வைத்திருப்பதற்காக பெரிய அளவில் வன்முறையையும், கொடூரத்தையும் ஆயுதங்களாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. பெரு நாட்டின் சமூக ஜனநாயகவாதியான அலன் கார்சியா, அந்நாட்டின் சமூக வரலாற்றின் கடுமையான அடக்கு முறைகளைக் கொண்ட காலகட்டமொன்றுக்கு தலைமை தாங்கி வருகிறார். இதுவரையில் 16,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். வெனிசூலாவிலும் மற்றும் மத்திய அமெரிக்காவின் பல நாடுகளிலும் இதற்கொப்பான நிலைமைகளே காணப்படுகின்றன.

''மேட்டுக்குடி - ஏற்றுமதி'' மாதிரிக்கும் அதன் மேற்கத்தைய ஆதரவாளர்களுக்கும் எதிராக பிராந்தியமெங்கும் பாரிய எதிர்ப்பலைகள் கிளர்ந்து வருகின்றன. பொருளாதார மாதிரிக்கு தெரிவிக்கப்படும் எதிர்ப்பு மட்டுமன்றி இந்த மாதிரியை முன்னெடுத்துச் செல்லும் தேர்ந்தெடுக்கப்பட்ட லிபரல் ஆட்சியில் மக்கள் பரவலாக வெறுப்படைந்துள்ளனர். மேற்கத்தைய பாணிக்கு எதிரான சுதந்திர தொழில் முயற்சி சமூக இயக்கங்கள் எங்கும் எழுச்சி கண்டு வருகின்றன. மெக்சிக்கோவில் கார்டினாஸ் இயக்கம் தேர்தல்களில் வெற்றியீட்டியிருக்கிறது. மெக்சிக்கோ நகரில் மட்டும் அது 55 சதவீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருந்தது. ஆனால், அமெரிக்க ஆதரவு ஸாலினாஸ் – பீ.ஆர்.ஐ. குண்டர் கும்பல் தில்லு முல்லுகளைச் செய்துவிட்டது. பிரேசிலில் தொழிற் சங்கங்களையும், ஏனைய ஸ்தாபனங்களையும் அடிப்படையாக கொண்ட தொழிலாளர் கட்சி, மேலைத்தேச வங்கியாளர்களுக்கும், அவர்களது உள்ளூர் கூட்டாளிகளுக்கும் அதன் திட்டங்கள் மூலம் விடுத்த அறைகூவலையடுத்து இப்பொழுது இலட்சோப லட்சம் பிரேசில் வாக்காளர்களின் கட்சியாக மாறியிருக்கிறது. உருகுவே, பெரு போன்ற நாடுகளிலும் இத்தகைய வெகுஜன அமைப்புக்கள் அடித்தட்டு மக்களிடையே பரவலான ஆதரவைப் பெற்று வளர்ந்து வருகின்றன.

மேற்கத்தைய சார்பான சுதந்திரச்சந்தை கொள்கைகளை பின்பற்றிவரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள், தமது, மக்கள் ஆதரவு இல்லாத கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காக இப்பொழுது அதிகரித்த அளவில் இராணுவ உதவியை நாடி வருகின்றன. அரசியல் வாழ்க்கையை இராணுவமயமாக்கும் இந்த போக்கு அரசியல் மைய அமைப்பின் சீர்குலைவுக்கு வழி கோலியிருக்கிறது. இந்த படிமுறையில் சந்தைகளை திறந்து விடுதவதானது, சிறைக்கூடங்களை விரிவாக்குவதுடன் இணையாக இடம் பெற்று வருகிறது. மறுபுறத்தில், சமூக - அரசியல் இயக்கங்கள் தாராளவாதத்துக்கும், முதலாளித்துவத்தின் தோல்விக்கும் அப்பால் சென்று வெகுஜன அடிப்படையில் தேசிய ரீதியில் கட்டுப்படுத்தப்படும் சமூக - பொருளாதார மாற்று அமைப்புக்களை தேடி வருகின்றன.

கிழக்கில் அரச ஸ்டாலினிசம் வீழ்ச்சியடையும் அதே வேளையில், மேற்கில் சூறையாடல், கடன், மூலதன வெளியேற்றம் போன்ற நெருக்கடிகளால் தாராள சந்தை பொருளாதாரங்கள் வீழ்ச்சியடைந்து வருவதனால் ஸ்டாலினிச சுதந்திர பொருளாதார அமைப்பொன்று எழுச்சியடைந்துள்ளது. எனினும், தாராள - சந்தை ஆட்சியின் வீழ்ச்சி, அதன் வழியில் பல்வேறு வரலாற்றுரீதியான மாற்று வழிகளை எடுத்து வருகிறது – கொலைக் கும்பல் ஜனநாயகங்களின் தோற்றம், ஜனநாயக சோஷலிசம் அல்லது மேலும் சீர்குலைவு என்பனவே அவை. பிராந்தியத்திலிருந்து வெளியேறுவதற்கு மேற்கு - குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா – மறுப்பதானது நிலை மாற்றத்தை செலவு மிகுந்ததாக்கியுள்ளது. கேந்திர அரசியலிருந்து சோவியத்தின் வெளியேற்றமும் அதே நேரத்தில் ஐக்கிய அமெரிக்க மேலாதிக்க திணிப்பும் மூன்றாவது உலகு மீது கடும் சுமைகளை எடுத்து வருகிறது.

சோவியத் பேரரசு நிலைகுலைந்து வரும் அதே வேளையில், ஐக்கிய அமெரிக்கா அதன் வாடிக்கை நாடுகள் மீதான கட்டுப்பாட்டை வைத்திருப்பதற்கும், இதுவரையில் போட்டிக்குரியதாக இருந்த பிரதேசங்களில் அதன் செல்வாக்கை விஸ்தரிப்பதற்குமான முயற்சிகளை தீவிரப்படுத்தி வருகிறது. ஐக்கிய அமெரிக்க மேலாதிக்கத்தை மீளப்பெறுவதற்கு வசதியாக ஒத்துழைப்பு வழங்குதல் என்ற வகையிலேயே வாஷிங்டன் சோவியத் 'சீர்திருத்தங்களுக்கு' வரைவிலக்கணம் கொடுத்திருக்கிறது. ஆயுதப்பரிகரணத்தை விளங்கிக் கொள்வதற்கான திறவுகோல் பரஸ்பர

மின்மையே: அதாவது சோவியத் செல்வாக்கின் ஒரு தலைப்பட்ச வாபஸ் வாங்கலும் ஐ. அமெரிக்க அதிகாரத்தின் போட்டியற்ற நிலை நிறுத்தலுமாகும். நிகாராகுவா, போலந்து போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நிகழ்ந்த அரசியல் மாற்றங்கள் குறித்த அமெரிக்க மற்றும் சோவியத் எதிர்விளைவுகளை ஒப்பிடுப்பார்த்தல் பொருத்தமானதாகும். கிரெம்ளினுக்கு இசைவாக கம்யூனிஸ்டுகளால் கட்டுப்படுத்தப்பட்டிருந்த போலந்து, பாராளுமன்ற முதலாளித்துவ அரசொன்றாக நிலைமாற்றமடைந்ததனை சோவியத் யூனியன் ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த நிகழ்வுப் போக்கில், மாஸ்கோ, தேர்தல் படிமுறையில் நீதிசார் முறையில் தலையிடவில்லை; முதலாளித்துவத்துக்கான நிலைமாற்றத்தை தடுக்கும் நோக்கில் ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கவோ, ஏற்பாடு செய்யவோ இல்லை. மாறாக, நிகாராகுவாவில் ஐக்கிய அமெரிக்கா அதன் அரசியல் கூட்டாளிகளை மீளக்கொண்டு வருவதற்கான இராணுவ முயற்சியை தொடர்ந்து நிதிப்படுத்தி வருகின்றது.

கிழக்கு ஐரோப்பா அரச வன்முறை எதனையும் சந்திக்காது ஜனநாயக வழிக்கு வந்து கொண்டிருக்கும் அதே வேளையில், மத்திய அமெரிக்க ஜனநாயக இயக்கங்கள், மிக மோசமான ஸ்டாலினிச கொடுங்கோன்மைக் காலகட்டத்துக்கு இணையான முறையில் அரச வன்முறைக்கு இரையாகி வருகின்றன. பல்லாயிரக் கணக்கான செக்கோஸ்லாவக்கிய, கிழக்கு ஜேர்மனிய மக்கள், ஒரு மரணம் கூட நிகழாத முறையில் பாரிய ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டு வரும் அதே வேளையில், எல் சல்வடோரில் ஒரே நாளில் பத்து தொழிற்சங்க தலைவர்கள் கொலை செய்யப்பட்டதனையடுத்து ஆறு ஜேசுயிஸ்டுகள் கொல்லப்பட்டனர்.

கம்போடியாவிலிருந்து கம்யூனிச சக்திகள் வெளியேறிவரும் அதே வேளையில், பொல்பொட் தலைமையிலான எதிர்க்கட்சிக்கு அமெரிக்கா அதன் ஆதரவை தொடர்ந்து, அதிகரித்த அளவில் வழங்கி வருகிறது. மேற்கு, சோவியத்தின் வெளியேற்றத்தை அதன் பலவீனமாக கருதி தனது மேலாதிக்கத்தை ஸ்தாபித்துக் கொள்ளக் கூடிய நல்ல சந்தர்ப்பமாக காண்கிறது.

மூலதனத்துக்கும் அரசுக்கும் இடையிலான இந்த பிளவு, மீள் உற்பத்தி மற்றும் மூலதனத்தைப் பாதுகாத்தல் என்பன குறித்த செலவுகள் அனைத்தையும் அரசு (அதாவது வரி செலுத்தும் மக்கள்) ஏற்க வேண்டும் என்பதனையே காட்டுகிறது. அதே நேரத்தில் இலாபம், வட்டி வாடகை என்பன சர்வதேச ரீதியாக திரண்டு வருகின்றன. இதற்கிணையாக, போலி மூலதனத்தின் எழுச்சியும், கைத்தொழில் மூலதனத்தின் கூட்டுமொத்த சீரழிவுக்கு வழிகோலியுள்ளன. இதன் விளைவாக, குடும்ப அமைப்பு உறுதிகுலைந்து, பேரளவிலான போதைப் பொருள் பொருளாதாரமொன்று தோன்றுவதற்கான அடித்தளம் உருவாக்கப்பட்டுள்ளது. இது குற்றச் செயல்களின் பெருக்கத்தையும் எடுத்து வரும். எனவே, கைத்தொழில் மூலதனம் போலி மூலதனமாக மாறும் நிலையை உடனடுத்த, பேரளவு அமைப்பு ரீதியான மாற்றங்களிலேயே குற்றச்செயல்கள் மற்றும் போதைவஸ்து பிரச்சினை என்பவற்றுக்கான வேர்களை காண வேண்டும். போலி மூலதனத்தின் எழுச்சி குறித்த பிரச்சினை தீர்க்கப்படாத பட்சத்தில் போதை விஸ்துக்களுக்கு எதிரான எந்த இயக்கங்களும் பயனளிக்கப்போவதில்லை.

வெகுஜன மகளிர் இயக்கங்கள், கறுப்பின சமூக அமைப்புக்கள் மற்றும் சுற்றுச் சூழல் இயக்கங்கள் ஆகிய அனைத்தும் பொருளாதாரத்தின் மையப்பிரச்சினையை எதிர் கொள்கின்றன - பொருளாதாரத்தை கட்டுப்படுத்தும் மூலதன வர்க்கமே இங்கு மக்களனைவரையும் பாதிக்கும் முதலீட்டினையும், கடன்களையும் நெறிப்படுத்தி வருகிறது. போலி மூலதனத்தின் எழுச்சியானது, கறுப்பினத்தவருக்கு ஒரு சில தொழில் வாய்ப்புக்களையே வழங்குகிறது. சுகாதார பராமரிப்புக்கு அது ஒதுக்குகளை செய்வதில்லை. அத்துடன் அது சுற்றாடலை, உரித்து விற்பனை செய்யக்கூடிய ஒரு பண்டமாக காண்கிறது. இந்த இயக்கங்கள் அடக்குமுறையினதும், சீரழிவினதும், மூல காரணங்களை எதிர்கொள்ளும் போது அரசின் வர்க்க குணாம்சத்தையும் பொருளாதார சக்தியின் ஒழுங்கமைந்த தன்மையையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளன.

அதிகாரத்தை பயன்படுத்துவதிலும் எதிர்ப்பைக் காட்டுவதிலும் கலாசாரம்–குறிப்பாக வெகுஜன கலாசாரம் - முக்கிய பங்கினை வகிக்கிறது. ஆனால், கலாசாரம் ஒரு 'சுதந்திர தளமாக' இருக்கவில்லை. வர்க்கங்களுக்கிடையிலான இடைவெளிகள் விரிவடையும் போது, சேமநல அரசு ஒழிக்கப்படும் போது, குடும்பங்களும் சமூகங்களும் சீர்குலையும் போது பொருளாதார யதார்த்தங்களிலிருந்து மக்களது கவனத்தை திசைதிருப்புவதில் கலாசாரம் தீர்க்கமான ஒரு பங்கினை வகிக்கிறது. வர்க்கப் போரும் கலாசார ஆர்வமும் ஒரே யதார்த்தத்தின் இரு பக்கங்களாகும். வெகுஜன தொடர்பு சாதனங்களை எதிர்க்கட்சிகளுக்கு கிடைக்கக் கூடியதாக செய்வதுடன் கலாசார நடவடிக்கைகள் ஆரம்பமாகின்றன. கிழக்கைரோப்பாவில் வெகுஜன இயக்கங்களின் முக்கியமான கோரிக்கையொன்றாக இது இருந்து வந்துள்ளது. இன்றைய நவீன உலகில் எந்தவொரு ஜனநாயக, சமூக

இயக்கமும், தொடர்பு சாதனங்கள் அரசின் தனிப்பட்ட கருவியொன்றாக இருக்கும் நிலையிலிருந்து மாறி வெகுஜன அபிலாஷைகளையும், கோரிக்கைகளையும், போராட்டங்களையும் பிரதிபலிக்கக் கூடிய விதத்தில் அமைய வேண்டும் என்ற வேண்டுகோளினையே முன் வைத்து வருகின்றன.

### 1990 களில் அரசியல் போராட்டம்

முதலாளித்துவத்துக்கு எதிராக சல்வடோர் தொழிலாளர் வர்க்கம் பாரிய எழுச்சியை காட்டியிருக்கிறது ஐக்கிய அமெரிக்காவில் முதலாளித்துவ அரசின் மேன்மைக்கு எதிராக சமூக அடிபட்ட அளவில் வெகுஜன அமைப்புக்கள் உருவாகி வருகின்றன. மேற்கத்தைய உலகின் வேறெந்த நாட்டைப் பார்க்கிலும் ஐக்கிய அமெரிக்க மேல் மட்ட அரசியல் தளத்தில் – காங்கிரசிலோ அரசியல் கட்சிகளிலோ-அரசியல் பிரதிநிதித்துவம் குறிப்பாக தொழிலாள வர்க்கம் மற்றும் வெகுஜன நலன்கள் மிகக்குறைந்த அளவிலே காணப்படுகிறது. சிவில் சமூகத்தின் ஜனநாயக அமைப்புக்களுக்கும் அரசியல் வாழ்க்கையில் ஏகபோகம் வைத்திருக்கும் அரசியல் உயர் பீடத்துக்குமிடையே விரிசல் காணப்படுகிறது. சிவில் சமூகத்திலிருந்து எழுந்து வரும் அரசியல் இயக்கங்கள், உள்ளூர் அடிமட்ட குழுக்கள், ஒரு கட்சி முறையிலிருந்து பல கட்சி முறைக்கான தேவை ஏகபோக தொடர்பு சாதன முறையிலிருந்து பன்முகத்தன்மை கொண்ட தொடர்பு சாதன முறைக்கு மாறுதல் என்பவற்றைச் சுற்றியே 1990 களில் அரசியல் போராட்டங்கள் அமையும்.

புதிய அரசியல் இயக்கமொன்றின் எழுச்சியே இன்றைய தேவையாகும், அதன் அரசியல் மையத்தில் உயிரினச் சூழல், மகளிர் இயக்கங்கள், கறுப்பு, வெள்ளை தொழிலாளர் வர்க்கம் என்பன குறித்து அதிகளவில் கவனம் செலுத்தும் இயக்கமாக இது இருக்க வேண்டும். முதலாளித்துவ வர்க்கம் என்ற பொது எதிரிக்கு எதிராக அது தனது சக்தி அனைத்தையும் ஒன்று திரட்டிக் கொள்ள வேண்டும். சூழல் மாசடைதல் தொழில் பாகுபாடு, வேலையின்மை, பிரச்சார சாதனங்கள் போன்ற அனைத்தையும் இந்த முதலாளித்துவ வர்க்கமே கட்டுப்படுத்துகின்றது. மத்திய அமெரிக்க இயக்கங்கள் எமக்கு உற்சாகமூட்டுவனவாக இருக்கின்றன. இந்த இயக்கங்கள் தமது போராட்டத்தை, இறுதிவிளைவு வரையில் முன்னெடுத்துச் செல்ல தயாராக உள்ளன. கிழக்கினதும் தெற்கினதும் இயக்கங்களிலிருந்து மிகச்சிறந்த பாரம்பரியங்களையும் நடைமுறைகளையும் நாம் பெற்றுக் கொள்வோம் தெற்கின் முதலாளித்தவ எதிர்ப்பும், கிழக்கின் ஸ்டாலினிச எதிர்ப்பும் சேர்ந்து உண்மையான ஜனநாயக சோஷலிச சமூகமொன்றை கட்டியெழுப்ப முடியும்.

( 8 ம் பக்கத் தொடர்ச்சி )

நினைத்திருக்கலாம். எவ்வாறாயினும், அவர் பிற்கால ஜாரிஸ ருஷ்யாவில் கிராமிய சமூக உறவுகளின் வளர்ச்சி பற்றிய மிகச் சிறந்த ஆய்வுரையின் கர்த்தா மார்க்சைப் போலல்லாமல், விவசாயிகளைப் பற்றி அவர் ஆகக் குறைந்து ஆராய்ச்சியையாவது நடத்தியிருந்தார். ஆயினும், அவருடைய ஓரளவு மேதைமைத்துவ ஆய்வை அரசியல் உபாயங்களுக்கான பாடங்களாக மாற்றியமைப்பதில் ஓர் தொழில்முறைப் புரட்சியாளரின் திறமையுடன் கையாளும் கொள்கைகளின் பிடியில் அதிகம் சிக்குண்டிருந்தார். லெனின் மெய்யாகவே புதிய பொருளாதாரக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருந்தாரா?

ருஷயா ஓர் அரைப்புற எல்லைப் பகுதி நாடாக இருந்தது, அதன் தலைமைத்துவம் (இங்கு வொன் விட்டேயிலிருந்து ஸ்டாலின் வரையில் ஒரு தொடர்ச்சித் தன்மை இருக்கிறது) நாட்டின் துரிதத் தொழில் மயமாக்கத்தைத் தனது உலக – பொருளாதார முதன்மையாக வரையறுத்தது என்ற உண்மை காரணமாக ''சோஷலிஸமும் மின்சாரமும் சேர்ந்தால் கம்யூனிஸத்துக்குச் சமம்'' என்ற லெனினின் கோஷம் மாஸ்கோவில் மிகச் சில ஆண்டுகள் வரையில் பெரும் பதாகைகளில் தொடர்ந்தும் தொங்கிக் கொண்டிருந்தது. தலைமைத்துவம் முழுவதும் ''மூலதனத்தின் சோஷலிஸத் திரட்சியில்'' நம்பிக்கை வைத்தன; இக் குறியிலக்கைப் பின்பற்றுவதில் தம்முடைய மாபெறும் வெற்றி பற்றி, 1980ம் ஆண்டுகள் வரையில் இது உத்வேகம் தரும் என்று நம்பின. உருக்கு ஆலைகள்தான் சோஷலிஸத் திட்டமிடலின் எல்லாமாகவும் முற்று முழுதாகவும் இருக்குமாயின், பறிமுதல் செய்யப்பட்ட பாட்டாளி வர்க்கமாக்கப்பட்ட விவசாயிகளின் நிலைமைக்கு அதிகம் பரிவுணர்வு இருக்க முடியாது. அவ்வப்போதான உபாய ரீதியிலான பின்வாங்குதல்; ஆம் அடிப்படை வசதி ஒருபோதும் இல்லை!

ஓர் புக்காரின்வாதியாக இருப்பது இன்று கஷ்டம். புக்காரினின் மிதவாதக் கொள்கைகள் அரசியல் ரீதியில் சாத்தியமுள்ளவையாக இருந்தன என்பது தெளிவற்றது. எவ்வாறாயினும் அக்கொள்கைகள் நின்று நிலவவில்லை. அவரின் கொள்கைகளைப் பின்பற்றினால சோவியத் அரசு மெய்யாகவே ஜீவித்திருக்க முடியும் என்பதில் 1920ம் ஆண்டுகளில் இருந்த அரசியல் – ரீதியில் செயலூக்கமாக விளங்கிய பெரும் பகுதியினர் மெய்யாகவே இணங்குவிக்கப்படவில்லை என்பதுதான் அக்கொள்கைகள் நின்று நிலவாமைக்கு அடிப்படையான காரணம் என நான் நம்புகிறேன்

(அடுத்த இதழில் முடியும்)

# பெரித்ஸ்ரோய்காவும் சோஷலிசத்தின் எதிர்காலமும்

## ஒரு மூன்றாவது உலக கண்ணோட்டம்

தயான் ஜயதிலக

> தயான் ஜயதிலக - கொள்கை கற்கைகள் நிறுவனத்தில் மோதல் ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர். ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் உதவிச் செயலாளராகவும், 'லங்கா கார்டியன்' இதழின் இணை ஆசிரியராகவும் பணிபுரியும் அவர், குறுகிய காலம் வட - கிழக்கு மாகாண சபையின் திட்டமிடல் அமைச்சராகவும் செயலாற்றியுள்ளார். பின்னர், அமைதிப்படையின் நீண்டகால பிரசன்னம் என்பவற்றை உள்ளடக்கிய கொள்கை வேறுபாடுகள் காரணமாக மாகாண சபையிலிருந்து ராஜினாமா செய்தார். சோவியத் தூதுவராலய தகவல் பீரிவின் பெரித்ஸ்ரோய்கா ஆய்வு வட்டத்தில் அண்மையில் அவர் நிகழ்த்திய உரையொன்றின் சற்று மாறுபட்ட வடிவமே இக்கட்டுரையாகும்.

சோஷலிசம் அதன் அனைத்துப் பரிமாணங்களிலும் பாரிய மீள் சிந்தனையொன்றுக்கும் மீள் ஒழுங்கமைப்பொன்றுக்கும் உள்ளாகி வருவது தவிர்க்கமுடியாததாகும். ஏனெனில், மனித வரலாறு இப்பொழுது ஒரு புதிய கட்டத்தில் பிரவேசித்திருக்கிறது. உறவுகள் அனைத்தும் மாற்றமடைந்து வருகின்றன; அல்லது மாறியிருக்கின்றன; அல்லது கேள்விக்குரியனவாகி இருக்கின்றன. அதனால் எம்முடைய கருத்துக்கள் அனைத்துமே ஆழமான, விஞ்ஞானபூர்வமான மீள் பரிசிலனைக்கு உட்படுத்தப் படுதல் வேண்டும். இலங்கையில் வாழும் நாம் இந்த மாற்றங்களின் ஆழத்தினையும், பரிமாணங்களையும், இவை எடுத்து வரக்கூடிய தாக்கங்களையும் பற்றி சரியாக விளங்கிக் கொண்டுள்ளோம் என எனக்குத் தோன்றவில்லை. எமது முற்போக்கு-அணி உலகளாவிய முற்போக்கு அணியும் கூட-இந்த மாற்றங்களின் வேகத்துக்கு ஈடு கொடுத்திருப்பதாக தெரியவில்லை.

ஆனால், உலக சோஷலிச இயக்கம் இதற்கு முன்னர் இப்படி எதிர்வினையின்றி வெறுமனே இருந்தது கிடையாது. உலகெங்கணுமிருக்கும் சோஷலிஸ்டுகள் கடந்த ஒன்றரை நூற்றாண்டு காலமாக சர்வதேச மாற்றங்களை உடனுக்குடன் உணர்ந்து இயங்கி வந்துள்ளனர். மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இருவரினதும் எழுத்துக்களையும், கடிதங்களையும் நாம் பார்த்தால், அவர்கள், ஐரோப்பாவில் மட்டுமன்றி வெகு தொலைவில் இந்தியாவில் இடம் பெற்ற பல்வேறு அரசியல் அபிவிருத்திகளைக் கூட உன்னிப்பாக அவதானித்து வந்திருக்கிறார்கள் என்பதனை காண முடிகிறது. அத்துடன் தமது சித்தாந்தங்களை ஆக்கிக் கொள்வதில் அவர்கள் இவற்றையும் கருத்தில் கொண்டே செயற்பட்டார்கள். பாரிஸ் கொம்யூன் குறித்த அவர்களது நிலைப்பாட்டை உதாரணமாக காட்டலாம். ஏற்கனவே தயார் நிலையில் இருக்கும் அரச அமைப்பை பாட்டாளி வர்க்கத்தினால் கையேற்க முடியாதென்றும், அதற்கு அந்த அமைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கருதினர். முக்கியமான அரசியல் நிகழ்வொன்றினை ஆய்ந்தோய்ந்து பார்த்து, அதன் மூலம் அவர்கள் எடுத்த முடிவினை இது தெளிவுபடுத்துகிறது. லெனின் மற்றும் அவரது சமகாலத்தவர்கள் கூட , இவ்விதமே நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், நாங்களோ இந்த மாற்றங்களின் வேகத்தைக் கண்டு ஒன்றில் திகைத்துப் போகிறோம்; அல்லது வெறுமனே தேங்கிக் கிடக்கிறோம். உலக சோஷலிச இயக்கம்,இப்பொழுது இடம்பெற்று வரும் மாற்றங்களுடன் இன்னமும் கைகோர்த்துச் செல்வதாக தெரியவில்லை. இவற்றுக்கான எதிர்விளைவுகள் தாறுமாறானதாகவும்,மேலோட்டமானதாகவும் இருக்கின்றன. நாங்கள் 'சோஷலிசம்' என்ற பதத்துக்கு முன்னால் 'ஜனநாயகம்' என்று போட்டுக் கொள்கிறோம். இது வெறும் சொல் அப்பியாசம் மட்டும் தான். ஆனால், முற்றிலும் புதிய உலகொன்றை, புதிய காலகட்டமொன்றை புரிந்து தெளிவு பெற்று, கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்பதனை நாங்கள் விளங்கிக் கொள்கிறோம் இல்லை. இந்த மாற்றங்களை விளங்கிக் கொள்வதில் புதிய கருத்தாக்கங்களை கண்டெடுத்து, புதிய பகுப்பாய்வு கருவிகளை உருவாக்கிக்கொள்ள வேண்டிய தேவை இருக்கிறது. தத்துவார்த்த மற்றும் சித்தாந்த ரீதியான விவாதங்கள், மார்க்சிச வரலாற்றில் எப்பொழுதும் ஒரு பாகமாக இருந்து வந்துள்ளன.

### மார்க்சிசம் என்றால் என்ன? சோஷலிசம் என்றால் என்ன?

இப்பொழுது, நான் சில கேள்விகளை எழுப்ப விரும்புகிறேன். முதலில் பெரித்ஸ்ரோய்கா பற்றி. பெரித்ஸ்ரோய்கா ஒரு புரட்சி என்று கோர்பச்சேவ் கூறினார். அவர் 1985 ல் பதவிக்கு வந்த போது சீர்திருத்தம் குறித்த அவரது சொந்தக் கருத்து, தற்போதைய கருத்திலிருந்து ஓரளவுக்கு மாறுபட்டதாக இருந்தது.

''மார்க்சிசம் என்றால் என்ன? சோஷலிசம் என்றால் என்ன? இந்தப் பிரச்சினைகள் இப்பொழுதுதான் நாங்கள் புரிந்து

கொள்ளத் தொடங்கியிருக்கிறோம்'' என்று டெங்ஸியாவோ பெங் சொன்னார். சோஷலிஸ்ட் என்பவர் யார் என்ற எமது கருத்தும் கூட மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டுமென நான் நினைக்கிறேன். போலந்து ஒரு சோஷலிச நாடா? சில 'தீவிர' சோவியத் பொருளியலாளர்களால் முன்வைக்கப்பட்ட சில யோசனைகள் அமுல் செய்யப்பட்டிருந்தால், சோவியத் யூனியன் எந்த வகையில் ஒரு சோஷலிச நாடாக இருந்திருக்க முடியும்? ஆகவே, சோஷலிசம் என்பது என்ன? அதனால், பூர்ஷ்வா மற்றும் பாட்டாளிவர்க்கத்தின் பங்கு குறித்த பல தொடரான அடிப்படை வினாக்கள் எழுப்பப்பட முடியும்.

செக்கோஸ்லாவக்கியாவில் ஹேவல் போன்ற ஒருவரின் செயல், பூர்ஷ்வாக்கள் மீண்டும் ஒருமுறை ஒரு புரட்சிகர வர்க்கமாக மாறிவருவதனையும், பூர்ஷ்வா ஜனநாயக புரட்சியொன்றை வழிநடத்துவதற்கான அவர்களது ஆற்றலையும் காட்டுகிறதா? பாட்டாளி வர்க்கம் தொடர்பான பிரச்சினையைப் பார்ப்போம். பல்லாண்டு காலமாக, புரட்சி குறித்த எமது கண்ணோட்டம், பூர்ஷ்வாக்களில் ஒரு பிரிவினர் பூர்ஷ்வா ஜனநாயக புரட்சியொன்றை தலைமை தாங்கி நடத்துவார்கள் என்பதாகவும், ஆனால் அதன் பின்னர், பாட்டாளிவர்க்கம் அதனை கைப்பற்றிக்கொள்ளும் என்பதாகவுமே இருந்தது. ஏனெனில், பூர்ஷ்வா ஜனநாயக புரட்சியை சோஷலிசமாக வளரச் செய்வதில் பாட்டாளி வர்க்கத்தினருக்கே அக்கறை இருக்கிறது. இடைப்பட்ட ஒரு கட்டமின்றி, அது 'நிரந்தரமாக' மேற்கொள்ளப்படும் என்று ட்ரொட்ஸ்வாதிகள் கூறினார்கள். இப்புரட்சி கட்டம் கட்டமாக நடைபெறும் என்றும் ஆனால் இந்த கட்டங்கள் தொடர்பு கொண்டவையாக இருக்கும் என்றும் லெனினிஸ்டுகள் கருதினார்கள்.

சமீப காலத்தில், பாட்டாளி வர்க்கம் போலந்தில் வகித்தது போன்ற ஒரு முக்கிய பங்கினை உலகின் வேறு எந்த நாட்டிலும் ஆற்றவில்லை. அதே போல, முழு அளவு மூலதனவாக்கமும், சந்தைப்படுத்தலாக்கலும் போலந்தில் போல வேறெங்கும் இடம் பெற்று வரவில்லை! ஆக, போலந்தில் பாட்டாளி வர்க்கத்தினர் பூர்ஷ்வா புரட்சியொன்றை நடத்தி வருகிறார்கள்! இவ்விதம் நடைபெறும் முதல் தடவை இதுவென்றே எண்ணுகிறேன். எமது சிந்தனையில் காணப்படும் அடிப்படைகளை இது ஆட்டம் காணச் செய்கிறது. தேக்க காலத்தில் பிறந்த சிந்தனைகளில் மட்டுமன்றி பிரஷ்னேவிய காலத்திய, ஸ்டாலின் கால சிந்தனைகளிலும் இது தாக்கத்தை ஏடுத்து வருகிறது. நாங்கள் பகுப்பாய்வுகளை மேற்கொண்டு எமது உபாயங்களையும், திட்டங்களையும் வகுக்கும் போது, பாரிஸ் கொம்யூனை மார்க்ஸ் எவ்விதம் கவனத்தில் எடுத்தாரோ, அதே விதத்தில் மேற்சொன்ன நிகழ்வுகளை கவனத்தில் எடுக்க நாங்கள் தவறிவிடக்கூடாது.

அப்படியாயின் அரசு எப்படியானது? அரசு என்பது உற்பத்தியின் ஆதிக்க உறவுகளுக்கு உத்தரவாதமளிக்கும் ஓர் அமைப்பு என்றே சொல்லப்படுகிறது. உற்பத்தி உறவுகளை நீங்கள் அச்சுறுத்துகிறீர்கள். இறுதியில் அரசு அவற்றை பலவந்தமான முறையில் பாதுகாக்கிறது. முதலாளித்துவ அரசு முதலாளித்துவ அமைப்பை பாதுகாக்கிறது. சோஷலிச அரசு சோஷலிச அமைப்பை பாதுகாக்கிறது. அரசின் மையத்தில் அதன் அடக்கியாளும் கருவி - இராணுவம், பொலிஸ் - இருக்கிறது. இப்பொழுது, ருமேனியாவில் ஆயுதப் படைகள் எத்தகைய பங்கினை வகித்திருக்கின்றன. உற்பத்தியின் ஆதிக்க உறவுகளின் உத்தரவாதிகளாக அவர்கள் செயல்பட்டார்களா? அங்கு இரகசிய பொலிஸ் உற்பத்தி உறவுகளை பாதுகாக்க முயன்ற அதே வேளையில், இராணுவம் அவ்வாறு செய்யாததேன்? என்னைப் பொறுத்தவரையில் இவை அனைத்தும் முக்கியமான கேள்விகள். அரசுக்கும் உற்பத்தி மாதிரிக்கும் இடையில் நிலவும் பங்கும் பணியும்என்ன? உற்பத்தியின் ஆதிக்க உறவுகளுக்கு உத்தரவாதமளிக்கும் பங்கினை அது நிறைவேற்றுவதா? அல்லது உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியின் தேவைகளுடன் இணங்கிச்சென்று செயற்படுவது அதன் பங்காக இருக்கிறதா? அப்படியானால், ருமேனியாவையும் ருமேனிய இராணுவத்தையும் என்னால் விளங்கிக் கொள்ள முடியும். ஏனெனில், முன்னர் நிலவியது, நிச்சயமாக உற்பத்திச் சக்திகளின் அபிவிருத்தியின் நலன்களுக்கு உகந்ததாக இருக்கவில்லை. சோவியத் யூனியனிலும் கிழக்கைரோப்பாவின் ஏனைய நாடுகளிலும் இந்நிலையே காணப்பட்டது. அந்த வகையில், விலங்குகளை களைந்தெறியும் விதத்தில் அது செயற்பட்டிருக்கிறது. அந்த விலங்குகள் எந்தளவு உறுதியானவையாகவும், வெளிப்படையானவையாகவும் இருந்ததோ அவற்றை களைவதில் இராணுவத்தின் பங்கு அந்தளவுக்கு பலாத்காரமானதாக இருந்தது. அப்படியானால், முன்னர் எமக்கு போதிக்கப்பட்ட விஷயங்களை இது அபத்தமாக்கிவிடுகிறது. மேலும் விளக்குகிறேன். இந்த பிரச்சினை பொருத்தமற்றதா? அரசுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் அல்லது உற்பத்திச் சக்திகளுக்கும் இடையில் ஏதாவதொரு வகையிலான உறவினை கண்டு பிடிக்கும் முயற்சியில் நாம் பிடிவாதமாக இருக்க வேண்டுமா? ஒருவேளை அரசுக்கும் பரவலாக பேசப்படும் இந்த உப அமைப்புக்குமிடையே அத்தகைய

தொடர்பு இல்லாதிருக்கலாம். அல்லது, முதலாளித்துவத்துக்குள் ஒரு வகை உறவுகளின் தொகுப்பு நிலவுகிறதா? அதாவது, இறுதியில் உற்பத்தியின் ஆதிக்க உறவுகளை அரசு பாதுகாக்கிறதா? அதே நேரத்தில், முதலாளித்துவமல்லாத அல்லது முதலாளித்துவத்துக்கு பிற்பட்ட (சோஷலிச, சோஷலிச பாதையிலான) அமைப்புக்களில் முற்றிலும் வேறுபட்ட ஒரு நிலை காணப்படுகிறதா? அரசு வித்தியாசமான குணாம்சங்களை, வித்தியாசமான, சட்ட விதிகளை, வித்தியாசமான இயக்கவியல் முறைகளை கொண்டிருக்கிறதா? அப்படியானால் அது ஒரு புதிய நிகழ்வாகும். நாங்கள் அது குறித்து சிந்திக்கவும், பேசவும் வேண்டும். கிழக்கைரோப்பிய அனுபவங்களிலிருந்து தோன்றி வரும் இரு வகைகளைச் சேர்ந்த வினாக்கள் இவை. இவை முக்கியமான அடிப்படை வினாக்கள். ஏனென்றால், வர்க்கங்கள், அரசு, உற்பத்தி உறவுகள் மற்றும் உற்பத்திச் சக்திகள் போன்ற எமது கோட்பாட்டின் அடிப்படை கட்டுமானப் பொருட்களுடன் இவை சம்பந்தப்பட்டுள்ளன.

பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், பூர்ஷ்வா சர்வாதிகாரத்தைவிட பன்மடங்கு பலம் வாய்ந்தது என்று முன்பு எமக்கு சொல்லப்பட்டது. அதனால், கிழக்கைரோப்பாவில் இந்த அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்து வந்த போது, அங்கு இதற்கு பேரளவிலான எதிர்ப்பு காட்டப்பட்டிருக்கும் என்று நான் எதிர்பார்த்திருப்பேன். ஆனால், சர்வாதிகாரமும் சர்வாதிகார அரசும் குலைந்துவிட்டன. உலகின் ஏனைய பாகங்களில் மாற்றங்களுக்கான உத்திகள் குறித்த விஷயத்தில் இது எதனை தெரியப்படுத்துகிறது? பின்வருவன இடம் பெற்றால் ஆயுதம் தங்கிய புரட்சி அவசியமாகாது என்பதனை அது காட்டுகிறதா?

(அ) குடிமக்கள் சமூகத்துக்கும் எமது அரசியலுக்கும் இடையில் பலம் வாய்ந்த ஒரு இடைத் தொடர்பு நிலவி வருதல்.

(ஆ) சக்திகளுக்கிடையிலான ஒரு சமநிலை, ஒரு கூட்டமைப்பு, ஒரு நிலைமை. அந்த நிலைமை என்ன? ஐக்கிய அமெரிக்காவின் பக்கத்தில் அதிக அக்கறை இருக்க வேண்டும்; மற்றும் தேவாலயம் சமூகத்தில் அதிக பலம் பொருத்தியதாக இருக்க வேண்டுமா? ஆயுதம் தாங்கிய போராட்டமின்றி, அடிப்படை மாற்றங்களை எடுத்து வரக்கூடிய நிலைமைகள் யாவை? அல்லது இது சில வகையான சமூகங்களில் மட்டும் சாத்தியமானதா? எல்சல்வடோரிலோ, கவுதமாலாவிலோ பிலிப்பைன்சிலோ இது சாத்தியப்பட முடியாதா? மார்க்ஸ், ஏங்கல்ஸ் என்போர் தமது காலத்தில் இடம் பெற்ற அரசியல் எழுச்சிகள் மற்றும் 1848 ம் ஆண்டு புரட்சி என்பவற்றிலிருந்து சில முடிவுகளைப் பெற்றுக் கொண்டது போல, லெனின் 1905 ம் ஆண்டு நிகழ்வுகளிலிருந்து முடிவுகளைப் பெற்றது போல கிழக்கைரோப்பிய நிகழ்வுப் போக்குகளிலிருந்து நாங்கள் எத்தகைய அரசியல் கேத்திரத்தன்மை கொண்ட முடிவுகளைப் பெறப் போகிறோம்? ஆனால், இலங்கையில் முற்போக்கு வட்டாரங்களில் இந்த விதமான கேள்விகள் எழுப்பப்படுவதை என்னால் காண முடியவில்லை. ஏன் உலக புரட்சிகர இயக்கத்தின் எழுத்துக்களிலும் இதனைக் காண முடியாதுள்ளது.

### ஸ்டாலின் பிரச்சினை

ஸ்டாலினிச மாதிரிகளை அப்புறப்படுத்துவதன் மூலம் சோவியத் மக்கள் இப்பொழுது மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு எனது பூரண ஆதரவு உண்டு. ஆனால், மூன்றாவது உலகில் வாழும் நாம் இந்தப் பிரச்சினையில் இதே கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும்என்பது அதன் கருத்தல்ல,ஒரு ஒப்புவமை மூலம் இதனை விளக்க விரும்புகிறேன். குழந்தைப் பருவத்திலிருந்தே எதேச்சாதிகார, கொடுமைமிக்க தந்தையினால் கட்டுப்படுத்தப்பட்டு வந்த ஒரு புதல்வன், கலகம் செய்வதற்கும், பிரிந்து செல்வதற்கும், தனது தந்தையை முற்றிலும் விமர்சிப்பதற்கும் நிச்சயமாக விரும்புவான். ஆனால், ஒரு தந்தை என்ற முறையிலன்றி அவருடன் வேறு வகையில் உறவுகளை வைத்துக் கொண்டிருக்கும் ஏனையவர்கள், அவர்களது அனுபவம் வித்தியாசமானதாக இருப்பதனால், மகன் மேற்கொள்ளும் எதிர்வினைகளையே தாமும் மேற்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. ஆகவே, ஸ்டாலின் குறித்த எமது அணுகுமுறை சோவியத் மக்கள் கொண்டிருக்கும் அதே அணுகுமுறையைக் கொண்டதாக இருக்க வேண்டியதில்லை. இந்த விமர்சனம் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், சோவியத் மக்களுக்கும் பயனுள்ளதும் அவசியமானதும் ஆகும். ஆனால், ஸ்டாலின் குறித்த இறுதி, முடிவான அல்லது மிகச் சரியான மதிப்பீடு அல்ல அது. ஸ்டாலின் எதிர்ப்புவாதிகள் அவரை விமர்சிப்பதற்கு பயன்படுத்தும் அதே அளவுகோல்களை, வேறு எந்த வரலாற்று நபர்கள் மீது பிரயோகிக்கப்பட்டாலும், அவர்களும் இதே விதத்தில் மறுதலிக்கப்பட வேண்டியவர்களாகி விடுவார்கள் என்று கூறுவேன். அப்படிச் செய்வதானால் சீசர் எதிர், நெப்போலியன் எதிர் என்று தொடங்கி நாங்கள் எமது சரித்திரங்களையே மறுதலிக்க வேண்டிய நிலை தோன்றும். அதனால் ஒரு விதமான சமநிலையும், வரலாற்றுக் கண்

ணோட்டமும் அவசியமானது என நான் நினைக்கிறேன் மூன்றாவது உலகு, கோர்பச்சேவின் திட்டங்களை அங்கீகரித்து ஆதரவளிக்கும் அதே வேளையில், ஸ்டாலின் குறித்த யதார்த்தமான அணுகு முறையொன்றை வைத்துக்கொள்வது சாத்தியமாகும்.

மார்க்சிசத்திலிருந்து முரண்பட்டுக் கொண்ட குழுவினர் இருக்கிறார்கள். உதாரணமாக, ட்ரொஸ்கியிஸத்தை கூறலாம். ட்ரொஸ்கியிஸ்டுகளைப் பொறுத்தவரையில், சோவியத் அதிகார அமைப்பு இரட்டைத் தன்மையைக் கொண்டதாகும். சோவியத் யூனியனின் பொருளாதார அடித்தளத்தை பாதுகாக்கும் வரையிலும் அது முற்போக்கானதாகும். ஆனால், வெளிநாடுகளில் அது புரட்சியை அடக்கிய போது, உலக புரட்சியைப் பொறுத்த வரையிலும் அது பத்தாம்பசலிக் கொள்கை கொண்டதாகும். ஆனால், இந்த கோட்பாட்டுக்கு மாறாக, கடுமையான ஸ்டாலின் எதிர்ப்புவாத அதிகார பிரிவுகள், சர்வதேச உறவுகளின் விஷயத்தில் பெருமளவுக்கு பழமை' பேணும் நிலையில் இருப்பதை நாங்கள் காண்கிறோம். சரியாக சொல்வதாயின், சோவியத் யூனியன் ஸ்டாலின் எதிர்ப்பு நிலையில் நின்றபோது, மூன்றாவது உலகின் தேசிய விடுதலை மற்றும் புரட்சிகர போராட்டங்களில் குறைந்த அளவிலான தோழமையுணர்வே காட்டப்பட்டது. சோவியத் நாட்டுக்குள் 'ஸ்டாலினிச' மறுமலர்ச்சி நிலையொன்று காணப்பட்ட 1970 களின் பின்னரைப் பகுதியிலேயே அந்நாட்டின் சர்வதேசியவாதமும், ஏகாதிபத்திய எதிர்ப்பும் உச்சகட்டத்தில் நிலவின. இன்று சோவியத் யூனியனுக்குள்ளிருக்கும் அதிகளவு லிபரல் மனப்பான்மை கொண்ட பிரிவினரே கியூபாவுக்கான உதவிகள் நிறுத்தப்பட வேண்டும் என்று வாதாடுபவர்களாகவும் இருப்பார்கள். ஆகவே, எமது சொந்த நிலைப்பாட்டினைத் தெளிவு செய்யும் விஷயத்தில், இந்தச் சிக்கல்கள் அனைத்தையும் நாம் கவனத்தில் எடுத்து பரிசீலிக்க வேண்டும். ஏனெனில், எங்களுக்கு தேவையான அனைத்தையும் ஒரு பந்தாக சுருட்டி எளிதில் பெற்றுக் கொள்ள முடியாது. அதிகளவில் தாராளத்தன்மை, அதிகார வர்க்க எதிர்ப்பு, உண்மையான சோஷலிட், சர்வதேசியவாதி, உலகப் புரட்சிக்கு ஆதரவு என்று எல்லாவற்றையும் ஒன்றுக்குள் அடக்கி விடமுடியாது.

சோவியத் யூனியனின் சர்வதேச தோழமையுணர்வு கால கட்டங்கள் கூட அவற்றின் பலவீனமான பக்கங்களை கொண்டிருந்தன. ஒரு புறத்தில், அவர்கள் சில ஆயுதம் தாங்கிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவு வழங்கினார்கள். இது சாதகமான பகுதி. அதே நேரத்தில், நம்ப முடியாத 'தேசிய ஜனநாயக அரசு' கோட்பாட்டினையும் அவர்கள் கொண்டிருந்தார்கள். இதன்படி, எந்த எதேச்சாதிகார ஆட்சியாளரும் ஒரு சில கைத்தொழில்களை தேசியமயமாக்கிய போது அதற்கு ஆதரவளிப்பதனை இந்த கோட்பாடு நியாயப்படுத்தியது. இப்பொழுது சோவியத் சிந்தனையாளர்கள் இதனை முற்றாக நிராகரித்திருக்கிறார்கள். இன்று, மூன்றாவது உலகுக்குள்ள மிகச் சிறந்த வழி, 'தேசியம்' அல்லாத வகையிலான, உலக பொருளாதார சுற்றோட்டங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும் முதலாளித்துவம் ஒன்றை அபிவிருத்தி செய்வதேயாகும் என்று அவர்கள் கூறிவருகிறார்கள்.

### ஐரோப்பாவின் எதிர்காலம்

ஐரோப்பாவின் உருவம் எப்படி அமையும்? அது ஒருங்கிணைந்து விடும் என்று பலர் எண்ணுகிறார்கள். ஐரோப்பிய இடதுசாரிகளிடையேயான தொடர்புகள் குறித்தும் சோஷலிச வட்டாரங்களில் நம்பிக்கை நிலவுகிறது. இது, 1915ல், 'ஐரோப்பிய ஐக்கிய அரசுகள்' என்ற சுலோகம் குறித்து ட்ரொஸ்கிக்கும் லெனினுக்கும் இடையில் நடைபெற்ற விவாதத்தை எனக்கு நினைவூட்டுகிறது. அகண்ட ஐரோப்பிய ஒருங்கிணைப்பு, துரிதகதியில் சோஷலிச அமைப்புக்கு வழிகோலும் என்றும், முதலாளித்துவம் குறுகிய காலத்தில் அபகீர்த்தியடைந்து விடும்போது எங்களுக்குரிய தருணம் வந்துவிடும் என்றும் பலர் நம்புகின்றனர். அந்த வழியிலும் அது செல்ல முடியும் என்றே நினைக்கிறேன். ஆனால், அது செல்லக்கூடிய வேறொரு வழியும் உண்டு. ஏற்றத்தாழ்வான அபிவிருத்தி என்று 1915ல் லெனின் குறிப்பிட்டதை நாங்கள் மறக்கக்கூடாது. உலக சோஷலிச அமைப்பிலிருந்து விடுபட்டுச்செல்லும் இந்த நாடுகள், முதலாளித்துவ ஐரோப்பாவின் முழுமையான பங்காளர்களாக ஒருங்கிணையப் போவதில்லை.

அந்நாடுகளின் பொருளாதாரங்களின் நிலை மற்றும் உலக முதலாளித்துவத்தின் வரையறுக்கப்பட்ட ஆற்றல்கள் என்பன காரணமாக அந்நாடுகளுக்கு இந்த அந்தஸ்தினை பெற்றுக்கொள்ள முடியாது போகும். ஆகவே, இந்நாடுகள் உலக முதலாளித்துவத்தின் மையத்தை சென்றடைய முடியாத நிலையில், அதன் புற எல்லைகளில் நிலை கொண்டு, அதன் பின்னர் உலக முதலாளித்துவ உயர் பீடத்தை அடைவதற்காக தமக்கிடையே கடுமையாக போட்டி போடத்தொடங்கும். கிராம்சி எவ்விதம் இத்தாலியின் தென் பகுதிகள் பிரச்சினையை - அதாவது நாட்டின் வட பகுதிக்கும், குறைவாக வளர்ச்சி கண்டிருந்த நாட்டின் தென் பகுதிக்கும்

இடையிலான பிரச்சினையை — சந்தித்தாரோ அதே போல ஐரோப்பிய மார்க்சிஸ்டுகள் கிழக்குப் பிரச்சினையொன்றை சந்திக்கவிருக்கிறார்கள். இது நாடுகளுக்கிடையிலான போட்டிக்கு மட்டுமன்றி, நாட்டுக்குள்ளே பிராந்தியங்களுக்கிடையிலான போட்டிக்கும் வழிகோலும். சந்தைப் பொருளாதாரத்துடன் சேர்ந்து அதிகரித்த அளவிலான பிராந்திய ஏற்றத்தாழ்வுகளும், இன முரண்பாடுகளும் - இது இப்பொழுது இடம் பெற்று வருகிறது — தோன்றும். அதனால், ஐரோப்பா மீண்டும் ஒரு முறை போராட்டங்களின் களமொன்றாக மாறிவிடும். உலக யுத்தம் இடம்பெறாது; ஆனால், ஐரோப்பிய ஒருங்கிணைப்பின் பின்புலத்தில் நிகழக்கூடிய ஏற்றத்தாழ்வான அபிவிருத்திகள் காரணமாக வன்முறைப் போராட்டங்கள் உருவாக முடியும். எல்லைகளைக் கடந்த விதத்தில் இன அம்சமும் இங்கு காணப்படுகிறது. எதிர்காலத்தில் ஐரோப்பாவில் பெருமளவுக்கு ஸ்திரமற்ற நிலை உருவாகலாம். இதன் விளைவாக, அமைதியான நிலை மாற்றம் இடம்பெறப் போவதில்லை. ஏனென்றால், அதிக வெறியும், தேசியவாதமும் ஐரோப்பாவில் நாசத்தை எடுத்து வர முடியும்.

புதிய கெடுபிடியுத்தத்தின் திருப்புமுனை போலந்திலேயே ஏற்பட்டது என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர் அதனை ஆப்கானிஸ்தானில் காண்கிறார்கள். திமோதி கஸ்டன் ஆஷ் என்பார் 1979ல் இடம்பெற்ற பாப்பண்டவரின் போலந்து விஜயத்தை இந்த திருப்புமுனையாக இனங்காண்கிறார். இதனையடுத்து, 1980ல் சொலிடாரிட்டி அமைப்பு உருவாகியது. வேறு சிலர் ஆப்கானிஸ்தானில் நிகழ்ந்த சோவியத் இழப்புக்களை முக்கியமாக சுட்டிக்காட்டுகிறார்கள். இந்த இரு நிகழ்வுகளும் சோவியத் யூனியன் மற்றும் சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சி என்பவற்றின் நிகழ்வுப் போக்குகளில் தீர்க்கமான தாக்கங்களை எடுத்து வந்தன. ஆனால், உலக சக்தி சமநிலையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இந்த நிகழ்வுகளில் எதுவுமே திருப்பு முனையாக இருக்கவில்லையென்றே நான் நினைக்கிறேன். 70களின் புரட்சி அலை, எப்பொழுது, எப்படி முடிவுக்கு வந்தது? எங்கு எப்பொழுது நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம்? இந்த திருப்பு முனை போலந்திலோ, ஆப்கானிஸ்தானிலோ ஏற்படவில்லை. மாறாக, எல்சல்வடோரிலேயே தோன்றிற்று என்பது எனது கருத்தாகும். வெறிபிடித்த எப்.பி.எல். ஆதரவாளர்கள், மனாகுவாவில் வைத்து அனா மரியாவை 81 முறை குத்திக்கொலை செய்தபோது அது உருவாகியது என ஒருவர் சொல்லலாம். அனா மரியாவின் கொலையும், அது எப்.பி.எல். பேராளிகளால் செய்யப்பட்டது என்பது கண்டுபிடிக்கப்பட்டதும் - எல்லாவற்றுக்கு மேலாக, மத்திய அமெரிக்க ஹோசிமின் என்றழைக்கப்பட்ட கயடானோ கார்பியோ இந்தக் கொலைக்கு இணக்கம் தெரிவித்ததும் (இது கண்டறியப்பட்டதும் மனாகுவாவில் கார்பியோ தற்கொலை செய்து கொண்டார்) — எல் சல்வடோர் புரட்சியின் தார்மிக வீழ்ச்சியை எடுத்துக் காட்டின. இந்த வீழ்ச்சியிலிருந்து அதன் பின்னர் மீட்சி பெற முடியவில்லை. கவுதமாலாவின் புரட்சிகர போராட்டத்தின் அதிர்ஷ்டங்களையும் இது பாதித்தது. இறுதிப் பகுப்பாய்வில், நிகாராகுவா, கியூபா புரட்சிகளையும் இது தனிமைப்படுத்திற்று. எல் சல்வடோர் புரட்சி வெற்றி கண்டிருந்தால், நிகாராகுவா அதன் தனிமைக் கூண்டிலிருந்து வெளியே வந்திருக்கும். ஐக்கிய அமெரிக்கா சொந்த பின்கட்டிலிருந்து முற்றுமுழுதாக வெளியேறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும்; அல்லது இராணுவரீதியாக தலையிட்டிருக்கும். எந்த வழியிலும் அது மிகப் பலம் வாய்ந்த உலக சக்தி என்ற அந்தஸ்தினை பங்கப்படுத்திக் கொண்டிருக்கும். ஆனால், எல் சல்வடோரில் தோன்றிய நிலை, நிகாராகுவா மற்றும் மத்திய அமெரிக்க புரட்சிக்கு எதிராக எதிர்தாக்குதலை தொடர்ந்து மேற்கொள்ள ஐக்கிய அமெரிக்காவுக்கு வாய்ப்பினை அளித்தது. 1975ன் பின்னர் ஏற்பட்ட சீன - வியட்னாமிய, வியட்னாம் — கம்பூச்சிய பிளவுகளின் விளைவாக தாய் புரட்சி வீழ்ச்சியடைந்ததன் உரத்த எதிரொலியே எல் சல்வடோரில் நடந்ததாகும்.

1981 / 82ல் மேற்கொள்ளப்பட்ட இறுதித்தாக்குதல் தோல்வியடைந்ததனையடுத்து எப். எம். எல். என். அமைப்புக்குள் ஏற்பட்ட நெருக்கடியே அனா மேரியாவின் கொலைக்கான மூல காரணம் என்று கூறுவேன். இந்த தாக்குதலுக்குப் பின்னர், இந்த இயக்கத்துக்குள்ளேயே பரஸ்பர கண்டனங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன. இது ஒரு தனி இயக்கமாக இருக்கவில்லை; பல குழுக்களை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்த அமைப்பாக இருந்தது. இந்த இயக்கம் தனது முழுச் சக்தியையும் போரில் பயன்படுத்தவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. மறுபுறத்தில் இந்த தாக்குதலின் தோல்வி, ''நீண்டு செல்லும் மக்கள் போர்'' என்ற தமது உத்தியின் செயற்தாக்கத்தை நிரூபிக்கிறது என்று இந்த இயக்கத்தினர் கூறினர். வியட்னாம் உள்ளிட்ட சோஷலிச நாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு அப்பொழுதுதான் திரும்பியிருந்த அனா மரியா, எப்.பி.எல். அமைப்புக்குள்ளேயே மாற்றுக் கருத்தொன்றை முன்வைத்தார். தற்போதைய சோஷலிசம் குறித்து அவர் சில விமர்சனங்களையும் முன்வைத்தார். இந்த விமர்சனங்கள் கோர்பச்சேவின் பெரித்ஸ்ரோய்காவுக்கு முற்பட்

டவை. பேச்சுவார்த்தை நடத்துவது குறித்த தெரிவினை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்பதையும் அவர் ஆதரித்துப் பேசினார். இதனை கார்பியோ கடுமையாக எதிர்த்ததுடன், இது அன்னா மேரியாவின் கொலைக்கு வழி கோலியது. அன்னா மேரியாவின் படுகொலையுடனும், கார்பியோவின் தற்கொலையுடனும் எப். பி. எல். குலைந்து போயிற்று.

எல் சல்வடோர் புரட்சிக்குள் இடம் பெற்ற உபாயங்கள் குறித்த விவாதத்துக்கும், இறுதி தாக்குதலின் தோல்விக்குமிடையில் தொடர்பிருப்பதாகவே நான் நினைக்கிறேன். 1980 ல் இடம் பெற்ற ஆர்ச் பிஷப் ரொமேரோவின் கொலையுடன் புரட்சிகர எழுச்சிக்கான தருணம் வந்து, போய்விட்டது என்று நான் நம்புகிறேன். ஜனரஞ்சகமான ஆயுதப்புரட்சியொன்றை தூண்டி விடுவதற்கு எப். எம், எல். என். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்த தவறிவிட்டது. சல்வடோரிய புரட்சியின் நகர்ப்புற வெகுஜன அமைப்புக்கள் 1975ல் மத்திய அமெரிக்காவிலேயே மிகப்பலம் பொருந்திய அமைப்புக்களாக இருந்தன. ஆனால், நீடித்த மக்கள் போர் குறித்த எப். பி. எல். உபாயமானது, 1980ல் கிடைத்த தருணத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கான அதன் விருப்பினையும், ஆற்றலையும் தடுத்து நிறுத்துவதாக இருந்தது. அதனால், பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்ற போதிலும் அரசியல் இராணுவ அணியின் முழுச்சக்தியையும் களத்தில் விடுவதற்கு எந்த முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. இவ்விதமாக எழுச்சிக்குரிய தருணம் வீணே கடந்து சென்றது. 1981 / 82ல் இறுதி தாக்குதல் தொடுக்கப்பட்ட போது சல்வடோர் நகர்ப்புறங்களில் நிலைமை மிக மோசமாக மாறியிருந்தது.

இந்த செயலின்மை நிலை, ஆயுதப் போராட்டம் குறித்த சேகுவேராவின் உத்தியை விமர்சனம் செய்யும் எப். பி. எல். நிலைப்பாட்டுடன் தொடர்புபட்டதாகும். கார்பியோ, சல்வடோரிய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த போது சேகுவேராவின் பொலிவிய டயரிக் குறிப்புக்களை (1969ல் என்று நினைக்கிறேன்) கடும் விமர்சன நோக்கிலான அறிமுகக் குறிப்பொன்றுடன் பதிப்பித்தார். எல்சல்வடோர் மற்றும் முழு இலத்தீன் அமெரிக்க - கிராமப்புற, நகர்ப்புற - நிலைமைகளின் அனுபவங்களை ஆராய்ந்து பார்த்து, கார்பியோவும் அவரது சகாக்களும் 'நீண்டு செல்லும் மக்கள் போர்' என்ற வியட்னாமிய மாதிரியையே தெரிவு செய்து கொண்டார்கள். அந்த நேரத்தில், வியட்னாமிய புரட்சி கண்டு வந்த வெற்றிகரமான முன்னோக்கிய பயணத்தின் பின்னணியில் இதனை புரிந்து கொள்ள முடியும். டெட் தாக்குதலின் முழு அனுபவத்தையும் எப். பி. எல். குறைவாக மதிப்பிட்டிருக்கிறது என்றே நினைக்கிறேன். வட வியட்னாமும் இருப்பதனால் வியட்னாமியர்களால் அவ்வளவு தான் செய்ய முடியும் என்று சல்டோரியர்கள் எண்ணினார்கள். குறிப்பிட்ட ஒரு உபாயத்தை அவர்கள் உறுதியாக பிடித்திருந்தமையே, 1980ன் புரட்சிகர வேளையின் புரட்சித்தன்மை ஆற்றலை அவர்கள் குறைவாக எடைபோட வழிகோலியது என்றே நான் நம்புகிறேன். இது மறுபுறத்தில், 1981/82 இறுதித் தாக்குதலின் தோல்விக்கு வழிகோலி, அன்னா மரியாவின் கொலையையும், கார்பியோவின் தற்கொலையையும் எடுத்து வந்தது. மத்திய அமெரிக்காவிலே – அந்நேரத்தில் முழு உலகிலும் – நன்கு அனுபவம் பெற்ற, வளர்ந்து வந்திருந்த அமைப்பொன்று இவ்விதம் சீர்குலைந்து போன அவலம், சல்வடோரிய புரட்சிக்கு ஈடு செய்ய முடியாத நட்டத்தை எடுத்து வந்தது. இது மூன்றாவது உலகில் ஏகாதிபத்தியத்துக்கும், புரட்சிக்கும் இடையிலான சக்திகளின் உறவில் ஒரு திருப்பு முனையாக இருந்தது. எல் சல்வடோரில் தாமாகவே தேடிக்கொண்ட காயமொன்றின் விளைவாக, சோஷலிச சக்திகள் புதிய கெடுபிடி யுத்தத்தில் தோல்வி கண்டனர்.

ஆனால், அதை விட்டு விடுவோம். எமது மிகப்பழைய சோஷலிச புரட்சிக்கு இப்பொழுது 72 வயதாகிறது. அமைப்புக்களினதும், இயக்கங்களினதும் வரலாற்றை நாம் எடுத்துப்பார்த்தால் இது ஒரு கண் இமைக்கும் நேரம் மட்டுமே. அதனால் இந்த வகையான பின்னடைவையும் எதிர்ப்புரட்சியையும் சமாளிக்க முடியும். அவை சாதகமான பின்விளைவுகளைக் கூட எடுத்துவர வாய்ப்பிருக்கிறது. பாரிய நெருக்கடிகள் ஏற்படும் கால கட்டங்களில், சங்கிலித் தொடரின் மிகப்பலவீனமான கண்ணி கழன்று விடுகிறது. மீளமைப்பின் போதும், மீள் ஒழுங்குபடுத்தலின் போதும் நெருக்கடி தோன்றுவதுண்டு. பூர்ஷ்வாக்கள் இதனையே செய்தார்கள். 1979க்குப் பின்னர் ஜிம்மி கார்ட்டரின் மனித உரிமை பிரச்சாரத்தையும், ரீகனின் தாக்குதலையும் பார்க்கிறோம். அதே வழியில் நாங்கள் செல்ல வேண்டுமென்று நான் கூறவில்லை. அவ்வாறு செய்வது சோவியத் யூனியனுக்கு சாத்தியப்படவும் மாட்டாது. ஆனால், நீண்ட வரலாற்றுப்பார்வையில் நோட்டமிட்டால், ஏனைய இயக்கங்களின் வரலாற்றை ஆராய்ந்தால், எதனையுமே நாம் இன்னும் இழந்துவிடவில்லை என்பது புலப்படும். மார்க்சிசம் உலகில் தோன்றிய மூன்றாவது மிகப்பெரிய மதம் என றெஜிஸ் டெப்ரே கூறினார். முதலிரண்டு கிறிஸ்தவமும் இஸ்லாமும் ஆகும். அதனை அவர் ஒரு பாராட்டாக தெரிவித்தாரா என்பது எனக்குத் தெரியவில்லை. ஆனால் சமீபத்

திய அபிவிருத்திகளின் பின்புலத்தில் பார்க்கும் போது, அது மிகப் பெரிய ஒரு பாராட்டாகவே தெரிகிறது. கிறிஸ்தவ மதம் முற்றிலும் ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து ரோமப் பேரரசின் தலைமைத்துவத்துக்கு எழுச்சியடைந்து வந்த வெற்றி வரலாற்றினையும், பல்வேறு உற்பத்தி மாதிரிகளையும் தாண்டி வந்த அதன் ஆற்றலையும், உலகின் பல பாகங்களிலும் அண்மையில் இடம் பெற்ற பல எதிர்த் தாக்குதல்களை சமாளித்து வென்று வந்த அதன் புத்தாக்கத்தையும் நாம் கண்டோம். எனவே, நாங்கள் வரலாற்றைப் புரிந்து, அதன் மூலம் தூண்டுதல்களை பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் ஒளியில் மெய்யான தேடலையும், மீள் சிந்தனையையும் தொடங்க வேண்டும். சோஷலிசவாதிகளால் அதனை செய்ய முடியுமானால் பெரித்ஸ்ரோய்காவுக்கும், சோஷலிசத்துக்கும் நல்ல எதிர்காலம் இருக்கிறது.

சோஷலிசம், அவசியமாகவே ஒழிந்து விட்டது என்று நான் எண்ணவில்லை. ஏன்? அவசியமாகவே ஒழிந்துவிடவில்லை நான் வார்த்தைகளை கவனமாக பிரயோகிக்கிறேன். நீண்ட வரலாற்றுப் பார்வையொன்றை மேற்கொள்வதனாலேயே நான் இதனைக் கூறுகிறேன். ஏனைய சக்திகளும், இயக்கங்களும் இன்று நாமுள்ள நிலையில் முன்னர் இருந்துள்ளன.

நாங்கள், பூர்ஷ்வா ஆதரவாளர்களாகவும், முதலாளித்துவ சித்தாந்தவாதிகளாகவும் கொள்கை வகுப்போராகவும் 1918ல் இருந்திருப்போமேயாயின், உலகின் மிகப்பெரிய நிலத்திணிவொன்றில் சோஷலிச புரட்சி நிகழ்ந்திருப்பது குறித்து வருந்தி இருப்போம். இந்த பூர்ஷ்வாக்கள் மீண்டும் ஒரு முறை 1930 களில் புரட்சிகளினாலும் யுத்தங்களினாலும் அச்சுறுத்தப்பட்டார்கள். ஐக்கிய அமெரிக்காவில் கூட பலம் பொருந்திய சோஷலிச இயக்கங்கள் எழுச்சியடைந்திருந்தன. சமீபகால வரலாற்றில் - பத்து வருடங்களுக்கு முன்னர் 1980ல். அமெரிக்கா வியட்னாமில் தோல்வி கண்டது. இதனையடுத்து எதியோப்பியா, போர்த்துக்கல், அங்கோலா, நிகாராகுவா என்று உலகின் வெவ்வேறு இடங்களில் புரட்சியலைகள் எழுந்து வந்தன. ஆப்கானிஸ்தான் மீதான சோவியத் தலையீடும், கம்பூச்சியா மீதான வியட்னாமிய முன்னேற்றமும் 1979ல் இடம் பெற்றன. 1980 அளவில் அமெரிக்கா பரிபூரண பின்வாங்கலில் இருப்பது போல் தெரிந்தது. அப்பொழுது அதன் உலகளாவிய அதிகாரத்தில் பெருமளவுக்கு வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. உலக முதலாளித்துவத்தின் வரலாற்றில் இத்தகைய நிகழ்வுகள் ஏற்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மார்க்சிஸ்டுகளாகிய நாம் வெற்றி முரசு கொட்டிவந்துள்ளோம். முதலாளித்துவம் ஒழிந்து விட்டது என்று நினைத்தோம். ஆனால், அமைப்புக்கள், எதிர்த்து நிற்கும் ஆற்றலை பெருமளவுக்கு கொண்டவை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக, எமது முறைமை அந்தளவுக்கு எதிர்த்து நிற்கக்கூடியதாக இருக்கவில்லை. ஏனென்றால், தகவல்களை கையாளுதல், தகவல்பெறும் பொறியமைப்பு, தொடர்பு கொள்ளல் போன்ற துறைகளில் முதலாளித்துவம் பெரு வளர்ச்சி கண்டிருக்கிறது

( 3ம் பக்கத் தொடர்ச்சி )

300 கோடி டொலர்கள் வரையில் இருக்கின்றன. சுதந்திர பொருளாதார வலயங்களை ஸ்தாபிப்பது அடுத்த படியாக இருக்கும். இன்று, அவை இன்னமும் ஆவண மட்டத்திலேயே இருக்கின்றன.

வெளிநாட்டு முதலீடுகளைப் பாதுகாப்பதற்கும், சோவியத் பொருளாதாரத்துக்குள் வெளிநாட்டு முதலீடுகளுக்கான நிபந்தனைகள் மேலும் தாராளமயப்படுத்துவதற்கும் நாடு இப்பொழுது சட்டமொன்றை தயாரித்து வருகிறது. பெரித்ஸ்ரோய்கா வருடங்களில் உலக சூழ்நிலை நல்லவிதத்தில் மாற்றமடைந்திருக்கிறது. ஆனால், இன்றைய அரசியல் அனுகூலங்களுக்கு இணைந்த மட்டத்தில் பொருளாதார நிலைமாற்றம் இடம்பெற்று வருவதாக தெரியவில்லை. உலகளாவிய வர்த்தகத்தில் சோவியத் யூனியனின் பங்கு இன்னமும் 4 சதவீதத்துக்கும் குறைவாகவே இருக்கிறது. மிகக் கூடுதலாக விரும்பப்படும் நாடு அந்தஸ்தினை சோவியத் யூனியனுக்கு வழங்குவது குறித்து ஐக்கிய அமெரிக்கா இன்னமும் யோசித்து வருகிறது. வர்த்தக உறவுகளில், சில நாடுகள் வேண்டுமென்றே சோவியத் நாட்டுக்கெதிராக பாகுபாடு காட்டி வருகின்றன.

ஆனால் முன்னேற்றத்துக்கான வாய்ப்புக்கள் தென்படுகின்றன. வரிகள் மற்றும் தீர்வைகள் குறித்த பொது உடன்பாட்டு (GATT) அமைப்பில் சோவியத் யூனியனுக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. காலம் கனிந்து வரும் போது அது முழு அங்கத்துவ நிலையைப் பெறமுடியும். சோவியத் - அமெரிக்க வர்த்தகத்தை இரண்டு மூன்று மடங்குகளால் பெருக்கும் பொருட்டு கூடிய விரைவில் ஜக்ஸன் - வனிக் திருத்தம் நீக்கப்படலாம். வர்த்தகம் மற்றும் கைத்தொழில், வலு பொறியியல், சூழல் பாதுகாப்பு, வியாபார உறவுகள் என்ற அனைத்தையும் உள்ளடக்கிய பாரிய ஒப்பந்தமொன்றை இப்பொழுது சோவியத் யூனியன் ஐரோப்பிய பொதுச் சந்தை அமைப்புடன் முடித்துக் கொண்டிருக்கிறது. மேலும், விரிவான பொருளாதார உறவுகளுக்கு கதவுகளைத் திறந்துவிடக் கூடிய விதத்தில், ஜப்பானுடனான எங்கள் உறவுகளை சகஜ

நிலைகரு கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கிறோம்.

சோவியத் யூனியன் மூன்றாவது உலகுடனான அதன் உறவுகளை பன்முகப்படுத்தி வருகிறது. சோவியத் - ஆர்ஜன்டீனிய மொத்த வியாபாரம் வருடமொன்றுக்கு நூறு கோடி டொலர்களையும் தாண்டியிருக்கிறது. தென் கொரியாவுடன் சுறுசுறுப்பான வியாபார பரிமாற்றம் இடம் பெற்று வருகிறது. இப்பொழுது இவற்றுக்கு வானமே எல்லையாகத் தெரிகின்றது.

சர்வதேச நாணய நிதியம், புனரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி என்பவற்றை உள்ளிட்ட அனைத்து சர்வதேச பொருளாதார நிறுவனங்களுடனும் ஒத்துழைப்புடன் செயற்பட நாங்கள் தயாராக இருக்கிறோம். சந்தைப் பொருளாதார நிலைமைகளில் செயற்படக்கூடிய முகாமையாளர்களை இப்பொழுது நாங்கள் பயிற்றுவித்து வருகிறோம். சந்தைப்படுத்தல் கலையை அவர்களுக்கு பயிற்றுவிப்பதுடன் பிரயோக பயிற்சிக்காக அவர்களை சர்வதேச வணிக பள்ளிகளுக்கும் அனுப்பி வருகிறோம்.

காலப்போக்கில், சோவியத் பொருளாதாரம் நம்பிக்கையூட்டும் விதத்தில் உலக பொருளாதார அமைப்புடன் ஒருங்கிணையும். தனது பொருளாதாரத்தின் திறமையைத் தூண்டும் ஒரு வழியாகவும், அதே நேரத்தில் சிறந்த அரசியல் உறவுக்கான ஓர் அடிப்படையாகவும் இக்குறிக்கோளினை நாம் கொண்டுள்ளோம். எந்த ஒரு சமூகமும் பொருளாதாரத்திலேயே தங்கியிருக்கிறது என்பதை ஒரு பொருளியலாளன் என்ற முறையில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இறுதிப் பகுப்பாய்வில், பிரதான நிலைமாற்றங்கள் அனைத்தும் இதனை அடிப்படையாக கொண்டே தோன்றுகின்றன.

( 4 ம் பக்கத் தொடர்ச்சி )

தயார் செய்யப்பட்ட உற்பத்திகள், அரை, இறுதி பொருட்கள் மற்றும் மூலப்பொருட்கள் எனப்வற்றுக்கான கிராக்கியை இந்த நிழல் பொருளாதாரமே சாத்தியமாக்குகிறது. உற்பத்தியாளர் பொருள் கைத்தொழில்களிலிருந்து நுகர்வு பிரிவுக்கு மாறுவதற்காக இவை தேவை. குறிப்பாக, உதிரிப்பாகங்கள், கட்டடப் பொருட்கள், பெட்ரோல், புடவைகள், கம்பளி போன்றன தொடர்பாக இது நிலவுகிறது. இந்த நிழல் பொருளாதாரமே பணத்தினையும், பொருட்களையும், சேவைகளையும் இலட்சக்கணக்கான தொன் விரயப் பொருட்களாகவும், உர வகைகளாகவும் மாற்றுகிறது. பொருவாரியான இத்தகைய பொருட்கள் கூட்டுப் பண்ணைகளிலும் அரச பண்ணைகளிலும் வெளியில் அழுகவிடப்பட்டுக் கிடக்கின்றன.

பல தசாப்தங்களாக, நாட்டின் இராணுவ கைத்தொழில் தொகுதி மிகச்சிறந்தவற்றை - அறிவு சார் சொத்துக்களையும் சேர்த்து - தன்பால் உறிஞ்சிக் கொண்டு வந்திருக்கிறது. இப்பொழுது, இந்த துறையில் எய்தப்பட்டுள்ள சாதனைகளில் குறைந்தது ஒரு பகுதியையாவது, நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றும் வகையில் பயன்படுத்தப்படுவதற்கு தருணம் வந்திருக்கிறது. அதனைச் செய்யாதிருப்பது அறிவீனமாகவே இருக்கும். எனினும், இராணுவப் பிரிவிலிருந்து திசை திருப்பப்படும் மூல வளங்கள் அற்பமான விஷயங்களில் செலவிடப்படும் அபாயமும் காணப்படுகிறது. குழந்தைகளுக்கான பொம்மைகள் அல்லது பாத்திரங்கள் போன்றவற்றுக்காக இவை செல்லக்கூடும். இந்தப் பொருட்களும் அவசியமானவைதான்; என்றாலும், பாதுகாப்பிலிருந்து திசை திருப்பப்படும் மூலவளங்கள், நீண்ட காலத்தில் குடிமக்கள் துறையை பலப்படுத்துவதற்கே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இராணுவ கைத்தொழில் தொகுதியின் உறுதி வாய்ந்த பகுதிகளை இனங்கண்டு, அவற்றில் கூடிய கவனஞ் செலுத்துவதும், பலம் குன்றிய பகுதிகளை விருத்தியடையச் செய்வதும் மிக முக்கியமாகும்.

சரியான முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட திசைதிருப்பல், ஏனைய காரணிகளுடன் சேர்ந்து, ஜப்பானின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்துள்ளது என்பதை நாங்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஜப்பானிய அரசாங்கம், அதன் யுத்த கைத்தொழில்களின் ஆற்றல்களை, ஷிங்கான்சென் ரெயில்வேயை அமைப்பதற்கு பயன்படுத்த வேண்டுமென எதிர்பாராத திடீர் முடிவினை எடுத்தது. ரெயில் வண்டிகள் மணிக்கு 200 – 300 கி. மீட்டர் வரையில் ஓடக்கூடிய இத்த செய்திட்டம் ஒரு தொழில்நுட்ப புரட்சி என்றே கூறவேண்டும். இந்த திட்டம் முன்னேறிச் சென்ற போது உற்பத்திச் சக்திகளின் பரவல் குறித்த ஜப்பானின் கருதுகோளே மாறிவிட்டது. மாகாணங்களில் வாழ்ந்த மக்களை, குடிபெயரச் செய்யாமலேயே கைத்தொழில் உற்பத்திக்குள் இழுத்தெடுக்கக் கூடிய வாய்ப்பினை இது உருவாக்கியது. இதன் விளைவாக, அனைத்து துறைகளுக்கும் ஆதார பலத்தை வழங்கும் பொது வசதி அமைப்பொன்று மிகத்திறமையான முறையில் உருவாகியது. இது கைத்தொழிலிருந்து பண்ணைத் தொழில் வரையில் அனைத்துப் பிரிவுகளுக்கு உதவிற்று. நேரம், அளவு என்பன குறித்த தேவையான சிராக்கங்களுடன், அத்தகைய அனுபவங்களை நாமும் பின்பற்றுவதும், ஆராய்ந்து பார்ப்பதும் அவசியமாகும்.

# சிவப்பு வெங்காயம் மற்றும் பம்பாய் வெங்காயம் என்பவற்றின் உற்பத்தி

வெங்காயம் பெறுமதிமிக்க சிறு உணவுப் பண்டமொன்றாகும். சமீப காலம் வரை சின்ன வெங்காய பயிர்ச்செய்கை பிரதானமாக யாழ்ப்பாண மாவட்டத்திலேயே செறிந்து காணப்பட்டது. எனினும், வடக்கிலும் கிழக்கிலும் எழுச்சியடைந்த இனப்பிரச்சினை காரணமாக வெங்காயச் செய்கை புத்தளம், இரத்தினபுரி, பொலநறுவை, மொனராகலை போன்ற வேறு சில பிரதேசங்களுக்கு பரவியுள்ளது. தற்போது நாட்டின் மொத்த சின்ன வெங்காய உற்பத்தியில் 40 சதவிதத்தை மட்டுமே யாழ்ப்பாண மாவட்டம் பங்களிப்புச் செய்கிறது. பம்பாய் வெங்காயத்தைப் பொறுத்தவரையில், மாத்தளை மாவட்டம் மொத்த உற்பத்தியில் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதியை உற்பத்தி செய்கிறது. மிகுதி புத்தளம், மொனராகலை, இரத்தினபுரி, பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகிறது.

விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள தரவுகளின்படி, சின்ன வெங்காய உற்பத்தி பிந்திய 1970 களிலிருந்து 1983 வரையில் தொடர்ச்சியாக அதிகரித்துச் சென்றிருக்கிறது. முக்கியமாக யாழ்ப்பாண தீபகற்பத்தில் (இனப் பிரச்சினை காரணமாக) உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையால் நாட்டின் சின்ன வெங்காய உற்பத்தி 1983ல் 134,000 மெட். தொன்களாக இருந்து, 1984ல் 37,600 மெட். தொன்களாக - 72 சதவிதத்தால் - செங்குத்தாக வீழ்ச்சி கண்டது. எனினும், 1984க்குப் பின்னர் உள்ளூர் சின்ன வெங்காய உற்பத்தி அதிகரிக்கத் தொடங்கியது. இதன் விளைவாக, நாடு இப்பொழுது சின்ன வெங்காயத்தில் சுயதேவைப்பூர்த்தி நிலையை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது.

பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாகவே சின்ன வெங்காய உற்பத்தியில் பெருக்கம் ஏற்பட்டுள்ளது. கடந்த தசாப்த காலத்தில் சின்ன வெங்காய பயிர்ச்செய்கையின் கீழ் கொண்டுவரப்பட்ட நிலப்பரப்பு இரட்டிப்பாகியிருக்கிறது. ஆனால், இக்காலப்பகுதியில் சராசரி விளைச்சல் வீழ்ச்சியடைந்து சென்றிருக்கிறது. (அட்டவணை 1) சில வருடங்களில் சாதகமான காலநிலை நிலவியமையால் சராசரி விளைச்சல் பெருகி, மொத்த உற்பத்தியில் கணிசமான அதிகரிப்பு ஏற்படுவதற்கு வழிகோலியிருக்கிறது.

கடந்த தசாப்த காலத்தில் பம்பாய் வெங்காயத்தின் உள்ளூர் உற்பத்தி – சில தளம்பல்களுக்கு மத்தியில் – கணிசமான அளவில் அதிகரித்திருக்கிறது. உள்ளூர் உற்பத்தியில் இவ்விதமாக ஏற்பட்ட அதிகரிப்புக்கு மத்தியிலும் உள்ளூர் தேவையில் நான்கில் மூன்று பங்குக்கு மேற்பட்ட வெங்காயம் இன்னமும் இறக்குமதி செய்யப்படுகிறது. இதற்கு மிக அண்மிய பதிலீட்டுப் பொருளான சின்ன வெங்காயத்தின் உற்பத்தி 1984ல் கடுமையாக வீழ்ச்சியடைந்தபோது பம்பாய் வெங்காயத்தின் தாக்கத்தில் ஒரு பெரிய பாய்ச்சல் ஏற்பட்டது.

(வேறும் சில உப உணவுப் பயிர்களின் விஷயத்தில் போலவே) வெங்காய உற்பத்தியிலும் பயிர்ச்செய்கைக்கு கிடைக்கும் நிலப்பரப்பை தீர்மானிக்கும் முக்கிய காரணி, நெல் உற்பத்திக்கு நீர் கிடைக்கக்கூடிய நிலையாகும். பயிர்ச்செய்கை பருவங்களின் போது நெற் பயிர்ச்செய்கைக்கு போதிய நீர் கிடைக்காத பட்சத்தில், விவசாயிகள் தமது வருமானத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக, குறைந்த அளவில் நீர் தேவைப்படும் வெங்காயம் போன்ற உப உணவுப் பயிர்களை தமது நிலங்களில் பயிரிடுகிறார்கள்.

வெங்காய உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்கு பெருமளவுக்கு உள்ளார்ந்த ஆற்றல் காணப்படுகிறது. நாடு இப்பொழுது நெல் உற்பத்தியில் சுய தேவைப்பூர்த்தி நிலையை எட்டி

அட்டவணை 1

உள்ளூர் சிவப்பு வெங்காய உற்பத்தி

| வருடம் | பயிர்செய்யப்பட்ட பரப்பளவு ஹெக்டயார் | ஹெக்டயார் ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விளைச்சல் (மெட். தொன்.) | உற்பத்தி '000 மெட். தொன். |
|---|---|---|---|
| 1979 | 5,884 | 10.7 | 62.8 |
| 1980 | 7,444 | 10.6 | 79.1 |
| 1981 | 8,181 | 11.3 | 92.2 |
| 1982 | 8,213 | 11.3 | 92.6 |
| 1983 | 11,435 | 11.8 | 134.8 |
| 1984 | 8,281 | 4.5 | 37.6 |
| 1985 | 5,804 | 9.1 | 52.7 |
| 1986 | 8,637 | 8.9 | 76.5 |
| 1987 | 10,798 | 8.9 | 96.1 |

ஆதாரம் ; விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சு

வருவதனாலும், நெல் உற்பத்தியில் இலாப எல்லை வீழ்ச்சியடைந்து வருகிறது என அண்மைய ஆய்வுகள் தெரிவித்திருப்பதனாலும் நெல் விவசாயிகள் - குறிப்பாக சிறு காணித்துண்டுகளை வைத்திருப்பவர்கள் - காணி அலகொன்றுக்கு அதிக இலாபத்தை எடுத்து வரும் வெங்காயம் போன்ற சிறு உணவுப்பயிர்களைபயிரிடுவதற்கு ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். வெங்காய உற்பத்தி அதிகரிப்பு, விவசாயிகளின் வருமான மட்டங்களை உயர்த்துவதுடன், குறிப்பாக பம்பாய் வெங்காய இறக்குமதியில் செலவிடப்படும் வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிப்பதற்கும் உதவும்.

வெங்காய உற்பத்தியை பெருக்குவதற்காக முக்கியமான சில நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியம். உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோருக்கும் சாதகமான சரியான சந்தைப்படுத்தல் கொள்கைகளை அமுல் செய்தல், காணி அலகொன்றுக்கான சராசரி விளைச்சலை விருத்தி செய்தல், உயர்ந்த தர வெங்காயத்தை உற்பத்தி செய்யுமாறு விவசாயிகளை ஊக்குவித்தல் போன்றன இந்நடவடிக்கைகளாகும்.

1977க்கு பின்னர் அமுல் செய்யப்பட்ட இறக்குமதி தாராளமய கொள்கைகள் பம்பாய் வெங்காய உற்பத்தியில் பாதகமான விளைவுகளை எடுத்து வந்தன. உள்ளூர் சந்தையில், இறக்குமதி செய்யப்பட்ட பம்பாய் வெங்காயத்தின் விலை குறைவாக இருந்தமையால் இதனைப் பயிரிடும் விவசாயிகள் ஊக்கமிழந்தனர். உள்ளூர் பம்பாய் வெங்காய உற்பத்தியின் நீண்ட கால அபிவிருத்தியை பாதுகாக்கும் நோக்குடன் இறக்குமதி கொள்கை அமுல் செய்யப்படுதல் அவசியமாகும். சரியான தருணத்தில் இறக்குமதி செய்வதன் மூலமும் உள்ளூர் சந்தையில் பொருத்தமான விலைகளில் விற்பனை செய்யும் வகையில் (தீர்வைகள் போன்ற) இறக்குமதி கொள்கையை சீராக்கி கொள்வதன் மூலமும் பம்பாய் வெங்காய இறக்குமதியின் பாதகமான விளைவுகள் குறைந்த மட்டத்தில் வைக்கப்பட முடியும். உள்ளூர் சந்தையில் நிலவும் இடைவெளியை நிரப்புவதற்காக சின்ன வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்ட போதிலும் இறக்குமதி வெங்காயத்தின் விலை எப்பொழுதும் உள்ளூர் வெங்காயத்தின் விலையை விடவும் உயர்வாக இருந்து வந்திருப்பதனால், இது உள்ளூர் உற்பத்தியை பெருமளவில் பாதிக்கவில்லை.

நெற் சந்தைப்படுத்தும் சபை பெருந்தொகையான சிறு உணவுப்பயிர்களை கொள்வனவு செய்வதற்காக தள விலைத் திட்டமொன்றை செயற்படுத்தி வருகிறது. ஆனால், இந்த திட்டத்தின் கீழான வெங்காய கொள்வனவு மிகச் சிறு அளவிலேயே நடைபெற்று வருகிறது. விவசாயிகள் தமது சின்ன வெங்காய, பம்பாய் வெங்காய உற்பத்திகளை ஏனைய நிறுவனங்களுக்கும் தனியார் துறையினருக்கும் விற்பனை செய்து வருகின்றனர். அநேகமாக, இதற்கு தள விலைகளிலும் பார்க்க உயர் விலைகள் வெளியில் கிடைப்பதே காரணமாக இருக்கலாம்.

இயல்பிலேயே, சின்ன வெங்காயத்துக்கு பிரத்தியேக வகையிலான களஞ்சிய வசதிகள் தேவை. இல்லாவிட்டால் அதனை ஒரு சில மாதங்களுக்கு மட்டுமே வைத்திருக்க முடியும். ஆனால், நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்வனவு செய்யும் சின்ன வெங்காயத்தை, நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ள களஞ்சிய சாலைகளில் களஞ்சியப்படுத்திவைக்கிறது. சின்ன வெங்காயத்தை நீண்ட காலத்துக்கு பாதுகாப்பாக வைத்துக் கொள்ளக் கூடிய நல்ல களஞ்சிய வசதிகள் கிடைக்கக்கூடியதாக இருந்தால் உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும் விலைகளை அதிக தளம்பல்களின்றி ஒரே சீரான மட்டத்தில் வைத்திருப்பது சாத்தியமாகும். குறித்த ஒரு வருடத்தில், உற்பத்தியாளர் விலைகள் குறைவாக இருந்தால் அடுத்த வருடத்தில் அவர்கள் தமது உற்பத்தியை குறைத்துவிடுகிறார்கள். நீண்ட காலத்தில், உற்பத்தியாளர் விலைகளை அதிக தளம்பல்களின்றி பேணி வருவதானது தொடர்ந்த வளர்ச்சியுடன் கூடிய உற்பத்தியை தொடர்வதற்கும், விவசாயிகளுக்கு நல்ல வருமானத்தை உறுதிப்படுத்துவதற்கும் உதவும். களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் வெங்கா

( 26 ம் பக்கம் பார்க்க )

அட்டவணை 2
உள்ளூர் பம்பாய் வெங்காய உற்பத்தி

| வருடம் | பயிர்செய்யப்பட்ட பரப்பளவு ஹெக்டயார் | ஹெக்டயார் ஒன்றுக்கான மதிப்பிடப்பட்ட விளைச்சல் (மெட். தொன்.) | உற்பத்தி '000 மெட். தொன் |
|---|---|---|---|
| 1979 | 134 | 7.3 | 1.0 |
| 1980 | 42 | 9.5 | 0.4 |
| 1981 | 96 | 9.4 | 0.9 |
| 1982 | 170 | 10.7 | 1.8 |
| 1983 | 217 | 11.0 | 2.4 |
| 1985 | 208 | 11.3 | 2.4 |
| 1986 | 515 | 10.8 | 5.6 |
| 1987 | 467 | 11.3 | 5.3 |
| 1988 | 575 | | 4.2 |

ஆதாரம் : விவசாய, உணவு, கூட்டுறவு அமைச்சு

# இலங்கையின் பொருளாதாரம் பற்றிய ஒரு கலந்துரையாடல்

இலங்கையில் தீவிரமான பொருளாதார, தொழில் நிலை வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு தாராள பொருளாதாரக் கொள்கைகளை விட மாற்று வழிகள் எவையும் இல்லை. கடந்த வருட இறுதியில் நடைபெற்ற தொழில்சார் கழங்கங்களின் அமைப்பின் 1989 ம் ஆண்டு மகாநாட்டில் கலாநிதி ஏ. எஸ் ஜெயவர்தனா ஆற்றிய உரையில் இக் கருத்தே முடிவானதாக அமைந்திருந்தது.

இலங்கையின் பொருளாதாரம் பற்றி ஆராய்வதிலேயே மேற்படி கழகத்தின் மகாநாடு தனது கவனத்தை முழுமையாகச் செலுத்தியது. கலாநிதி ஏ. எஸ். ஜெயவர்தனாவும், மத்திய வங்கியின் முன்னை நாள் ஆளுநர் திரு. என். யூ. ஜெயவர்தனாவும் இதில் பிரதான பேச்சாளர்களாக் கலந்து கொண்டனர். ஆதார உள்ளமைப்புகளுடன் கூடிய பல கொள்கைகளை தகுந்த பொருளாதார முகாமையுடன் இணைத்துச் செயற்படுத்துவதன் மூலம் நம்பிக்கையூட்டும் எதிர்காலத்தைக் கட்டமைக்கலாம் என்ற வகையில் திரு. என். யூ. ஜெயவர்தனாவின் கருப்பொருள் அமைந்திருந்தது. தகுந்த அபிவிருத்திக் கொள்கை, தகுந்த செலவீட்டுச் கொள்கை, தகுந்த இறைக் கொள்கை, தகுந்த பணவியல் கொள்கை, மனித வளத்தைச் சிறப்பாக உள்ளடக்கிய மூலவளங்கள் அனைத்தினதும் தகுந்த முகாமை என்பவையே இதற்காகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய கொள்கைகள் என இறுதியாக அவர் சுருக்கிக் கூறினார். திரு. ஏ எஸ். ஜெயவர்தனாவின் உரை இன்றைய காலகட்டத்துக்குப் பொருத்தமானதாக தனக்குத் தென்படும் பொருளாதார உத்தி பற்றியதாக அமைந்திருந்தது. சுதந்திரத்தின் பின் அரசோச்சிய பல்வேறு பொருளாதாரச் சிந்தனைகளின் பயனாக ஏற்பட்டிருந்த பரந்த மாற்றங்களை திரு. ஜெயவர்தனா அளவிட்டார். முதல் 30 வருடங்களில் நலன்புரி நோக்கம் கொண்டதும், உள்நோக்கியதுமான பொருளாதாரக் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதாக அவர் குறிப்பிட்டார். இக்காலப்பகுதியில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டிருந்த போதிலும் பொருளாதார அபிவிருத்தி, வாழ்க்கைத் தரம் என்பவற்றைப் பொறுத்து ஏனைய பல ஆசிய நாடுகளை விட இலங்கை பின்தள்ளப்பட்டு விட்டது. அடுத்து வந்த 12 ஆண்டுகளில் கட்டற்ற பொருளாதாரத்தை நோக்கிய வகையில் கொள்கைகளில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. பொருளாதார வளர்ச்சி விரைவு படுத்தப்பட்டதுடன் பன்முகப்படுத்தவும் பட்டது. எனினும், நலன்புரி சேவைகள் பற்றி இக்கால கட்டத்தில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை. சமூக அரசியல் அரங்கில் காணப்பட்ட பிளவுவாதப் போக்குகள் மோசமடைந்தன. இதன் விளைவாக உறுதியின்மையும், நிச்சயமற்ற நிலையும் தோன்றியது. இலங்கைக்குப் பொருத்தமான பொருளாதார உத்தி பற்றிய பரந்துபட்ட மனப்பாங்கு காணப்படவில்லை என்பதை அவர் அழுத்தம் திருத்தமாக எடுத்துக் கூறினார்.

அவரது கருத்துப்படி இலங்கைப் பொருளாதாரம் பின்வருவனவற்றில் ஏதாவது ஒரு வழியில் திசைப் படுத்தப்படலாம்.

1. கட்டற்ற பொருளாதாரக் கொள்கைகளை தொடர்ந்தும் கடைப்பிடித்தல். எனினும், நலன்புரி சேவைகளுக்கும் தொழில் நிலைக்கும் போதிய அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும்.
2. முன்னர் காணப்பட்ட கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அதில் நலன்புரி சேவைகளுக்கும் தொழில் நிலைக்கும் மிக அதிகமான அழுத்தம் கொடுத்தல்.
3. சோவியத் யூனியன், சீனா என்பவற்றில் காணப்படுவதைப் போல பொருளாதாரத்தைப் பெருமளவுக்குச் சோஷலிச தன்மை கொண்டதாக மாற்றியமைத்தல். இவ்விரு நாடுகளிலும் கூட இம் முறை தற்போது கைவிடப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை உள்ளூர் சந்தையைக் கொண்ட சிறிய பொருளாதாரமாகும். இத்தகைய சூழலில் உள்நோக்கும் கொள்கைகளைக் கடைப்பிடிப்பது குறைவான வளர்ச்சி, குறைவான வருமானங்கள், உயரளவு கொண்ட வேலையின்மை என்பவற்றை ஏற்படுத்தக் கூடியதாகும். மறுபுறத்தில், பாரம்பரிய சோஷலிச உத்திகளின் தீவிரமான வரையறைகளை சோவியத் யூனியன், சீனா ஆகிய நாடுகளின் அனுபவம் நமக்குப் புகட்டுவதாக உள்ளது. எனவே தீவிரமான பொருளாதார வளர்ச்சியையும், தொழில் நிலை அபிவிருத்தியையும் பெற்றுக் கொள்வதற்கும் பொருளாதாரத்தைப் பன்முகப்படுத்துவதற்கும் இலங்கை விரும்புமாயின் கட்டற்ற பொருளாதாரக் கொள்கையைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர அதற்கு வேறு வழியெதுவும் காணப்படவில்லை என அவர் இறுதியாகக் கூறினார்.

கட்டற்ற பொருளாதாரம்

உலகச் சந்தைகளிடமிருந்து தனிமைப்படுத்தப்படுவதைக் குறித்து நிற்பதில்லை. மாறாக அவற்றுடன் ஒன்றிணைக்கப்படுவதையே அது கருதுகின்றது. ஏனைய உலக நாடுகளுடன் வர்த்தகம் மேற்கொள்ளப்படும் போது செலாவணி விகிதமே விலையாக அமைகின்றது. எனவே, நெகிழ்ச்சி மிக்க செலாவணி விகிதக் கொள்கையைக் கடைப்பிடிப்பது கட்டற்ற பொருளாதாரத்துக்கு அவசியமாகின்கின்றது. உள்ளூர் பொருளாதார நடவடிக்கைகளினால் ஏற்படுத்தப்படும் மிகை உற்பத்திகளைப் படிப்படியாகத் குறைத்து சர்வதேச ரீதியில் போட்டித்தன்மை கொண்டனவாக உள்ளூர் பொருளாதார நடவடிக்கைகளை மாற்றியமைப்பதும் இதற்கு அவசியமானதாகும். அந்நிய முதலீடுகளை பொறுத்தவரை தேசத்துக்குப் புறம்பான 'சமிக்ஞை சாதனங்களை' நாம் களைந்தெறிந்திட வேண்டும். அரசாங்கத்தின் வரி - செலவு நிகழ்ச்சிப் போக்கின் ஊடாக வருமானப் பகிர்வின் குறிக்கோள்களைச் சிறந்த முறையில் அடையக் கூடியதாக இருக்கும்.

வேறு ஏதேனும் உத்தி கடைப்பிடிக்கப்படும் பட்சத்தில் பாரதூரமான விளைவுகளே ஏற்படும். சந்தைச் சார்புள்ள பொருளாதார உத்தி ஆக்ஞைத்துவ பொருளாதாரம் ஆகிய இரண்டில் எதனைக் கடைப்பிடித்த போதிலும் இறுதியில் பொருளாதார முகாமை பற்றிய பிரச்சினைகள் ஒன்றாகவே இருக்குமென அவர் கூறினார். கட்டற்றதும் போட்டி அடிப்படையில் அமைந்ததுமான பொருளாதாரத்தால் தீர்மானம் மேற்கொள்ளப்படும் உத்தியின் கீழ் இத்தகைய பிரச்சினைகளை இலகுவாகத் தீர்த்து வைக்கக் கூடியதாக இருந்துள்ளது என்பதை உலகின் பல நாடுகளின் அனுபவம் எமக்குப் புகட்டுகின்றது.

**கைத்தொழில் அபிவிருத்தி**

இத்துடன் தொடர்பான இன்னுமொரு விடயம் கைத்தொழில் அபிவிருத்தி பற்றியதாகும். கைத்தொழில் அமைச்சின் செயலாளர் திரு. வின்சன்ட் பண்டித்த இதனை ஆய்ந்தோய்ந்து விளக்கினார். சுதந்திரம் பெற்று நாற்பதாண்டுகள் கடந்துவிட்ட இன்றைய நிலையில் கைத்தொழில்மயமாக்கத்துக்கான பல்வேறு திட்டங்கள் காணப்பட்ட போதிலும் கூட இலங்கை பெருமளவுக்கு ஒரு விவசாய நாடாகவே தொடர்ந்தும் இருந்து வருகின்றது. இங்கு மிகவும் சிறிய அளவு கொண்ட கைத்தொழில் தளம் மட்டுமே காணப்படுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியில் கைத்தொழிலின் பங்களிப்பு 15 சதவீதம் கொண்டதாக மட்டும் இருக்கின்றது. அதே வேளையில் ஆசிய நாடுகளின் சராசரியோ 32 சதவீதமானதாக காணப்படுகின்றது. மேலும் சுதந்திரம் பெற்ற வேளையில் வாழ்க்கைத் தரங்களைப் பொறுத்த வரை ஜப்பானுக்கு அடுத்தபடியாக தென் கிழக்காசியாவில் இலங்கை இரண்டாவது இடத்தை வகித்து வந்தது. இன்று இலங்கையின் சராசரி வருமானம் 375 அமெரிக்க டொலர்களாகும். பாகிஸ்தான் (400 டொலர்) இந்தோனேசியா (520 டொலர்) தாய்லாந்து (995 டொலர்) மலேசியா (1920 டொலர்) தென் கொரியா (3910 டொலர்) தாய்வான் (6053 டொலர்) சிங்கப்பூர் (9455 டொலர்) மட்டுமன்றி மாலைதீவும் (470 டொலர்) எம்மை முந்திக் கொண்டு விட்டன.

கைத்தொழில் அமைப்பைத் தனியார்துறை, பொதுத்துறை எனப் பாகுபாடு செய்து பார்க்கும் போதும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முன்னர் மொத்த உற்பத்தியின் 66 சதவீதத்துக்கு பொதுத் துறையும், 34 சதவீதத்துக்குத் தனியார் துறையும் வகை கூறி வந்தன. கடந்த 12 ஆண்டுகளில் இந்நிலை தலை கீழாக மாறி விட்டது. தற்போது தனியார்துறை 66 சதவீதத்துக்கும், பொதுத்துறை 34 சதவீதத்துக்கும் வகை கூறுகின்றன. தற்போதுள்ள கைத்தொழில்கள் இறக்குமதி செய்யப்படும் இடை நிலைப் பொருட்களில் பெருமளவுக்குத் தங்கியிருப்பனவாக உள்ளன. அத்துடன் (ஓரிரு துணைத் துறைகள் தவிர்ந்த) கைத்தொழில் துறை தொடர்ச்சியாக மிகக் குறைவான ஏற்றுமதிச் சாதனையை மட்டுமே அடைந்து வருகின்றது. வேகமாக வளர்ச்சியுற்றுள்ள பல ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது மொத்தக் கைத்தொழில் உற்பத்திக்கு கைத்தொழில் துறையின் பங்களிப்பு மிக் குறைவானதாகவே இருந்து வருகின்றது. நிதியீட்டச் செலவு அதிகமாகக் காணப்படுதல், கடன் பிரச்சினைகள், கைத்தொழில்கள் பரவலாகக் காணப்படாமை, இவற்றின் விளைவாக ஏற்படும் ஏனைய பிரச்சினைகள் என்பவற்றைக் கைத்தொழில் துறை எதிர்கொண்டு வருகின்றது. விரைவாகப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல், மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்துதல், தொழில் வாய்ப்புக்களை உருவாக்கித் தருதல் என்பவையே பொருளாதார அபிவிருத்தியின் குறிக்கோளாக அமைதல் வேண்டும் என அவர் கருத்துக் தெரிவித்தார். 1986/87 ல் தொழிற்படையின் விகிதாசாரமாக க. பொ. த. (உயர்தரச்) சித்தி பெற்றவர்கள் 34.8 சதவீதத்தினரும், சாதாரண தர சித்தி பெற்றவர்கள் 28.5 சதவீதத்தினரும் வேலையற்றிருக்கக காணப்பட்டனர். பட்டதாரி மாணவர்களில் 61.7 சதவீதத்தினர் தொழிலற்றவர்களாக உள்ளனர். விவசாய வளர்ச்சி, இறக்குமதி செய்யப்படும் உணவுத் தானியங்களின் உற்பத்தியை உள்ளூரில் பிரதியீடு செய்தல், பால், மீன் ஏனைய உணவுப் பயிர்கள் போன்ற

வற்றில் ஓரளவு வளர்ச்சி வாய்ப்புக் காணப்பட்ட போதிலும் சுரிசமான அளவு பொருளாதார வளர்ச்சி இயக்கமுள்ள கைத்தொழில் துறையிலிருந்தே ஏற்பட வேண்டியுள்ளது. அத்துடன் உள்ளூர்ச் சந்தையின் ஈர்ப்புத் தன்மை மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளது. எனவே, ஏற்றுமதி சார்ந்ததாகவே உற்பத்தி அமைய வேண்டியுள்ளது. இவ்வகையில் கைத்தொழில்கள் போட்டித் தன்மை கொண்டனவாக அமைவது அவசியமாகின்றது. அத்துடன் குடும்பப் பாதீடுகளில் 60 சதவீதம் உணவுக்காகச் செலவழிக்கப்படுவதனால் கைத்தொழில் அபிவிருத்தியை விவசாய விரிவாக்கத்துடன் தொடர்புபடுத்தக் கூடிய சாத்தியம் பற்றியும் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

அதிகரித்துச் செல்லும் குடித்தொகைக்கு அவசியமான வேலை வாய்ப்புக்கள், வருமான வாய்ப்புகள் என்பவற்றை உருவாக்குதல் இலங்கையின் சென்மதி நிலுவையைத் திடப்படுத்தல், உள்ளூர் ஆரம்ப சந்தைச் சார்புள்ளதாகக் காணப்படும் கைத்தொழிலை ஏற்றுமதிச் சார்புள்ளதாக மாற்றியமைத்தல், வருமானம், செல்வம் என்பவற்றை மேலும் நீதியாக பகிர்ந்தளித்தல் இவை அனைத்தின் வாயிலாகவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தல் என்பவை பற்றிய கொள்கைகளும், உத்திகளுமே உடனடியாகத் தேவைப்படுவனவாகும். இக் குறிக்கோள்களை அடைவதற்காக குறிப்பான கொள்கைக் கருவிகள் கையாளப்படல் வேண்டுமென அவர் வற்புறுத்தியுள்ளார். அவற்றுள் பின்வருவனவும் அடங்கும்.

1. உற்பத்திச் சாதனங்களின் உடைமையைப் பொறுத்தவரை, பொதுத் துறைக்கும் தனியார் துறைக்கும் இடையே பூரணமான நடுநிலைமை பேணப்படல்.

2. கைத்தொழில்களிடையே இறக்குமதிப் பிரதியீட்டுக்கும் ஏற்றுமதிச் சார்பு நிலைக்கும் இடையே பூரணமான நடுநிலைமை பேணப்படல்.

3. பெரிய முதலீட்டாளருக்கும் சிறிய உற்பத்தியாளருக்கும் இடையே ஆர்வமுள்ள வகையில் தொடர்புகளை மேம்படுத்தல்.

4. பொருளாதாரத்தைத் திடப்படுத்துவதற்கும், பணவீக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கும், உற்பத்தித்திறன் கொண்ட பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் விவேகமான பேரண்ட பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல்.

5. நிர்வாகத்தடைகளை நீக்கி விடுதல்.

தேவையான குறுங்கால உத்திகள் பற்றி எடுத்துக் கூறுகையில் அவர் பின்வருவனவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

1. புற உலகுடன் தொடர்பு கொள்ளும் போது விலைகளை நிர்ணயிக்கும் பணியை செலாவணி வீதமே ஆற்றி வருகின்றது. எனவே யதார்த்தமானதும், நெகிழ்வுள்ளதுமான செலாவணி மாற்றுக் கொள்கைள் கடைப்பிடிக்கப்படல்.

2. அளவுக்கு மிஞ்சிய காப்பீட்டை வழங்காததும், அதே வேளையில் தற்போது காணப்படும் கைத்தொழில்களை சர்வதேச ரீதியில் போட்டித் தன்மையுடையனவாக வளர்க்கக் கூடியதுமான இறுப்புக் கொள்கை

3. பணவீக்கத்தை ஏற்படுத்தாத இறைக்கொள்கை.

4. கூலிகளை உற்பத்தி விளைதிறனுடன் தொடர்பு படுத்தக் கூடிய கூலிக்கொள்கை.

5. கைத்தொழில்களை ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்துவதை விடுத்து அபிவிருத்தியை ஏற்படுத்தக் கூடிய கைத்தொழில் கொள்கை.

6. அபிவிருத்தி ஏற்படுவதற்கு அவசியமான சமூக சமரசத்தையும், ஸ்திர நிலையையும் தோற்றுவிக்கக் கூடிய சமாதானமும், பந்தோபஸ்தும் பேணப்படும் நிலை.

( 23 ம் பக்கத் தொடர்ச்சி ).

யத்தை ஓர் ஒழுங்கு முறையில் சந்தைக்கு விடுவிப்பதன் மூலம், வெங்காயத்துக்கான நுகர்வோர் விலைகளை நீண்ட காலத்தில் — அதாவது உற்பத்தி பருவத்திலும் உற்பத்தி நடைபெறாத பருவத்திலும் அதே போல உயர் உற்பத்தி நிலவும் காலத்திலும், குறைந்த உற்பத்தி இடம்பெறும் காலத்திலும் — அதிகளவு தளம்பல்களின்றி பேணி வர முடியும். இது நுகர்வோரை சின்ன வெங்காய தட்டுப்பாட்டிலிருந்தும், உயர் விலைகளிலிருந்தும் பெருமளவுக்கு பாதுகாக்கிறது. சின்ன வெங்காயம் முக்கியமான உணவுப்பொருளொன்றாக இருப்பதனால், இதில் ஏற்படும் விலை மாற்றம் நுகர்வோரின் வாழ்க்கைச் செலவினை நேரடியாக பாதிக்கின்றது.

குறிப்பாக, மாத்தளை மாவட்டத்தில் கிடைக்கும் பம்பாய் வெங்காய அறுவடை நல்ல தரமானதாக காணப்படவில்லை. இதன் விளைவாக விவசாயிகள் தமது வெங்காய உற்பத்திகளை நல்ல விலைகளில் சந்தைப்படுத்துவதில் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் உயர் ரக வெங்காயத்தை நீண்ட காலத்திற்கு களஞ்சியப்படுத்தி வைத்திருக்க முடியும். அது உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலைகளையும் பெற்றுக் கொடுக்கிறது. நுகர்

( 30 ம் பக்கம் பார்க்க )

# இலங்கையில் உள்நாட்டு மூலவளங்களை திரட்டுவது தொடர்பான பிரச்சினைகள்

டப்.ஏ.விஜேவர்தன

(பிரதி பணிப்பாளர், பொருளியல் ஆராய்ச்சிப்பிரிவு, இலங்கை மத்திய வங்கி)

பாகம் iii

### மூலதன சந்தையும் மூலவள திரட்டும்

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பங்குப் பரிவர்த்தனை நிலையங்களைக் கொண்ட மூலதனச் சந்தையொன்றின் பிரதான பணி, புது நிதிகளை, அவற்றை மிகத்திறமையான முறையில் பயன்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்கும் கைத்தொழில்களுக்கும், நிறுவனங்களுக்கும் பகிர்ந்தளிப்பதாகும். அத்துடன் தமது முதலீட்டு முயற்சிகளை மாற்றியமைத்துக் கொள்பவர்களுக்கு திரவத் தன்மையையும் அது வழங்க வேண்டும். இதில் முதலாவது, பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றலை விரிவுபடுத்துவதற்கென மூலவளங்களைத் திரட்டுவதனை குறிக்கிறது. முதலீட்டாளர்களிடையே, தாம் முதலீடு செய்துள்ள நிதிகளின் பாதுகாப்பு குறித்த உணர்வினை இரண்டாவது அம்சம் தோற்றுவிக்கிறது. பிணையாள் சந்தையின் திறமையான செயற்பாடு, உரிய காலத்தில் சுதந்திரமாக தகவல்கள் கிடைக்கும் தன்மையிலும், சந்தையில் பங்குபற்றுவோருக்கிடையே இடம் பெறும் போட்டியிலும் பெருமளவுக்கு தங்கியிருக்கிறது.

பாரிய வியாபார அமைப்புக்கள் குறித்து இலங்கைக்கு நீண்டகால வரலாறு ஒன்று இருந்த போதிலும், எந்தவகையில் ஒப்பிட்டுப் பார்த்தாலும் அதன் மூலதனச் சந்தை இன்னமும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறது. முறிகள் அல்லது கடன் பத்திரங்கள் என்பவற்றின் வெளியீட்டுக் கூடாக தனியார்துறை நிறுவனங்களுக்கு கடன் மூலதனத்தை வழங்குவது மிக அரிதாகவே இடம் பெற்று வருகிறது. வளர்ந்து வரும் தனியார்துறையின் மூலதனத் தேவைகளை நிறைவு செய்வதற்காக, பங்குச் சந்தையொன்று இனிமேல் தான் அபிவிருத்தியடைந்து, விரிவாக்கம் பெற வேண்டியிருக்கிறது.

இலங்கையின் பங்குப் பரிவர்த்தனை நிலையம் இன்னமும் அதன் குழந்தைப்பருவத்திலேயே இருக்கிறது. நான்கு வருட செயற்பாட்டு அனுபவத்தை மட்டுமே அது பெற்றிருக்கிறது. தினசரி கொடுக்கல் வாங்கல்கள் வரையறுக்கப்பட்ட அளவிலேயே இடம்பெற்று வருவதால் வர்த்தக தளம் நாளொன்றுக்கு இரண்டு மணித்தியாளங்களுக்கு மேல் இயங்க முடிவதில்லை. இலங்கையில் 15,000 க்கும் மேற்பட்ட கம்பனிகளுக்கு வரையறுக்கப்பட்ட பொறுப்பு அந்தஸ்து வழங்கப்பட்டிருந்த போதிலும் ,பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் 174 பொதுக் கம்பனிகள் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன.

தனியார்துறை பொருளாதாரம் பெரிய அளவில் வளர்ச்சி அடைவதற்கும், செயற்படுவதற்கும் ஆரம்ப மற்றும் இரண்டாந்தர மட்டத்தில் செயலூக்கமுள்ள பங்குச் சந்தையொன்று இருத்தல் ஓர் அவசியமான நிபந்தனையாகும். ஆரம்ப சந்தை, தனியார் கம்பனிகள் தமக்குத் தேவைப்படும் மூலதனத்தை சந்தையில் திரட்டிக் கொள்வதற்கும், பாதுகாப்பான கடன் விகிதமொன்றை பராமரிப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது. இரண்டாந்தர சந்தை, அதன் உடனடுத்த பங்கு கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளுக்கூடாக, ஒரு புறத்தில், முதலீட்டாளர்களுக்கு முதலீட்டு வாய்ப்பினை அளிக்கிறது. மறுபுறத்தில், ஒவ்வொரு கம்பனி பங்குகளினதும் உண்மையான சந்தைப் பெறுமதியை பிரதிபலிப்பதன் மூலம், தனியார்துறை கம்பனிகளுக்கு அவற்றின் மூலதனத்தின் செலவு குறித்த ஒருகுறிகாட்டியை முன்வைக்கிறது. ஒரு கம்பனியின் பங்கு விலைகள் சந்தையில் உயர்ந்து செல்லும் போது சார்பு ரீதியில் குறைந்த செலவில் நிதிகளைத் திரட்டக் கூடிய சாதக நிலையில் அது இருக்கும். அதேபோல, பெறுமதியிலும் பார்க்க வீழ்ச்சியடைந்து கொண்டு போகும் பங்கு விலைகள் இதற்கு நேரெதிரான ஒரு நிலையைத் தோற்றுவிக்கும்.

அட்டவணை 9
வியாபாரம் செய்யப்பட்ட பங்குகள்
வழங்கப்பட்ட பங்குகள் விகிதம்

| | சதவீதம் |
|---|---|
| 1981 | 0.0225 |
| 1982 | 0.0275 |
| 1983 | 0.0208 |
| 1984 | 0.0483 |
| 1985 | 0.7417 |
| 1986 | 0.8176 |
| 1987 | 2.1327 |
| 1988 | 1.4291 |

ஆதாரம் : கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையம்

சந்தையில் தொடர்பு கொண்டிருக்கும் அனைத்து தரப்பினருக்

கும் உச்சமட்ட நலன்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில், சுதந்திரமான தகவல் பரிமாற்றத்தினால் உருவாக்கப்படும் கேள்வி, வழங்கல் அடிப்படையில் மட்டுமே சந்தை செயற்படுதல் வேண்டும். ஆனால் உலகெங்கிலும் பங்குச் சந்தைகளின் செயற்பாடு, இந்த இலட்சிய குணாம்சத்திலிருந்து வேறுபட்டதாகவே இருந்து வருகிறது. அவற்றில், திறமையான செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடிய பல அம்சங்கள் காணப்படுகின்றன. உலகின் ஆகக்கூடிய செயற்தாக்கமுள்ள நியூயோர்க் பங்கு பரிவர்த்தனை நிலையம் குறித்து பாவுமோல் (1965) பின்வருமாறு எழுதியுள்ளார் ''சந்தையில் இயங்குவோர், தரகர்கள், தள வர்த்தகர்கள், நிபுணர்கள் ஆகியோரின் சிலருரிமை நிலை; பங்கு விலைகளின் போக்கில் தாறுமாறான தளம்பல்கள்; விலை மாற்றங்களுக்கு இசைவாக வழங்கல் இடம்பெறாத நிலை; முகாமை, நிதிகளின் மூலமொன்றாக சந்தையை தவிர்க்கும் முயற்சிகள் போன்றன உலகின் மிக செயலூக்கமுள்ள பங்குச் சந்தையின் ஒதுக்குப் பணிகள் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளன.'' இலங்கை பங்குச் சந்தையின் தற்போதைய நிலை இந்த கூற்றுக்கு விதிவிலக்கானதாக தெரியவில்லை.

இலங்கையில் பங்குச் சந்தையின் அபிவிருத்தி இரு பிரச்சினைகளினால் சந்தைக்கான பங்கு வழங்கலில் இன்னலுற்றிருக்கிறது. காணப்படும் வரையறைகளும், தகவல் படிமுறையின் குறைபாடுகள் என்பனவே இவை. இலங்கையில் உள்ள பொதுக் கம்பனிகள், ஆரம்ப ஊக்குவிப்பாளர்கள் 'கட்டுப்படுத்தும் அக்கறை'யை வைத்திருப்பதில் அதிகளவில் கவனஞ் செலுத்துகின்றன. அதனால் சந்தைக்கான பங்குகளின் விநியோகம் ஆகக் குறைந்த பட்ச மட்டத்திலேயே இடம்பெறுகிறது. இதன் விளைவாக ஒரு கம்பனியின் பங்குகளில் வியாபாரம் செய்யக்கூடிய பங்குகளின் விகிதம், வியாபாரம் செய்யப்படாத பங்குகளின் விகிதத்திலும் பார்க்க மிக குறைவாக இருக்கிறது. இது பல சந்தர்ப்பங்களில் விநியோகிக்கப்பட்ட மொத்த பங்குகளின் 10 சதவீதத்துக்கும் குறைவாக இருக்கிறது. உதாரணமாக, *1981* லிருந்து *1988* வரையுள்ள காலப்பிரிவில் இந்தக் கம்பனிகள் வெளியிட்ட மொத்தப் பங்குகளில் 2 சதவீதத்துக்கும் குறைவானவையே ஒவ்வொரு மாதமும் வியாபாரம் செய்யப்பட்டு வந்திருக்கின்றன. எந்த அளவுகோல்களின் படி பார்த்தாலும், இந்த விகிதம் மிகவும் குறைவானதாகும். சந்தையில் குறிப்பிட்ட ஒரு மாதத்தில் வியாபாரம் செய்யப்பட்ட ஒரு பங்கினை இரு முறை அல்லது பல முறை கணக்கில் எடுத்திருக்கக் கூடிய வாய்ப்பும் இருக்கிறது. இந்த வரையறுக்கப்பட்ட வழங்கல், ஒரு புறத்தில், சந்தையில் குறைந்தமட்ட விற்பனையை உருவாக்கியிருப்பதுடன் மறுபுறத்தில், பங்கு விலைகளை நிர்ணயிப்பதில் பங்குகளுக்கான கேள்வி ஒரு முக்கியமான பங்கினை வகிக்க வேண்டியிருக்கிறது.

உரிய காலத்தில், சுதந்திரமாக தகவல்கள் கிடைக்கக் கூடியதாக இருப்பது பங்குச்சந்தையின் திறமையான செயற்பாட்டுக்கு அவசியமாகும். ஆனால், இலங்கையின் பங்குச் சந்தையின் தகவல் உருவாக்க பொறியமைப்பு திருப்திகரமாக இயங்குவது போல தெரியவில்லை. இந்த சந்தையில் பங்கெடுப்பவர்கள் நாட்டின் பொதுவான பொருளாதார நிலையிலிருந்து, தனிப்பட்ட கம்பனிகளின் இயக்கம் குறித்த தகவல்கள் வரையில் பரந்துபட்ட தகவல்களை வேண்டி நிற்கின்றனர். நாட்டின் பொதுவான பொருளாதார நிலை விஷயத்தில், கடந்த கால பொருளாதார செயற்பாடு குறித்த தகவல்கள் பிரதானமாக இலங்கை மத்திய வங்கியினால் தொகுக்கப்படுகின்றன. அதன் பல்வேறு மாதாந்த, வருடாந்த அறிக்கைகள் இத்தகவல்களை வழங்கி வழங்கி வருகின்றன. நாடுகள் குறித்த அறிக்கைகளை தயார் செய்யும் வெளிநாட்டு முகவரங்களும் ஓரளவுக்கு இந்த தகவல்களை அளிக்கின்றன. எனினும், நாட்டின் வருங்கால பொருளாதார நிலைமைகள் குறித்த எதிர் கூறல் தகவல்கள் எதுவும் சந்தைக்கு கிடைப்பதில்லை. குறைந்த பட்சம் பிரதானமான பொருளியல் மாறிகளான பணவீக்க விகிதம், பண நிரம்பல் இலக்குகள், வளர்ச்சி விகிதம் போன்றன குறித்துக் கூட வருங்காலத்துக்கான தரவுகள் கிடைக்கக் கூடியதாக இல்லை. இத்தகைய தரவுகள் உள்ளக வழிகாட்டுதல்களுக்கென அதிகாரிகளால் தொகுக்கப்

அட்டவணை 10

ஆரம்ப பங்கு சந்தையில் புதிய பங்கு விநியோகம்

| முதலீடு | 1980 | 1981 | 1982 | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொறியியல் | 1 | 7 | 6 | 12 | 5 | 3 | 1 | 2 | 1 |
| ஹோட்டல்கள், பயணம் | 3 | 3 | 8 | 9 | 4 | 1 | – | – | – |
| நிதி, நிலம், பானங்கள் | – | 2 | 2 | 5 | 3 | 2 | 2 | 2 | 9 |
| உணவு | 1 | 1 | 1 | 5 | – | – | – | – | – |
| நானாவிதமானவை | – | – | 2 | 6 | 1 | – | 2 | 1 | – |
| மொத்தம் | 5 | 13 | 19 | 37 | 13 | 3 | 5 | 5 | 10 |

ஆதாரம்: இலங்கை மத்திய வங்கி

பட்ட போதிலும் அவை பொது மக்களுக்கு கிட்டுவதில்லை. வளர்ச்சி கண்ட மேற்கத்தைய நாடுகளில் இந்த வெற்றிடத்தை தனியார் ஆராய்ச்சி நிறுவனங்கள் நிறைவு செய்கின்றன. இந்த நிறுவனங்கள் சந்தைக்கு தேவைப்படும் பொருளாதார எதிர் கூறல்களை தயாரித்து ஒன்றில் குறைந்த செலவில் அல்லது செலவெதுவும் இன்றி வழங்கி வருகின்றன. எனினும், இலங்கையில் தனியார் நிறுவனங்களில் இதற்கான வசதிகளோ அல்லது இந்தச் சேவைகளை மேற்கொள்வதற்கு திறமை பெற்றிருக்கும் ஆளணியினரோ இல்லை.

கம்பனிகளின் செயற்பாடுகள் குறித்த தகவல் பிரச்சினை முன்னையதை விடவும் சிக்கலானதாகும். 1982 ம் வருட கம்பனிகள் சட்டம், கம்பனிகளின் வெளிப்படுத்தல் தேவைகளை விரிவாக விளக்கியிருக்கிறது. இலாபத்தன்மை, ஒதுக்குகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்று பல்வேறு பிரிவுகளிலும் இந்த வெளிப்படுத்துகைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். ஆனால், இந்த முக்கியமான தகவல்களை வெளியிடுவதில் காணப்படும் கால தாமதம் காரணமாக அந்த தகவல்கள் முதலீட்டாளர்களுக்கு பெறுமதியற்றவையாகி விடுகின்றன. ''ரூபா கம்பனிகளின் கைநூல்'' என்ற வெளியீட்டில் பொது கம்பனிகளின் இறுதிக்கணக்குகள் குறித்த விரிவான தகவல்கள் தொடர்ந்தும் வெளியிடப்பட்டு வருகின்றன. ஆனால், வெளியீடு தாமதமாக வருவதனால் இதன் பயன்பாடு பெருமளவுக்கு குறைந்து விடுகிறது. நாட்டில், பொருளாதார, வணிகத்துறைகளுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள ஏடுகளோ செய்திப் பத்திரிகைகளோ இல்லாத நிலை இந்நிலைமையை மேலும் மோசமாக்குகிறது.

இவ்விதம் தகவல்களை தோற்றுவிக்கும் பொறியமைப்பில் குறைபாடுகள் நிலவுவதன் காரணமாக, சந்தையில் பங்கு கொள்வோர் வாய்ப்பேச்சு மற்றும் அங்குமிங்குமாக பெற்ற தனிப்பட்ட தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில் விவேகமற்ற முறையில் செயற்பட்டு வருகின்றனர். இந்த நிலையில், சந்தையில் இயங்கும் ஒருவர், ஏனையோர் தன்னைவிட அதிகளவில் சந்தை பற்றி அறிந்திருக்கின்றனர் என்ற நம்பிக்கையில் செயற்படுகிறார். இதன் விளைவாக சந்தையில் ஒருவர் செய்வதைப் பார்த்து இன்னொருவர் தானும் அது போலவே செய்வது ஒரு பொது நிகழ்வாக இருக்கிறது. பங்குபற்றுவோரின் இத்தகைய நடவடிக்கைகளின் விளைவாக, சந்தையில் குறிப்பிட்ட ஒரு பங்கில் அல்லது ஒரு தொகுதி பங்கில் அனைவரும் கவனம் செலுத்தும் ஒரு நிலை உருவாகியுள்ளது. கேள்வியில் ஏற்படும் இந்த விவேகபூர்வமற்ற மாற்றங்களின் விளைவாக பங்கு விலைகளில் தீவிர மாற்றங்கள் ஏற்பட்டு, அதன் காரணமாக இந்த விலைகள், சில கம்பனிகளின் உள்ளக நிலைமைகளுக்கு உசிதமான மட்டத்திலும் பார்க்க உயர்வாக அல்லது குறைவாக அமைந்து விடுகின்றன.

இந்த குறைபாடுகளை கருத்தில் கொண்டு, பங்குச் சந்தையின் தகவல் அமைப்பில் முதலீடுகளைச் செய்வது மிக முக்கியமானதாகும். அப்படிச் செய்தால் மட்டுமே சந்தை, திறமையான முறையில் மூலவளங்களை ஒதுக்கக் கூடிய நிலையில் இருக்கும். தற்போதைய நிலை, சந்தையில் வளர்ச்சியை தடுத்து நிறுத்துவது மட்டுமன்றி பல முதலீட்டாளர்களை சந்தைக்கு அப்பாலும் வைத்திருக்கிறது. தகவல்கள் இல்லாதிருக்கும் நிலை, சில இலாபம் நாடும் பங்குபற்றுவோர் கம்பனிகளின் உள்ளக விவகாரங்கள் குறித்த பிரத்தியேக தகவல்களைப் பெறுவதற்காக பணம் கொடுக்க முன்வரும் ஒரு போக்கினை ஊக்குவித்து வருகிறது. இந்த நடைமுறை, இக் கம்பனிகளில் ஏற்கனவே முதலீடுகளைச் செய்திருப்பவர்களுக்கு குந்தகம் விளைவிப்பதாகும். இத்தகைய செயற்பாடுகள் அநேகமாக எல்லா நாடுகளிலும் பொதுச்சட்டத்தில் ஒரு குற்றமாக கருதப்பட்டு வந்த போதிலும், இந்த விதமாக வியாபார முறையில் கிடைக்கும் உயர் இலாபம் மற்றும் சட்டத்தில் காணப்படும் இடுக்குகள் என்பன காரணமாக இது பரவலாக இடம் பெற்று வருகிறது.

இலங்கையின் பிணைச் சந்தையில் வியாபாரம் செய்யப்படும் ஒரே உபகரணம் விலை கோரப்பட்ட கம்பனிகளின் சாதாரண பங்குகளாகும். ' கூட்டாண்மைகளின் முறிகளோ அல்லது அரசாங்க பிணைப்பத்திரங்களோ சந்தையில் பட்டியல் படுத்தப்படுவதும் இல்லை; வியாபாரம் செய்யப்படுவதும் இல்லை. இதன் விளைவாக, பொருளாதார அபிவிருத்திக்காக மூலவளங்களை திரட்டும் முயற்சியில் இலங்கையின் மூலதனச் சந்தையினால் பிரதான பங்கொன்றினை ஆற்ற முடியவில்லை. முதலீட்டாளர்களை கவரக்கூடிய பல்வேறு உபகரணங்கள் சந்தையில் காணப்படாமையினால் பங்குச் சந்தையின் செயற்பாடுகள் தாழ்ந்த மட்டத்திலேயே இடம் பெற்று வருகின்றன. ஒரு சில பங்குகளின் வெளியீட்டை மட்டுமே கொண்டிருந்த ஆரம்ப பங்குச்சந்தை 1980 ம் வருடத்திலிருந்து 1988 வரையுள்ள காலத்தில் அநேகமாக செயலற்றே இருந்து வந்துள்ளது. பொதுவாக ஒவ்வொரு பங்கு வெளியீட்டின் போதும் குறித்த காலப்பகுதிக்குள் அனைத்துப் பங்குகளும் செலுத்தப்பட்டு விடுவதுண்டு. 1988 ல் மட்டும் நாட்டில் நிலைமை சாதகமாக இல்லாதிருந்தமையால் 60 சதவீதம் மட்டுமே பங்குகள் செலுத்தப்பட்டிருந்தன. ஆனால், பங்குகள் மூலம் திரட்டப்பட்ட

தொகை மிகவும் குறைவான தாகவே இருந்தது. நகர்சார்ந்த குறிப்பிட்ட சிலருக்குள் மட்டும் இது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது

இரண்டாந்தர பங்குச் சந்தையின் செயற்பாட்டில் 1985 ம் ஆண்டிலிருந்து படிப்படியான ஒரு முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், சந்தையின் கூட்டு மொத்த செயலாற்றுகையை எந்த வகையிலும் திருப்திகரமானது என்று கருத முடியாது. வெளியிடப்பட்ட பங்குகளின் பெறுமதி 1985 - 1988 காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4 சதவீதமாக நிலையாக இருந்து வந்திருக்கிறது. அதே வேளையில், அக்காலப்பிரிவில் சந்தையில் வியாபாரம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1 சதவீதத்துக்கும் குறைவாகவே இருந்துள்ளது. சந்தையில் இடம்பெற்ற சொற்ப அளவிலான பங்கு வியாபாரம் அதன் சொந்த பாதக விளைவுகளையும் எடுத்து வந்துள்ளது. முதலாவது, பங்கு வியாபாரம் குறைவான இலாபம் தரும் ஒரு துறையாக இருந்தமையால், தரகர்கள் அதனை தமது பிரதான நடவடிக்கைப் பிரிவாக கொண்டு நடத்து வதற்கு ஊக்கம் பெறவில்லை. இரண்டாவதாக, கம்பனி பங்குகள், இலாபத்தன்மை மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தமையால் ஒரு சில பங்கு முதலீட்டாளர்களுக்கு மட்டுமே இந்த வியாபாரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனவே, சந்தையில் பங்குகளுக்கான கேள்வியையும், வழங்கலையும் அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசிய மாகும்.

சுருக்கம்

உற்பத்தி அலகுகளில் பயன்படுத்தப்படுவதற்காக சரியான நேரத்தில் திரட்டப்படும் மனித மற்றும் இயற்கை மூலவளங்கள் இரு பிரதான பங்குகளை வகிக்க வேண்டியுள்ளன. பொருளாதாரத்தின் நடப்பு உற்பத்தி மட்டங்களை பேணுதல்; மற்றும் மக்களது வாழ்க்கைத் தரங்களை உயர்த்தும் பொருட்டு உற்பத்தியின் எல்லைகளை விஸ்தரித்தல் என்பனவே அவை. எனினும், பல வளர்முக நாடுகளின் அனுபவம், வேலைவாய்ப்புகளையும், தொடர்ச்சியான அடிப்படையில் வெளியீட்டினையும் உயர்த்துவதற்கு தேவைப்படும் உயரளவிலான முதலீட்டு மட்டத்தை நிதிப்படுத்துவதற்கு உள்நாட்டு சேமிப்புக்கள் எந்தவிதத்திலும் போதியதாக இல்லை என்பதனை காட்டுகிறது. அதனால் இந்நாடுகளில் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியை நிரப்பும் விஷயத்தில் வெளிநாட்டு சேமிப்புக்கள் முக்கிய பங்கினை வகிக்க வேண்டியிருக்கின்றன.

அண்மைய தசாப்தங்களில் இலங்கையின் உள்நாட்டு சேமிப்பு மிகக்குறைந்த மட்டங்களில் நிலவி வந்தமையால், நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பேரளவிலான முதலீட்டுச் செலவினங்களை நிதிப்படுத்துவதற்காக பெருந்தொகையான வெளிநாட்டுச் சேமிப்புக்கள் தேவைப்பட்டன. நாட்டின் நிதிசார் சேமிப்புக்கள் கடந்த தசாப்தத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5 – 10 சதவீதத்துக்குள் நிலைத்திருந்தன. இவை மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்களின் சுமார் 50 சதவீதமாக இருந்துள்ளன. நாட்டில் இப்பொழுது காணப்படும் சார்புரீதியான வளர்ச்சி குன்றிய நிதிச்சந்தை நிலைமையே மொத்த சேமிப்புக்களில் நிதிசார் சேமிப்புக்களில் பங்கு குறைவான மட்டத்தில் இருப்பதற்கான காரணமாகும்.

இலங்கையில் வங்கி நிறுவனங்களினால் வழங்கப்படும் கடன்களில் பெருந்தொகையான கடன்களை முன்னுரிமைத்துறைகளுக்கு திசை திருப்புவதற்கு அதிகாரிகள் முயற்சிகளை மேற்கொண்டு வந்திருக்கிறார்கள். மீள்நிதி வசதிகளை அறிமுகப்படுத்துவதன் மூலமும் பெருமளவு கடன்களை முன்னுரிமைத் துறைகளுக்கு வழிப்படுத்தும் தேசிய கடன் திட்டத்தின் மூலமும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும், இந்நடைமுறைகள், வங்கித்துறையின் துறைவாரியான கடன் பகிர்வில் நல்ல மாற்றங்களை எடுத்துவரும் விஷயத்தில் பெற்றி காணவில்லை என்பதனை உண்மையான கடன் பாவனை மட்டங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

மூலதனச் சந்தை வளர்ச்சி குன்றிய நிலையில் இருப்பதே உள்நாட்டு மூலவளத்திரட்டல் எதிர்நோக்கும் கடுமையான பிரச்சினையாகும்.

---

( 26 ம் பக்கத் தொடர்ச்சி )

வோரும் உயர் ரக வெங்காயத்தையே விருப்புடன் தெரிவு செய்கிறார்கள்.

வெங்காய உற்பத்திப் பெருக்க முயற்சியில் சராசரி விளைச்சலை அதிகரிப்பது மிக முக்கியமாகும். ஏனெனில், எமது சராசரி விளைச்சல் உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்திலும் குறைவாகவே இருக்கிறது. இந்த துறையில் சராசரி விளைச்சலைப் பெருக்குவதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். நல்ல தரமான, உயர் விளைச்சல்தரும் விதையினங்களை அபிவிருத்தி செய்து வழங்குவதில் கூடிய கவனஞ் செலுத்தப்படுதல் அவசியம். உரப்பாவனை, தேவைப்படும் மட்டத்தில் மிகவும் குறைவாக இருந்து வருவதனால், உரவிலைகள் மற்றும் உற்பத்தியாளர்களின் வெங்காய விலைகள் என்பவற்றைக் கொண்ட நல்ல பொறிமுறையொன்றுக்கூடாக உரப்பாவனை ஊக்குவிக்கப்படுதல் வேண்டும்.

# சென்மதி நிலுவை

## கருத்து கோட்பாடு இலங்கை அனுபவம்

டப். ஹெட்டியாரச்சி

(3)

### கூட்டும்மாத்த போக்குகள்

இலங்கையின் சென்மதி நிலுவை நிலையைப் பொறுத்தவரையில், 1977-1982 காலத்தில் வர்த்தக நிலுவை தொடர்ச்சியாக (1981 ல் காணப்பட்ட சிறிதளவு மீட்சியைத்தவிர) சீர்குலைந்து போயிருக்கிறது. பணமாற்றல் பெறுவனவுகள் அதிகரித்த அள்வில் இடம் பெற்று வ்ந்தமையால் இந்த வர்த்தக பற்றாச்குறைசள் ஓரளவுக்கு நன்னிலையடைந்தன. இதன் உடன் விளைவாக, நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைகள் – வர்த்தக பற்றாக்குறைகளின் அதே போக்கினை பின்பற்றியதாக இருந்த போதிலும் - கணிசமான அளவுக்கு குறைந்த மட்டத்தில் இருந்தன. இந்தப் பற்றாக்குறைகள் முழுவதுமே அநேகமாக நீண்ட கால மூலதன உட்பாய்ச்சல்களைக் கொண்டு நிதிப்படுத்தப்பட்டன. இதன் விளைவாக, அடிப்படை நிலுவைகளில் சில வேளைகளில் சிறு மிகைகள் அல்லது ஓரளவு பற்றாக்குறைகள் காணப்பட்டன. ஆனால், 1980 - ம் வருடம் இதற்கு விதிவிலக்காக இருந்தது. அவ்வாண்டில், நீண்ட கால மூலதன உட்பாய்ச்சல்கள், நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையிலும் பார்க்க குறைந்த அளவிலேயே இடம் பெற்றன. இதனையடுத்து, இடைவெளியை நிரப்புவதற்காக கணிசமான அளவிலான குறுங்கால நிதி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இருந்தபோதிலும், பாரிய அளவிலான கூட்டுமொத்த பற்றாக்குறையொன்று உருவாகி வளர்ந்து வந்திருப்பதுடன், நாட்டின் சர்வதேச ஒதுக்குகளை பெற்றுக் கொள்வதனை இது அவசியப்படுத்தியிருக்கிறது.

### வர்த்தக நிலுவை

சென்மதி நிலுவைத் துறையில் 1977-1982 காலத்தில் இடம் பெற்ற மிக முக்கியமான மாற்றங்களில் ஒன்று வர்த்தக நிலுவையின் கடுமையான சீர்குலைவாகும். இது 1977 ல் சிறு அளவுக்கு சாதகமாக, 35 கோடி ரூபாவாக (2 கோடியே 90 இலட்சம் சி. எ. உ. யாக) இருந்து 1980ல் 1631.2 கோடி ரூபா (75.8 கோடி சி.எ.உ.) பற்றாக்குறை நிலையை அடைந்து, 1982ல் 2040.3 கோடி ரூபா (89 கோடி சி.எ.உ.) பற்றாக்குறையாக மேலும் சீர்குலைந்தது. இலங்கை ரூபா 1977ல் பெறுமதியிறக்கம் செய்யப்பட்டதும், பிரதான நாணயங்களுக்கெதிராக அது தொடர்ந்து பெறுமதியிறக்கம் கண்டு வந்ததும், வர்த்தக நிலுவைப் பற்றாக்குறையில் செங்குத்தாக ஏற்பட்ட அதிகரிப்புக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

செலாவணி விகித காரணியை நீக்கிவிட்டாலும் கூட, சி. எ. உ. நியதிகளில் வர்த்தக நிலுவை சீர்குலைந்து வந்திருப்பதனால் கணிசமான அளவு பற்றாக்குறை உருவாகி வந்துள்ளதை காண முடிகிறது. இந்த நிலைமை தோன்றுவதற்கு மூன்று முக்கிய காரணிகளை குறிப்பிட்டுக் காட்ட முடியும். முதலில், 1977 ன் பொருளாதார சீர்திருத்தங்கள், உலகின் ஏனைய பாகங்களிலிருந்து திரட்டப்படும் மூலவளங்களைக் கொண்டு நிதிப்படுத்தப்பட வேண்டியிருந்த துரித முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை வேண்டி நின்றன. இத்தகைய மூலவள உட்பாய்ச்சல்கள், சென்மதி நிலுவையில் வர்த்தக பற்றாக்குறையாகவும், பொருட்கள் மற்றும் சேவைகள் கணக்கின் பற்றாக்குறையாகவும் அவசியமாக பிரதிபலிக்க வேண்டும். இரண்டாவதாக, ஆய்வுக்குட்படுத்தப்படும் இக்காலப் பிரிவில், இறக்குமதி பொருட்களின் விலைகளில் செங்குத்தான அதிகரிப்புக்கள் ஏற்பட்டமையாலும், அதே வேளையில் இலங்கையின் பிரதான ஏற்றுமதிகள் எந்தவிதமான முன்னேற்றத்தையும் காட்டாததாலும் நாட்டின் வர்த்தக நியதிகளில் கடுமையான சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது. இதன் தேறிய விளைவாக, 1977-1982 காலத்தில் நாட்டின் வர்த்தக நியதிகளில் 64 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. மூன்றாவதாக, பல ஆண்டுகளாக கட்டுப்பாடுகளினால் அமுக்கப்பட்டிருந்த கேள்வியை திருப்தி செய்யும் வகையில் நாட்டுக்குள் அதிகரித்த இறக்குமதிப் பாய்ச்சல் ஏற்படும் என்பதனை தாராளமயமாக்கல் நடைமுறை எதிர்பார்த்தது. பணவியல், செலாவணி விகித மற்றும் தீர்வைக் கொள்கைகள் அனைத்தும் இறக்குமதிப் பாய்ச்சலை மிதப்படுத்தும் வகையில் நெறிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், இறக்குமதி செய்யப்பட்ட நீடித்து உழைக்கக்கூடிய நுகர்பொருட்களை வைத்திருப்பதில் காணப்பட்ட பொதுவான மோக அலைக்கு மத்தியில், இந்தக் கொள்கைகள் ஓரளவுக்கு மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

தாராளமய பொருளாதார கொள்கைகளின் அமுலாக்கல் மற்றும் விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் பின்னணியில், வர்த்தகப் பற்றாக்குறை ஓரளவுக்கு விரிவடையும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால், நாட்டின் வர்த்தக நிலுவையில்

தொடர்ச்சியாக வளர்ந்து வரும் பற்றாக்குறையானது பொருளாதார தளத்தில் கலக்கமூட்டும் ஒரு காரணியாக இருந்து வருகின்றது. அடுத்தடுத்து வந்த வருடங்களில் இப்பற்றாக்குறைகள் பாரிய மட்டத்தில் இடம் பெற்று வந்துள்ளன. இந்தப் பற்றாக்குறை, ஏற்றுமதிச் சம்பாத்தியங்களின் விகிதமாக 1980, 1981, 1982 ஆகிய வருடங்களில் முறையே 93 சதவீதம், 76 சதவீதம், 97 சதவீதம் என உயர் மட்டங்களில் இருந்து வந்திருக்கிறது. இவை மொத்த தேசிய உற்பத்தியில் முறையே 26, 20, 23 சதவீதங்களாக இருந்துள்ளன.

நாட்டின் இறக்குமதிச் செலவினம் செங்குத்தாக உயந்து சென்றமையே வர்த்தக நிலுவை சீர்குலைந்து வந்தமைக்கான பிரதான காரணமாக இருந்தது என்பது ஏற்கனவே கட்டிக்காட்டப்பட்டிருந்தது. இறக்குமதிச் செலவு 1977ல் 629 கோடி ரூபாவாக (62.2 கோடி சி. எ. உ.) இருந்து 1982ல் 4150.1 கோடி ரூபாவாக (180.8 கோடி சி.எ.உ.) அதிகரித்தது. சி. எ. உ. நியதிகளில், ஆறு வருட காலத்தில் வருடாந்தம் 33 சதவீத வளர்ச்சி ஏற்பட்டு வந்திருப்பதனை காண முடிகின்றது. மறுபுறத்தில், ஏற்றுமதிகள் அதே அளவிலான வேகப் போக்கினை காட்டவில்லை. ஏற்றுமதிச் சம்பாத்தியம் 1977ல் 664 கோடி ரூபாவாக (65.1 கோடி சி.எ.உ.) இருந்து 1932ல் 2109.8 கோடி ரூபாவாக (91.8 சி.எ.உ.) அதிகரித்திருந்தது. இக்காலப்பிரிவில், சி.எ.உ. நியதிகளில் ஏற்றுமதிகளின் சராசரி வருடாந்த வளர்ச்சி விகிதம் 7 சதவீதமாக மட்டுமே இருந்திருக்கிறது. விரைவுபடுத்தப்பட்ட முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் பெரும் பகுதி கடனாக பெறப்பட்ட மூலவளங்களிலிருந்தே நிதிப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த நிலையில், ஏற்றுமதித்துறை 1977ன் சீர்திருத்தங்களின் பின்னர் குறிப்பிட்டுக் கூறக்கூடிய சாதனை எதனையும் நிகழ்த்த தவறியிருப்பது, சென்மதி நிலுவை விஷயத்தில், கொள்கை வகுப்போருக்கு அதிக கவலையை அளித்திருக்கிறது.

## நடைமுறைக் கணக்கு நிலுவை

இலங்கையின் சென்மதி நிலுவையில் .நடைமுறைக் கணக்கு நிலுவை, 1977-1982 காலத்தில், வர்த்த நிலுவை காட்டியதேஅதே சாதகமற்ற போக்கினையே காட்டி வந்திருக்கிறது. நடைமுறைக் கணக்கு நிலுவை 1977ல் 126.6 கோடி ரூபா (11.7 கோடி சி.எ.உ.) மிகை நிலையில் இருந்து 1980ல் 1091.2 கோடி ரூபா (50.7 கோடி சி.எ.உ.) பற்றாக்குறையாகவும் 1982ல் 1190.6 கோடி ரூபா (48.3 சி.எ.உ.) பற்றாக்குறையாகவும் உயர்ந்திருந்தது. எனினும், நடைமுறைக் கணக்கு நிலுவை வர்த்தக நிலுவைப்போக்கிலும் பார்க்க ஓரளவுக்கு விருத்தியினைக்காட்டியிருக்கிறது. தனியார் மற்றும் அலுவல் சார் மாற்றல்கள் மூலமான பெறுவனவுகள் அதிகரித்திருந்ததன் காரணத்தினாலேயே, வர்த்தக கணக்கிலும் பார்க்க நடைமுறைக்கணக்கில் முன்னேற்றம் காணப்பட்டமைக்கான முழு முதல் காரணமாகும். மறுபுறத்தில், ஆய்வுக்குட்படுத்தப்படும் இக்காலப்பிரிவில் நடைமுறைக் கணக்கின் சேவைகள்துறை கணிசமான அளவு விகிதங்களில் வளர்ச்சி கண்டிருந்த போதிலும் பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் செங்குத்தான மேல் நோக்கிய அதிகரிப்பொன்றை காட்டியிருப்பதால் சென்மதி நிலுவைக்கு தெளிவான தேறிய நிவாரணங்கள் எதுவும் கிட்டவில்லை. சேவைகள் தொடர்பான பெறுவனவுகள் 1977ல் 92.3 கோடி ரூபாவிலிருந்து (8.9 கோடி சி. எ. உ.) 1982ல் 696.2 கோடி ரூபாவாக (30.4 கோடி சி.எ.உ.) அதிகரித்திருந்தன. அதே நேரத்தில் சேவைத்துறை தொடர்பான கொடுப்பனவுகள் 1977ல் 61.9 கோடி ரூபாவிலிருந்து (6 கோடி சி.எ.உ.) 1982ல் 727.6 கோடி ரூபாவாக (31.7 கோடி சி.எ.உ.) உயர்ந்திருந்தன. இதன் விளைவாக, 1981 வரையில் ஓரளவுக்கு சாதக நிலையில் இருந்த சேவைகள் கணக்கின் தேறிய நிலுவை 1982ல் எதிர்மறையாக மாறி 31.4 கோடி ரூபா (1.3 கோடி சி. எ. உ.) பற்றாக்குறையொன்றை காட்டியது. சேவைகள் கணக்கின் இந்த நிலை மாற்றத்துக்கான பிரதான காரணம், வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட செங்குத்தான அதிகரிப்புக்களாகும். இந்த வட்டிக் கொடுப்பனவுகள் 1977ல் வெறுமனே 24.5 கோடி ரூபாவிலிருந்து (2.3 கோடி சி.எ.உ.) 1982ல் 265.3 கோடி ரூபாவாக (11.6 கோடி சி.எ.உ.) உயர்ந்திருந்தன.

சேவைத்துறையின் செயலாற்றுகைக்கு மாறாக, ஆய்வுக்குட்படுத்தப்படும் இக்காலப்பிரிவில் உறுதியான ஒரு போக்கினைக் காட்டி, அதன் மூலம் நாட்டின் சென்மதி நிலுவைக்கு கணிசமான அளவுக்கு நிவாரணம் வழங்கிய ஒரு துறை மாற்றல்களாகும். தனியார் மாற்றல்களிலும் அதேபோல அலுவல்சார் மாற்றல்களிலும் பொருபளவுக்கு முன்னேற்றம் காணப்பட்டது. தேறிய தனியார் மாற்றல்கள் 1977ல் 12.2 கோடி ரூபாவிலிருந்து (1.2 கோடி சி. எ. உ.) 1982ல் 549.4 கோடி ரூபாவாக (24 கோடி சி. எ. உ.) அதிகரித்துக் காணப்பட்டன. இதில் பெரும்பகுதி வெளிநாடுகளில் –குறிப்பாக மேற்காசியாவிலும் மத்திய கிழக்கிலும் – தொழில் புரிந்த இலங்கையர்கள் அனுப்பிய பணமாகும். இதே போன்று 1977ல் 49 கோடி ரூபா (4.7 கோடி சி. எ. உ.) மட்டத்திலிருந்த அலுவல்சார் மாற்றல்கள் 1982ல் 337.9 கோடி ரூபாவாக

(14.7 கோடி சி. எ. உ.) அதிகரித்தன. நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்துக்கு வெளிநாட்டு மூலவளங்களைத் திரட்டும் அரசாங்கத்தின் முயற்சிகளே இவ்விதம் அலுவல்சார் மாற்றங்கள் விரிவடைந்தமைக்கான முக்கிய காரணமாகும். இந்த அபிவிருத்திகளின் விளைவாக இக்காலப்பிரிவில் தேறிய மாற்றல் பெறுவனவுகள் செங்குத்தாக உயர்ந்து சென்றன. 1977 ல 61.2 கோடி ரூபாவிலிருந்து (8.9 கோடி சி. எ. உ.) 1982 ல் 887.3 கோடி ரூபாவாக (38.7 கோடி சி. எ. உ.) இவை உயர்ந்தன. மாற்றல்கள் துறையில் இவ்விதம் இடம்பெற்ற முன்னேற்றங்கள் இல்லாதிருந்தால் நடைமுறைக் கணக்கு, பேரளவு பற்றாக்குறைகளை பதிவு செய்து அதன் மூலம் நாட்டின் சென்மதி நிலுவைக்கு கடுமையான நெருக்குதல்களை கொடுத்திருக்க முடியும்.

எவ்வாறெனினும், நடைமுறைக் கணக்கு எந்தளவுக்கு பற்றாக்குறைகளை காட்டுகிறதோ, பற்றாக்குறைகளை நிதிப்படுத்துவதற்காக அந்த அளவுக்கு மூலதனக்கணக்கில் மூலவளங்கள் கண்டறியப்படுதல் வேண்டும்.

**மூலதன கணக்கு**

இலங்கையின் சென்மதி நிலுவையில் நடைமுறைக் கணக்கு 1977 ன் பின்னர் சாதகமற்ற போக்குகளை காட்டியிருந்தால், மூலதனக் கணக்கில் காணப்பட்ட சாதகமான நிலைமைகளினால், மேலே கூறப்பட்ட சாதகமற்ற போக்குகள் சமனப்படுத்தப்பட்டன. நாட்டின் அபிவிருத்தி முயற்சிக்கு வெளிநாட்டு மூலதனத்தை திரட்டுவதில் கிட்டிய வெற்றியே இதற்கான காரணமாகும். வளர்ந்து வந்த நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும், சென்மதி நிலுவையின் அடிப்படை நிலுவை 1977 – 1979 மூன்றாண்டு காலத்தில் ஒரு சமநிலைக்கு வெகு அண்மித்ததாக இருந்திருக்கிறது. இதுவும், குறுங்கால மூலதனப் பாய்ச்சல்களும் சேர்ந்து மூன்று வருடங்களில் கூட்டுமொத்த சென்மதி நிலுவை நிலை உறுதியாக நிற்பதற்கு வகை செய்தது. அத்துடன் இது கணிசமான மிகைகளை பதிவு செய்ததுடன், அதன் மூலம் சர்வதேச ஒதுக்குகளுக்கு மேலும் சேர்க்கைகளை சாத்தியமாக்கியது. 1977 நவம்பர் முடிவில் 557.4 கோடி ரூபாவாக (30.2 கோடி சி. எ.உ.) இருந்த இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1979 முடிவில் 965.2 கோடி ரூபாவாக (47.5 கோடி சி.எ.உ.) உயர்ந்திருந்தன. இவையனைத்தும், தாராளமயமாக்கல் இடம்பெற்ற முதல் இரண்டு வருடங்களில் இலங்கையின் சென்மதி நிலுவை, அடிப்படையில் உறுதியாக இருந்தது என்பதனையே காட்டுகின்றன.

ஆனால், 1980 ல் நடைமுறைக் கணக்கு அதுவரைகால ஆக உயர்ந்த மட்ட பற்றாக்குறையான 1091.2 கோடி ரூபா (50.7 கோடி சி. எ. உ.) பற்றாக்குறைய பதிவு செய்த போது நிலைமை மாற்றமடையத் தொடங்கியது. மூலதன உட்பாய்ச்சல் இந்தப் பற்றாக்குறையிலும் பார்க்க வெகுவாக குறைந்திருந்ததனால் நாடு அதன் செ. நி. யின் அடிப்படை நிலுவையில் 693 கோடி ருபா (32.2 கோடி சி. எ. உ.) சாதனைமட்ட பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டி நேரிட்டது. அடிப்படை நிலுவையில் இத்தகைய பாரிய மட்டத்தில் உருவான பற்றாக்குறையானது, கலக்கமூட்டும் ஓர் அம்சம் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அத்துடன் அதனை நிதிப்படுத்துவதற்காக, வர்த்தக விகிதங்களில் பேரளவு குறுங்கால மூலதனங்களை திரட்ட வேண்டிய தேவையை அது அவசியப்படுத்திற்று. வழங்குனர் கடன்களை மற்றும் குறுங்கால கடன்கள் என்பவற்றின் வடிவில் மூலவளத் திரட்டல் இடம்பெற்ற போதிலும் செ. நி. 1980 ல் 296.7 கோடி ரூபா (16.6 கோடி சி.எ.உ.) கூட்டு மொத்த பற்றாக்குறையை பதிவு செய்தது. நாட்டின் சர்வதேச ஒதுக்குகளில் இதே அளவிலான வீழ்ச்சி ஏற்படுவதற்கு இது வழி கோலியது. நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை மற்றும் அடிப்படை நிலுவை, கூட்டுமொத்தப் பற்றாக்குறை என்பன சற்று குறைந்த அளவில் காணப்பட்டது தவிர 1981, 1982 ஆகிய வருடங்களிலும் செ. நி. நிலை 1980 ம் வருட நிலையை ஒத்தாகவே பெருமளவுக்கு காணப்பட்டது. 1981, 1982 வருடங்களில் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை முறையே 49.8 கோடி ரூபாவாகவும் (38.1 கோடி சி. எ. உ.) 1184.4 கோடி ரூபாவாகவும் (51.5 கோடி சி. எ. உ.) இருக்க, அடிப்படை நிலுவைகளில் முறையே 141.3 கோடி ரூபாவாகவும் (6.2 கோடி சி. எ. உ.) 103.8 கோடி ரூபாவாகவும் (4.5 கோடி சி. எ. உ.) பற்றாக்குறைகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. அதே வேளையில், கூட்டுமொத்த நிலுவை முறையே 40.6 கோடி ரூபா (2.6 கோடி சி. எ. உ.) 100.9 கோடி ரூபா (1.8 கோடி சி. எ. உ.) பற்றாக்குறைகளை காட்டியது. கூட்டுமொத்த நிலுவையில் பற்றாக்குறைகள் காணப்பட்ட போதிலும் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கிடைத்த மூலவளங்கள் காரணமாக சர்வதேச ஒதுக்குகள் ஒரு சிறு அதிகரிப்பினைக் காட்டின. கணிசமான பரிமாணங்களைக் கொண்ட குறுங்கால மூலவளங்களைத் திரட்டும் நாட்டின் ஆற்றல் காரணமாக இந்த ஒரு வருட காலத்திலும் மிக மோசமான செ. நி. நிலையினை தவிர்க்கக் கூடியதாக இருந்தது என்பதனையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

(தொடரும்)

தலைமை தபால் நிலையத்தில் செய்திப்பத்திரிகையாக பதிவு பெற்றது.

அவர்கள் தோல்வி கண்டுவிட்டார்கள் என்று சொல்ல முடியாது. நியாயமான வரலாற்றுரீதியான மாற்று வழிகள் இருந்தன என்பதனையே 'தோல்வி' என்ற பதம் காட்டுகிறது.

—இம்மானுவல் வலஸ்ரீன் —

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பிரிவு வெளியீடு

பிரதி விலை: ரூ. 10/-
வருட சந்தா: ரூ. 120/-

உரிய முறையில் 'பொருளியல் நோக்கின்' பெயரை குறிப்பிட்டு, அதில் இடம்பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப்பிரசுரிக்கவோ முடியும்.

Printed by Sumathi Publishers, No. 445/1, Sirimavo Bandaranayake Mawatha, Colombo 14.